REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2022 ஒக்டோபர் 6 வியாழக்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 236 | Thursday 06, October, 2022 | 16பக்கங்கள் | 40/-

பல்கலைக்கழகங்களில் பகிடிவதைக்கு அப்பாலும் பல்வேறு கொடுமைகள்

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த குற்றச்சாட்டு

மாணவர், விரிவுரையாளர்கள், வேந்தர்களின் உரிமைகளை பாதுகாப்பது அரசின் பொறுப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

பல்கலைக்கழகங்களில் பகிடிவதைக்கு அப்பாற்பட்ட கொடுமைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. பல்கலைக்கழக மாணவர்களினதும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் வேந்தர்களின் உரிமையைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும். அதற்கான நடவடிக்கை 06

தரகுப் பண சிக்கல் முடிவுக்கு;

எரிபொருள் விநியோகம் நேற்று முதல் வழமைக்கு

நேற்று (05) முதல் எரிபொருள் விநியோகம் வழமைக்கு திரும்பியுள்ளதாக பெற்றோலிய விநியோகஸ்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தரகுப் பணம் தொடர்பான சிக்கலுக்கு சம்பந்தப்பட்ட அமைச்சரினால் நேற்று முன்தினம் (04) 06

ரயில்வே காணிகளை சட்டவிரோதமாக

உபயோகிப்போருக்கு எதிராக விரைவில் சட்ட நடவடிக்கை

நீண்ட காலம் குடியிருப்போர் தொடர்பில் மாற்றுத் திட்டம் -அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

ரயில்வே திணைக்களத்துக்கு சொந்தமான காணிகளை சட்டபூர்வமற்ற ரீதியில் உபயோகிப்போர் மற்றும் அக்காணிகளில் குடியிருப்போர் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானித்துள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இத்தகைய சட்டபூர்வமற்ற செயற்பாடுகள் மூலம் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய பெருமளவு வருமானம் இல்லாமல் போயுள்ளதுடன் ரயில்வே துறை அபிவிருத்திக்கும் இது பெரும் பாதிப்பாக 06

நாட்டின் உள் விவகாரங்களில் ஐ.நா.தேவையற்ற தலையீடு

ஐ.நாவில் மேற்குலக நாடுகள் எத்தகைய அழுத்தங்களை பிரயோகித்தாலும் நாட்டின் இறைமை மற்றும் அரசியலமைப்பை எந்த வகையிலும் காட்டிக்கொடுக்க மாட்டோமெனவும் உறுதிபடத் தெரிவிப்பு

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி பகிரங்க குற்றச்சாட்டு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை, இலங்கையின் உள்விவகாரங்களில் தேவையில்லாமல் தலையிடுவதாக வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி நேற்று தெரிவித்தார்..

இலங்கையில் பொருளாதார குற்றங்களுக்கு யாரேனும் பொறுப்புக் கூறினால் அவர்கள் மீது நாட்டின் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர்களின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருளாதார குற்றங்கள் என்ற சொல்லை இலங்கை ஏற்றுக்கொள்ளவில்லையென்றும், 06

22ஆவது திருத்தம் தொடர்பாக

எதிரணியின் நிலைப்பாட்டை ஆராய்ந்து அறிவிக்க பிரதமருக்கு ஜனாதிபதி அறிவிப்பு

22 ஆவது அரசியலமைப்புத் திருத்த சட்டமூலம் தொடர்பில் எதிர்க்கட்சிகளின் இறுதி நிலைப்பாடு குறித்து ஆராய்ந்து விரைவில் தமக்கு அறிவிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (05) பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். 22வது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் பல சந்தர்ப்பங்களில் முரண்பாடான நிலைப்பாட்டை எடுத்து வரும் நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 06

முல்லைத்தீவு கடற்றொழிலாளரின் நியாயமான கோரிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும்

12ஆம் திகதி அமைச்சர் டக்ளஸ் நேரடியாகவும் விஜயம்

முல்லைத்தீவு நகரில் கடற்றொழிலாளர்களின் ஆர்ப்பாட்டம் தொடர்பிலும் அவர்களின் நியாயமான கோரிக்கைகள் தொடர்பிலும் ஆராய்வதற்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரைக்கமைய விசேட குழுவொன்று இன்று முல்லைத்தீவுக்கு விஜயம் செய்கிறது. அத்துடன் அடுத்து வரும் 12 ஆம் திகதி அமைச்சர் டக்ளஸ் நேரடியாக முல்லைத்தீவுக்கு கள விஜயமும் மேற்கொள்ளவுள்ளார். 06

லிட்ரோ Gas விலைகள் நேற்று முதல் குறைப்பு

12.5 கிலோ சிலிண்டர் 271 ரூபாவால் குறைந்தது

லிட்ரோ சமையல் எரிவாயுவின் 12.5 கிலோ சிலிண்டரின் விலை 271 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் நேற்று (5) தெரிவித்துள்ளார்.

இந்த விலை குறைப்பின் மூலம் 05 கிலோ 06

'கோபா' தலைமைப் பதவி SJB கபீர் ஹாசிம் MP க்கு

ஜனாதிபதி, பிரதமர் அறிவுறுத்தலில் இணக்கம்

லோரன்ஸ் செல்வநாயகம்

அரசாங்க கணக்குகள் தொடர்பான (கோபா) குழுவின் தலைவராக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் வாக்கெடுப்பின்றி ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். அரசாங்க 06

தேசிய பேரவையிலிருந்து ஜீவன் தொண்டமான் விலகல்

ராமேஷ்வரன், பாட்டலியை நியமிக்க சிபார்சு

அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டுள்ள தேசிய சபையின் உறுப்பினர் பதவியிலிருந்து இ.தொ. காவின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் எம். பி 06

எரிபொருளை பெற்றுக்கொள்ள

சுற்றுலா பயணிகளுக்கு விசேட அனுமதிப்பத்திரம்

நேற்று முதல் திட்டம் ஆரம்பம் - அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ

லோரன்ஸ் செல்வநாயகம்

சுற்றுலாத் துறையை முன்னேற்றுவது தொடர்பில் கருத்துக்களை முன்வைப்போரே மறுபுறம் அதனை சீர்குலைக்கும் நடவடிக்கைகளை 06

வீடொன்றுக்குள் சிக்கிய சிறுத்தை பாதுகாப்பாக மீப்பு

பத்தனை பகுதியில் 05 மணி நேர போராட்டம்

ஹற்றன் சுழற்சி நிருபர்

கொட்டகலை, திம்புள்ள – பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மவுண்ட்வேர்ணன் தோட்டத்தின் வட்டக்கான் பிரிவிலுள்ள 06

நேற்று முதல் தொலைபேசி கட்டணங்கள் அதிகரிப்பு

புதிய கட்டண விபரங்கள் இணையத் தளங்களில்

தொலைபேசி கட்டணங்கள் நேற்று (5) நள்ளிரவு முதல் அதிகரிப்பதற்கு அனைத்து தொலைதொடர்பு சேவை வழங்கல் நிறுவனங்களும் தீர்மானித்துள்ளன. 06

அநுராதபுரத்துக்கு விசேட சொகுசு ரயில் சேவை 08ஆம் திகதி ஆரம்பம்

07

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்: மனுக்களின் விசாரணை நிறைவு

வழக்கின் தீர்ப்பு வெளியிடுவது ஒத்திவைப்பு

03

அரசியலில் பிரவேசிக்கும் திட்டம் எதுவும் இல்லை

ரொஷான் மஹாநாம தெரிவிப்பு

அரசியலில் பிரவேசிக்கும் திட்டம் இல்லையென இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் ரொஷான் மஹாநாம தெரிவித்துள்ளார்.

ஆங்கில 06

சர்வதேச செய்திகள்

மேற்குலகின் கடந்த காலம் குறித்து புட்டின் குற்றச்சாட்டு

"உண்மை, சுதந்திரம் மற்றும் நீதிப் பெறுமானங்களுக்கு எதிராக மேற்குலகம் இந்தியா போன்ற நாடுகளில் கொள்ளையில் ஈடுபட்டதாக" ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தெரிவித்துள்ளார்.

கிரம்லினின் செயின்ட் ஜோர்ஜ் மண்டபத்தில் கடந்த வாரம் இடம் பெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும்போது புட்டின் இந்தக் குற்றச்சாட்டை சுமத்தினார். "மத்திய காலத்தில் மேற்குலகம் தனது காலனித்துவ கொள்கையை ஆரம்பித்து அமெரிக்காவில் செவ்விந்தியர்களை இனப்படுகொலை செய்து, அடிமை வர்த்தகத்தில் ஈடுபட்டு, இந்தியா, ஆபிரிக்காவில் கொள்ளையில் ஈடுபட்டதோடு சீனாவுக்கு எதிரான இங்கிலாந்து மற்றும் பிரான்ஸின் போர்கள் ஒட்டுமொத்த நாட்டையும் போதைப்பொருளுக்கு ஆட்படுத்தி ஒட்டுமொத்த இனக் குழுக்களையும் அழித்தது" என்று புட்டின் குறிப்பிட்டார்.

இலங்கை ஊடகவியலாளர்கள் இந்தியாவுக்கு நட்புறவு பயணம்

இந்தியாவுக்கு நட்புறவு விஜயம் ஒன்றை மேற்கொண்ட சீஷெல் மற்றும் இலங்கை ஊடகவியலாளர்கள் இந்திய வெளியுறவுச் செயலாளர் வினய் குவாத்திராவை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தியுள்ளனர்.

இந்திய பெருங்கடல் பிராந்தியத்தின் அண்டை நாடுகளுடனான நெருக்கமான உறவுக்கான மற்றொரு படியாக இந்த சந்திப்பு இடம்பெற்றது என்று இந்திய வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் அரிந்தம் பக்சி தனது ட்விட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா மற்றும் சீஷெல் ஊடகவியலாளர்கள் ஒருவார நட்புறவு பயணமாகவே இந்தியா சென்றுள்ளனர்.

பாதுகாப்புச் சபை: நிரந்தர அங்கம் வகிக்க இந்தியா, பிரேசில் முயற்சி

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் நிரந்தர அங்கத்துவத்திற்கான வேட்பு மனுவைப் பெற்றுக்கொள்வதற்காக இந்தியாவும் பிரேசிலும் இணைந்து செயற்படுவது குறித்து கவனம் செலுத்தியுள்ளன.

இதனடிப்படையில் இவ்வேட்பு மனுவுக்காக இரு நாடுகளும் ஒருவரை ஒருவர் வலுவாக ஆதரிப்பது குறித்து கலந்துரையாடியுள்ளதாக இந்தியாவுக்கான பிரேசில் நாட்டுத் தூதர் டோலாகோ தெரிவித்துள்ளார்.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தர அங்கத்துவத்தை ஐந்து நாடுகள் கொண்டுள்ளன. அவற்றில் நான்கு நாடுகள் இந்தியாவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

3 விஞ்ஞானிகளுக்கு இரசாயனவியல் நோபல்

இந்த ஆண்டின் இரசாயனவியலுக்கான நோபல் பரிசு மூன்று விஞ்ஞானிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் கிளிக் கெமிஸ்ட்ரி மற்றும் பயோ ஆர்த்தோகனல் கெமிஸ்ட்ரியின் வளர்ச்சிக்காக இந்த பரிசை வென்றுள்ளனர்.

2022ஆம் ஆண்டின் நோபல் பரிசுகள் அனைத்தும் ஒக்டோபர் 3ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை அறிவிக்கப்பட்டு வருகின்றது. இதன்படி நேற்று இரசாயனவியலுக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது. இதில் அமெரிக்காவின் பேரி ஷார்ப்லஸ், கேரோலின் பெர்டோசி, டென்மார்க்கின் மார்டென் மெல்டாலிக் விருது வெல்கின்றனர்.

குறிப்பாக பேரி ஷார்ப்லெஸ் 2000 ஆம் ஆண்டில், கிளிக் கெமிஸ்ட்ரி என்ற கருத்தை உருவாக்கினார், இது எளிமையான மற்றும் நம்பகமான இரசாயனவியலின் ஒரு வடிவமாகும், அங்கு எதிர்வினைகள் விரைவாக நிகழ்கின்ற மற்றும் தேவையற்ற துணை தயாரிப்புகள் தவிர்க்கப்படுகின்றன.

க்ளிக் கெமிஸ்ட்ரி மற்றும் பயோ ஆர்த்தோகனல் எதிர்வினைகள் இரசாயனவியல் செயல்பாட்டுவாதத்தின் சகாப்தத்திற்கு கொண்டு சென்றுள்ளன. இது மனித குலத்திற்கு மிகப் பெரிய பலனைத் தருகிறது.

இன்று (06) இலக்கியத்திற்கான நோபல் பரிசு அறிவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மின் துண்டிப்பு: இருளில் முழ்கியது பங்களாதேஷ்

பங்களாதேஷில் தேசிய மின் கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக நாடு முழுவதும் மின்சார துண்டிப்பு ஏற்பட்டு நாட்டின் பெரும்பகுதி பல மணி நேரம் இருளில் மூழ்கியது.

கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் துண்டிக்கப்பட்ட மின்சாரம் ஏழு மணி நேரத்தின் பின் இரவிலேயே மீண்டும் வந்தது. மின்சார கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறுக்கான காரணம் உடன் உறுதி செய்யப்படவில்லை.

கேள்வி மற்றும் விநியோகம் அதிகரிக்கும்போது இவ்வாறு கோளாறு ஏற்படுவது தொடர்ச்சியாக இடம் பெற்று வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் குறிப்பிடுகின்றன. இதனால் தலைநகர் டாக்காவில் உள்ள பெரும்பாலான மிகப்பெரிய கடைகள் முன்கூட்டியே மூடப்பட்டன. பல இடங்களிலும் மின்பிறப்பாக்கிகளை இயக்குவதற்கு டீசல் பெற பலரும் எரிபொருள் நிலையங்களில் குவிந்தனர்.

இந்தியாவில் பஸ் பள்ளத்தில் சரிந்து விபத்து: 25 பேர் பலி

வட இந்திய மாநிலமான உத்தர காண்டில் பஸ் வண்டி ஒன்று பள்ளத்தில் விழுந்ததில் குறைந்தது 25 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை (04) இரவு பூர் கர்ஹால் மாவட்டத்தில் வீதியை விட்டு விலகி பள்ளத்தில் விழுந்த பஸ்ஸினுள் குறைந்தது 40 பேர் இருந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பஸ்ஸில் திருமண வைபவம் ஒன்றில் பங்கேற்கும் குழு ஒன்று இருந்துள்ளது.

விபத்தைத் தொடர்ந்து இரவு முழுவதும் மீட்பு நடவடிக்கை இடம் பெற்றது. புதன்கிழமை காலையிலும் கூட மீட்பு நடவடிக்கைகள் தொடர்ந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விபத்துக்கான காரணம் இன்னும் உறுதி செய்யப்படாத நிலையில் மாநில அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

வீதிப் பாதுகாப்பு இந்தியாவில் மோசமாக இருப்பதோடு மோசமான முறையில் வாகனத்தை ஓட்டுவது மற்றும் சிதைவடைந்த வீதிகளால் ஏற்படும் விபத்துகளில் ஒவ்வொரு ஆண்டும் அங்கு 100,000க்கும் அதிகமானோர் உயிரிழக்கின்றனர்.

உக்ரைனுக்கு மேலும் 625 மில். டொலர் அயுதங்களை வழங்குகிறது அமெரிக்கா

மேற்குலகுடனான நேரடி போர் பற்றி ரஷ்யா எச்சரிக்கை

உக்ரைனுக்கு அமெரிக்க மேலும் 625 மில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்களை வழங்கவுள்ளது. இதில் உயர் நடமாடும் பீரங்கி ரொக்கெட் அமைப்பும் உள்ளடங்குகிறது. இது போரை மேலும் தீவிரப்படுத்தும் என்று ரஷ்யா எச்சரித்துள்ளது.

உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்யுடன் கடந்த செவ்வாயன்று (04) அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தொலைபேசியில் உரையாற்றியுள்ளார். கடந்த பெப்ரவரி 24 ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்த நிலையில் ரஷ்ய ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி இருக்கும் நாட்டின் தெற்கு மற்றும் கிழக்கு பகுதிகளை மீட்க உக்ரைன் தொடர்ந்து போராடி வரும் நிலையிலேயே இந்த உரையாடல் இடம் பெற்றுள்ளது.

இரு போர் முனைகளில் தமது படை வேகமாக முன்னேறி பல டஜன் கிராமங்களை மீட்டிருப்பதாக செலென்ஸ் தெரிவித்துள்ளார். இந்நிலையில் துணை ஜனாதிபதி கமலா ஹரிஸுடன் இணைந்து இந்த தொலைபேசி அழைப்பை மேற்கொண்ட பைடன், உக்ரைனுக்கு தொடர்ந்து ஆதரவு அளிப்பதாக உறுதி அளித்துள்ளார்.

ரஷ்யா உக்ரைனின் நான்கு பகுதிகளை தனது ஆட்புலத்திற்குள் இணைக்கும் அறிப்பை வெளியிட்ட பின்னர் உக்ரைனுக்கான அமெரிக்காவின் முதல் இராணுவ உதவியாக இது உள்ளது.

அமெரிக்க இராணுவ கையிருப்பில் இருந்து உடன் இந்த ஆயுதங்கள் விநியோகிக்கப்படுவதாகவும் இதில் நான்கு துல்லியமான ரொக்கெட் லோஞ்சர்கள், 75,000 சுற்று வெடிபொருட்களுடன் 32 ஹோர்விட்சர்கள், கண்ணிவெடிகள் அடங்குவதாகவும் வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

அமெரிக்கா மேலும் ஆயுதங்களை வழங்குவது அமெரிக்காவுக்கான ரஷ்ய தூதுவர் அனடோலி அன்டோனோவின் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது. "இதனை எமது நாட்டின் மூலோபாய நலனுக்கு ஏற்பட்டிருக்கும் உடனடி அச்சுறுத்தலாக நாம் கருதுகிறோம்" என்று அவர் நேற்று டெலிகிராம் செயலியில் பதிவிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். "அமெரிக்கா மற்றும் கூட்டணி நாடுகளின் இந்த இராணுவ தயாரிப்புகளின் விநியோகம், நீடித்த இரத்தக்களரி மற்றும் உயிரிழப்புகளை மாத்திரம் ஏற்படுத்தாது அது ரஷ்யா மற்றும் மேற்கத்திய நாடுகளுக்கு இடையிலான நேரடிப் போருக்கான அச்சுறுத்தலையும் அதிகரிக்கிறது" என்றும் அவர் எச்சரித்தார்.

ரஷ்ய ஆட்புலத்தை பாதுகாப்பதற்கு அணு ஆயுதத்தை பயன்படுத்துவது பற்றி ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் அண்மைக் காலத்தில் சூசகமாக எச்சரிக்கை விடுத்து வருகிறார். உக்ரைனுக்கு 1 பில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்களை வழங்குவது பற்றிய அறிவிப்பை அமெரிக்கா கடந்த வாரம் வெளியிட்டிருந்தது. இந்நிலையில் இந்தப் புதிய அறிவித்தல் மூலம் போர் ஆரம்பித்தது தொடக்கம் அமெரிக்கா உக்ரைனுக்கு 16.8 பில்லியன் டொலர் பெறுமதியான பாதுகாப்பு உதவிகளை வழங்கியுள்ளது.

தென்கொரியா, அமெரிக்கா வடகொரியாவுக்கு பதிலடி

ஜப்பான் வானுக்கு மேலால் வடகொரியா ஏவுகணை வீசியதற்கு பதிலடியாக தென் கொரியா மற்றும் அமெரிக்கா தீவிர ஏவுகணை ஒத்திகை ஒன்றை நடத்தியுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை காலையில் 4,600 கிலோமீற்றர் தூரம் பாய்ந்த வட கொரியாவின் இடைநிலை தூர ஏவுகணை பசுபிக் கடலில் விழுந்தது. இந்நிலையில் நேற்று (05) தென் கொரியா மற்றும் அமெரிக்க படைகள் தரையில் இருந்து தரையை தாக்கும் நான்கு ஏவுகணைகளை கடலுக்கு செலுத்தியதாக தென்கொரிய கூட்டுப் படை பிரதானி தெரிவித்துள்ளார். இந்த ஏவுகணை தாக்குதல் இரு நட்பு நாடுகளுக்கு இடையிலான இராணுவ கூட்டு பயிற்சியில் நடத்தப்பட்டுள்ளது. அத்துடன் இது நாட்டின் திறன்களை நிரூபிக்கும் முயற்சி மற்றும் வட கொரியாவின் ஆத்திரமூட்டல்களை தடுக்கும் என்று கூட்டுப் படை பிரதானி தெரிவித்துள்ளார். வட கொரியா இந்த ஆண்டில் பெரும் எண்ணிக்கையான ஆயுதச் சோதனைகளை நடத்தியிருப்பதோடு இதில், தடை செய்யப்பட்ட கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனைகளும் அடங்கும்.

ட்விட்டரை கூறிய விலைக்கே வாங்க இலோன் மஸ்க் முடிவு

ட்விட்டர் நிறுவனத்தை கூறிய விலைக்கு வாங்கத் தயார் என்று உலகின் பெரும் செல்வந்தரான இலோன் மஸ்க் தெரிவித்துள்ளார்.

முன்னதாக அவர் அந்த ஒப்பந்தத்திலிருந்து விலகும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார். அதற்காக ட்விட்டர், மஸ்க் மீது வழக்கு தொடுத்திருந்தது. அந்த வழக்கு இன்னும் சில வாரங்களில் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வரவுள்ளது.

தற்போது மஸ்க் அந்த ஒப்பந்தப்படி ட்விட்டர் நிறுவனத்தை 44 பில்லியன் டொலருக்கு வாங்கப்போவதாக மீண்டும் உறுதி அளித்துள்ளார். கடந்த ஏப்ரல் மாதத்திலேயே சமூக ஊடகத்தை வாங்குவதாக மஸ்க் அறிவித்தார். எனினும் ட்விட்டரில் உள்ள போலிக் கணக்குகள் தொடர்பில் மஸ்கிற்கும் ட்விட்டர் நிர்வாகத்திற்கு இடையே மோதல் வெடித்தது.

அது குறித்து அவரிடமிருந்து கடிதம் ஒன்றைப் பெற்றதை ட்விட்டர் உறுதி செய்துள்ளது. அந்த அறிவிப்பை அடுத்து ட்விட்டரின் பங்கு விலைகள் 12.7 வீதம் ஏற்றம் கண்டன.

நாசாவின் விண்கலம் தாக்கிய குறுங்கோளில் 'குப்பை வால்'

அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசாவின் விண்கலம் தாக்கிய குறுங்கோளில் பல்லாயிரம் கிலோமீற்றர் தூரத்துக்கு குப்பைகளின் தடம் ஒன்று ஏற்பட்டிருப்பதாக புதிதாக பெறப்பட்ட படத்தில் தெரிய வந்துள்ளது.

சிலியில் உள்ள தொலைநோக்கி எடுத்திருக்கும் இந்தப் புகைப்படத்தில் குறுங்கோளில் வால் நட்சத்திரம் போன்று குப்பை வால் நீண்டு இருப்பது தெரிகிறது.

பூமிக்கு அச்சுறுத்தலான விண்கற்களின் பாதையை திசைதிருப்பும் ஆய்வு முயற்சியாகவே இந்தக் குறுங்கோள் மீது நாசா தனது விண்கலம் கொண்டு கடந்த வாரம் தாக்குதல் நடத்தியது.

இந்த சோதனையின் வெற்றி குறித்து விஞ்ஞானிகள் தற்போது ஆய்வு நடத்தி வருகின்றனர். இந்நிலையில் இந்த மோதல் இடம்பெற்று இரண்டு நாட்களின் பின்னரே இந்தப் புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளது. இதில் இந்தக் குப்பை 10,000 கிலோமீற்றர் தூரத்திற்கு நீண்டிருப்பதோடு இந்த சிதறல்கள் முற்றாக நிறைவடைவதற்கு முன் இதன் நீளம் மேலும் அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஒக்டோபர் 6 வியாழக்கிழமை

தினகரன்
THINAKARAN

தொழுகை நேரம்
சுபஹ் - 04.43
லுஹர் - 12.01
அஸர் - 03.16
மஃரிப் - 06.01
இஷா - 07.11

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் புரட்டாதி 19
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

சம்பிக்கவின் தொலைபேசி உரையாடல் ஒட்டுக்கேட்பு;

பாராளுமன்றில் ஆஜராகுமாறு CID பணிப்பாளருக்கு அழைப்பு

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளரை பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள் குழுவில் ஆஜராகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தனது தொலைபேசியின் உரையாடல்கள் ஒட்டுக்கேட்கப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க செய்த முறைப்பாடு தொடர்பிலான விசாரணைகளுக்காகவே இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 18ஆம் திகதி அவர் பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள் குழுவில் ஆஜராகவுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினரின் சிறப்புரிமைகளை மீறிய குற்றச்சாட்டின் கீழ் குற்றப்புலனாய்வு திணைக்கள பணிப்பாளருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள் குழுவின் தலைவர் அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொருளாதாரத்தை மீட்டெடுக்க நான்கு வழிகளில் அரசு முயற்சி

அமைச்சர் பந்துல குணவர்த்தன விளக்கம்

இலங்கை மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு நான்கு தெரிவுகள் உள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்க வருவாயை முடிந்தவரை அதிகரிப்பது, அரசாங்க செலவீனங்களை முடிந்தவரை குறைப்பது, நாட்டுக்குள் வரும் அந்நிய செலாவணியை அதிகரிப்பது , மற்றும் நாட்டுக்கு வெளியே செல்லும் அந்நிய செலாவணியை குறைத்தல் என்பன அவையாகும்.

இந்த நான்கு தெரிவுகளின் அடிப்படையில் எந்தவொரு பிரேரணையையும் ஏற்றுக் கொள்ள அரசாங்கம் தயாராக இருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

அடுத்த வருடம் அரசாங்கத்தின் மீள்செலவு ரூ.4,637 பில்லியனாகவும், மூலதனச் செலவீனம் ரூ.3,245 பில்லியனாகவும் இருக்கும் என்றும், இதன் மூலம் மதிப்பிடப்பட்ட மொத்த அரசாங்கச் செலவு ரூ.7,885 பில்லியனாக இருக்கும்

07

முல்லைத்தீவு STFயினரின் தேடுதலில்

நந்திக்கடல் பகுதியில் வெடிகுண்டுகள் மீப்பு

விடுதலைப் புலிகளுடனான இறுதி யுத்தம் இடம்பெற்ற பகுதியென கூறப்படும் நந்திக்கடலுக்கு அண்மித்த பகுதியில் நடத்திய சோதனை நடவடிக்கையின் போது மோட்டார் மற்றும் வெடிகுண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் விஷேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

60 மி.மீ மோட்டார் குண்டுகள் மூன்று, ஒரு கொத்து வெடிகுண்டு மற்றும் அடையாளம் தெரியாத கைக்குண்டு ஆகியவை கண்டெடுக்கப்பட்டன.

முல்லைத்தீவு விஷேட அதிரடிப்படை முகாமின் அதிகாரிகளினால் இந்த வெடிகுண்டுகள் மீட்கப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லையென பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவ் வெடிபொருட்கள் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

பயங்கரவாத தடை சட்டத்தை

முறைகேடாக பாவிப்பதை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும்

சபையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

லோரன்ஸ் செல்வநாயகம்

பயங்கரவாத தடைச் சட்டத்தை முறைகேடாக பாவிப்பதை அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொள்ளும் அமைதியான போராட்டத்தை தடுத்து, ஜெனிவா எமது நாட்டுக்கு எதிராக பிரேரணை கொண்டு வருவதற்கு ஊக்குவித்து வருவதாகவும் அவர் சபையில் தெரிவித்தார்.

அத்துடன் பயங்கரவாத தடைச்சட்டத்தை முறைகேடாக பயன்படுத்தி அப்பாவிகளை கைதுசெய்வதை நிறுத்த வேண்டும் என தெரிவித்த அவர், பயங்கரவாத தடைச் சட்டத்தை முறைகேடாக பாவிப்பதை அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர், அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் தலைவர் வசந்த லியனகே உட்பட 030பேர் பயங்கரவாத

07

மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்பனை

ஹிக்கடுவையில் பெண்ணொருவர் அதிரடி கைது

பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டமைக்காக பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் நேற்றுமுன்தினம் (04) ஹிக்கடுவ பாடசாலையொன்றின் மைதானத்தில் காணப்பட்டபோதே போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டதாக விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது.

சந்தேக நபர் 29 வயதுடையவரெனவும், அவரிடம் 08 கிராம் ஹெரோயின் இருந்ததாகவும் விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது. இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட

07

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்: மனுக்களின் விசாரணை நிறைவு

வழக்கின் தீர்ப்பு வெளியிடுவது ஒத்திவைப்பு

2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முன்னரே புலனாய்வுத் தகவல்கள் கிடைத்த போதிலும் தடுக்கத் தவறியமை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பலருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பை வெளியிடுவதை உச்ச நீதிமன்றம் நேற்று ஒத்திவைத்துள்ளது.

அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீதான விசாரணை உச்ச நீதிமன்றத்தில் நேற்று நிறைவடைந்தது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய ஆகியோர் அடங்கிய ஏழு பேர் முன்னிலையில் இந்த மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

2019 ஏப்ரல் உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தடுக்கத் தவறியமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் தொடர்பாக

07

யாழ். பல்கலை பட்டமளிப்பு விழா முதலாவது பகுதி இன்று ஆரம்பம்

06,07,08ஆம் திகதிகளில் தொடர்ந்தும் நடைபெறும்

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவின் முதலாவது பகுதி, இன்று 06 ஆம் திகதியும் நாளை 07ஆம் திகதி மற்றும் நாளை மறுதினம் 08 ஆம் திகதியும், யாழ். பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

பட்டமளிப்பு விழாவில் 185 பட்டப்பின் தகைமை பெற்றவர்களுக்கும், 02 ஆயிரத்து 46 உள்வாரி மாணவர்களுக்கும், 147 தொலைக்கல்வி மாணவர்களுக்குமாக 02 ஆயிரத்து 378 பேருக்குப் பட்டங்கள் மற்றும் தகைமைச் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தெரிவித்தார்.

அது தொடர்பில் விளக்கமளிக்கையில்,

இந்தப் பட்டமளிப்பு விழாவின் முதல் இரண்டு நாட்களும் முறையே மூன்று அமர்வுகளும், மூன்றாம் நாள் முறையே இரண்டு அமர்வுகளுமாக எட்டு அமர்வுகளில் பட்டங்களும், தகைமைச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

பட்டமளிப்பு விழாவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வேந்தர், வாழ்நாள் பேராசிரியர் சி. பத்மநாதன் தலைமை தாங்கி, பட்டதாரிகளுக்கான பட்டங்களையும், தகைமைச் சான்றிதழ்களையும், தங்கப் பதக்கங்களை

07

பதுக்கி வைக்கப்பட்டிருந்த பாவனைக்கு உதவாத அரிசி கண்டுபிடிப்பு

பேருவளையில் 02 களஞ்சியங்களுக்கு சீல்

பேருவளையில் பாவனைக்குதவாத 590 கிலோ சம்பா அரிசியை களஞ்சியப்படுத்தி வைத்திருந்த 02 களஞ்சியசாலைகளுக்கு (04) சீல் வைத்து இழுத்து மூடப்பட்டதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

பேருவளை பொலிஸ் பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக, பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பேருவளை பொலிஸாருடன் இணைந்து பேருவளை மற்றும் தர்கா நகர் ஆகிய பகுதிகளில் முன்னெடுத்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே இவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் தர்கா நகரில் வசிப்பவர் என்பது தெரியவந்துள்ளது.

பேருவளை பல்பொருள் அங்காடிக்கு அருகிலுள்ள மாபிள் களஞ்சியசாலையில்

07

பாதுகாப்பு அமைச்சின் 'தேசிய அபாயகர ஒளடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை' ஏற்பாடு செய்திருந்த 2022 உலக சிறுவர் தின கொண்டாட்ட நிகழ்வுகள் தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் (01) நடத்தியது. ஜோன் கீல்ஸ் நிறுவனம் இந்த நிகழ்ச்சிக்கு முழு அனுசரணையை வழங்கியது, இதில் சிறுவர், சிறுமியருக்கான அறிவுசார் மற்றும் பல வேடிக்கை விளையாட்டுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
சுபகிருது வருடம் புரட்டாதி மாதம் 19ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ரபீஉனில் அவ்வல் பிறை 09

குறள் தரும் சிந்தனை

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்

உயர்ந்த குணத்தையும் சிறுமைக் குணத்தையும் உரசிக்கண்டு அறிவதற்கு ஏற்றக் கட்டளைக்கல் அவரவர் செய்யும் செயல்களே.

பொருளாதார நெருக்கடியிலும் போஷாக்கில் கூடுதல் கரிசனை

தற்போது நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மக்களின் போஷாக்கு தொடர்பில் விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதன் நிமித்தம் பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன. குறிப்பாக 'உணவின்றி எந்தவொரு குடிமகனும் வாடக்கூடாது' என்ற அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கைக்கு அமைய இவ் வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

வறுமை மற்றும் போஷாக்கு தொடர்பான மாவட்ட மட்டத் தரவுகளின் அடிப்படையில் ஏற்கனவே பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவுத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கின்றது. இத்திட்டத்தின் கீழ் 1.08 மில்லியன் மாணவர்கள் பயனாளர்களாக உள்ளனர். இதன் நிமித்தம் 400 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தற்போது நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார ரீதியிலான சவாலைக் கருத்தில் கொண்டு மேலும் 1.08 மில்லியன் மாணவர்களைப் பாடசாலை மாணவர் மதிய உணவுத் திட்டத்தின் கீழ் உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைக்கு முன்வைத்திருந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

இதற்கேற்ப பாடசாலை மாணவர் மதிய உணவுத் திட்டத்தின் கீழ் புதிதாக சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களுக்கென மேலும் 400 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்வதற்கும் அரசாங்கம் முடிவு செய்துள்ளது. வறுமை ஒழிப்பு கொள்கையின் கீழ் போஷாக்கு தொடர்பான எதிர்பார்ப்புகளை நிவர்த்தி செய்யும் நோக்கில் இத்திட்டம் உடனடியாக நடைமுறைபடுத்தபட உள்ளன. இதன் ஊடாக நாட்டிலுள்ள 7926 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் நன்மை பெற இருக்கின்றனர்.

தற்போது நடைமுறையில் உள்ள பாடசாலை மாணவர் மதிய உணவுத்திட்டத்தை விஸ்தரிக்கும் நோக்கில் இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, நாட்டிலுள்ள 2.16 மில்லியன் மாணவர்கள் இத்திட்டத்தின் மூலம் நன்மை பெற்றுக்கொள்ள உள்ளனர். இவர்களுக்கென மொத்தம் 800 கோடி ரூபா செலவிடப்பட இருக்கின்றது.

பாடசாலை மாணவர் மதிய உணவுத்திட்டத்தின் கீழ் புதிதாக 1.08 மில்லியன் மாணவர்கள் உள்வாங்கப்பட்டு இருப்பதன் மூலம் நாட்டின் மொத்த மாணவர்களில் 51 வீதத்தினர் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படுகின்றனர் என்பது சுட்டிக்காட்டத் தக்கதாகும். நாடு பொருளாதார ரீதியிலான நெருக்கடிக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் சூழலில் 21 இலட்சத்து 60 ஆயிரம் மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டிருப்பது என்பது சாதாரண விடயமல்ல. இது பெரிதும் பாராட்டப்பட வேண்டிய விடயமாகும். அதுவே மக்களின் கருத்தாகும். இந்நடவடிக்கையின் ஊடாகவும் மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்பட்டு வருவதை அரசாங்கம் மீண்டும் உறுதிப்படுத்தி இருக்கின்றது.

இலங்கை மத்திய வங்கியின் 2021 ஆண்டுக்கான அறிக்கையின் படி, இந்நாட்டின் மொத்த மாணவர் தொகை 42 இலட்சத்து 38 ஆயிரத்து 760 ஆகும். அவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கின்றனர். தற்போதைய சூழலில் இது பாரிய வேலைத்திட்டம் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

இத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு தேவையான ஒத்துழைப்புக்களும் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் கிடைக்கப்பெற்றுள்ளன. இது இத்திட்டத்தின் முக்கியத்துவதற்கு கிடைத்துள்ள அங்கீகாரமுமாகும். இது தொடர்பில் அமைச்சரவை அமைச்சர் பந்துல குணர்வரன குறிப்பிடுகையில், 'பாடசாலை மாணவர் மதிய உணவுத்திட்டத்திற்கென உலக வங்கி, யுனிசெப் நிறுவனம், சீன அரசு உட்பட தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்பும் கிடைக்கப்பெற்றுள்ளதாகக் கூறியுள்ளார்.

இதன் ஊடாக மக்களின் உணவு பாதுகாப்பையும் போஷாக்கையும் உறுதிப்படுத்துவதில் அரசாங்கம் எவ்வளவு தூரம் திட்டமிட்ட அடிப்படையில் செயற்படுகின்றது என்பது தெளிவாகின்றது. பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள சூழலிலும் மக்களின் நலன்களை உறுதிப்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டிருப்பதை ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் முடிவுகளும் தீர்மானங்களும் வேலைத்திட்டங்களும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

இதேவேளை, 'உணவுக் கொள்கை குழு' ஒன்றை ஸ்தாபிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இவ்வேலைத்திட்டங்கள் அனைத்தும் நாட்டு மக்களின் உணவு பாதுகாப்பையும் போஷாக்கையும் உறுதிப்படுத்துவதற்குஅளிக்கப்பட்டுள்ள முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கின்றன. அதனால் இவ்வேலைத்திட்டங்களின் ஊடான பிரதிபலன்கள் உரிய முறையில் மக்களை சென்றடைய வேண்டும். அதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுப்பது சம்பந்தப்பட்ட தரப்பினரின் பொறுப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

வாசிப்பு மனிதனை முழுமைப்படுத்தும் 'தேசிய வாசிப்பு மாதம் -ஒக்டோபர்'

உலக விரிவாக்கலுக்குள் நின்று தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளவும் மேம்பாடடையவும் வைக்கும் உன்னத சாதனம் வாசிப்பாகும். ஒரு மனிதன் உண்பதைப் போன்று வேறு கருமங்களை ஆற்றுவதனைப் போன்று வாசிப்பென்பது அன்றாட கடமைகளில் ஒன்றாக மாறும் போதே அவன் உயிருள்ளவனாகவும் மாறுகின்றான். தெரிந்தவற்றைக் கதைப்பதனை விட தெரிந்து கொண்டு பேசுகின்றவனே அறிவாளியாகின்றான். இவ்வாறான புடம் போடலுக்கு அவனைத் தூண்டுகின்ற திருப்திகரமான உணர்வு நிலைச் சாதனம் வாசிப்பே அன்றி வேறில்லை.

வாசிப்பானது பாடசாலைப் பருவத்திலிருந்து விதைக்கப்பட வேண்டிய உணர்வாகும். இதனால் தான் ஒக்டோபர் மாதத்தை தேசிய வாசிப்பு மாதமாகக் கல்வியமைச்சு பிரகடனம் செய்து பல்வேறு செயற்றிட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றது. தேசிய நூலகம் மற்றும் ஆவணச்சேவைகள் சபை பாடசாலை மட்டத்தில் வாசிப்பின் விருத்திக்கென வருடாவருடம் பல்வேறு செயற்றிட்டங்களை ஊக்குவித்து வருகின்றது. அந்த வகையில். 'நூலகமும் ஒரு ஆசிரியரே' எனும் கருப்பொருளில் இவ்வருடத்திற்கான வேலைத்திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

பாடசாலை அதிபரின் பொறுப்புடன் பெற்றோருக்கு பொருளாதாரச் சுமையினை ஏற்படுத்தாத வகையில் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. பிறந்த நாள் பரிசாக நூல்களை அன்பளிப்புச் செய்தல், புத்தகக் கண்காட்சியை நடத்துதல், புத்தக நன்கொடை தினமொன்றை அறிமுகம் செய்தல், வாசிப்பின் முக்கியத்துவத்தை ஏற்படுத்தும் நோக்கிலான போட்டிகளையும் விரிவுரைகளையும் ஏற்படுத்துதல், சுவரொட்டிகள் மற்றும் துண்டுப் பிரசுரங்களை வெளியிடுதல், வாசிப்பு முகாம்களை ஒழுங்குபடுத்தல், வாசிப்பு முகாம்களை நடத்துதல், ஒக்டோபர் 25 ஆம் திகதியை நூலக தினமாகப் பயன்படுத்துதல் என்பன கல்வியமைச்சினால் பாடசாலைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ள முன்னெடுப்புக்களாகும்.

'கருவுற்றிருக்கும் தாய் நல்ல நூல்களை வாசிக்கும் போது அக் குழந்தைகளின் மூளை விருத்தி உந்தப்படுகின்றது' என்கின்ற உளவியலாளர்களின் கூற்றினையும் 'குழந்தையின் முதல் ஆசான் தாய். அக் குழந்தை தாலாட்டிலிருந்தே கற்கவும் அறியவும் ஆரம்பிக்கிறது' என்கின்ற இலக்கிய ஆய்வாளர் தமிழ் அண்ணலின் கூற்றினையும் ஒன்றிணைத்துப் பார்க்கும் போது வாசிப்புக்கான கரு வீட்டிலிருந்தே விதைக்கப்பட வேண்டுமென்பது தெளிவாகின்றன. அதற்கான சூழல் அங்கு கிடைக்காத போது ஒரு குழந்தையின் புகுந்த வீடாக அடையாளம் காணப்பட்டுள்ள பாடசாலையின் மூலமே இதனைக் கட்டியெழுப்புவதற்கான சாத்தியப்பாட்டு நகர்வுகளை அதிகரிக்க வேண்டிய தேவையுண்டு. அதற்கான மிக நல்லதொரு களத்தை வழங்குவது பாடசாலைகளின் நூலங்களே. அந்நூலங்களை வளப்படுத்துவதுதற்கும் ஒழுங்குபடுத்துவதற்குமான பங்காளிகளாக மாற வேண்டியவர்கள் மாணவர்களே. பாடசாலைப் பரீட்சைக் கல்வியோடு மட்டுப்பட்டு விடுகின்ற மாணவர்களை விட நூலகங்களை சிறு பராயம் முதலே வசமாக்கி மேன்மையடைந்த மாணவர்களே சமூக மதிப்பு மிக்க அடையாளங்களாக சமூகத்தில் திகழ்வதே வரலாறாகும்.

வாசிப்பின் மூலம் சிந்தித்தல், ஆராய்தல், காரணம் கண்டறிதல், கற்பனை செயதல் முதலிய திறன்கள் வளருகின்றன. ஒரு மனிதன் மகிழ்ச்சியாக இருப்பதற்கும் பொழுதை திருப்திகரமாகப் போக்குவதற்கும் வாசிப்பு துணை நிற்கிறது. மகிழ்ச்சியாக உள்ளவனே சுயமாக சிந்திக்கும், ஆராயும், கருத்துக்களை வெளியிடும் நிலையில் எப்போதும் தன்னை வைத்திருப்பான். அவனே சமூகத்தின் பார்வைக்குட்பட்டவனாக மாறுகின்றான். ஆங்கிலத்தில் 'Read for fun, Read for pleasure' என்றெல்லாம் கூறப்படுவது நினைவு கொள்ளக் கூடிய செய்திகளாகும்.

வாசிப்பின் மூலம் தகவல் தேவைகள் நிறைவு செய்யப்படுவதுடன் அறிவு மேலோங்குகிறது. அறிவாளியையும் அறிவிலியையும் வேறுபடுத்துவது வாசிப்பேயாகும். கோபம், பயம், விரக்தி உள்ளிட்ட உளரீதியான பாதிப்புக்களிலிருந்து வாசிப்பு பாதுகாப்பு அளிக்கின்றது. மொழி விருத்தி அடைவதுடன் தன்னம்பிக்கை வளர்கிறது. ஞாபக சக்தி விருத்தி பெற்று, கௌரவம் உயர்ந்து, தொழிலில் தேர்ச்சி அடைந்து, பல்துறை ஆளுமையுள்ள மனிதனாகத் தன்னை அடையாளப்படுத்த வாசிப்பே வழிகோலுகிறது.

மரணித்த பின்னரும் ஒரு மனிதனுடன் உறவாடவும் தர்க்கிக்கவும் அவனை ஆய்வு செய்யவும் முடியுமான சந்தர்ப்பத்தை வழங்குவது வாசிப்பேயாகும். 'பழங்கால புருஷர்களை நேரில் சந்திக்க வேண்டுமானால், அவர்களோடு உரையாட வேண்டுமானால் நூலகங்களுக்குப் போ' என அக்கருத்துக்கு வலிமை சேர்கிறார் மாஓசேதுங்.

மகாத்மா காந்தியிடம் 'உங்களிடம் ஒரு கோடி ரூபாய் தரப்பட்டால் என்ன செய்வீர்கள்' எனக் கேட்ட போது 'ஒரு நூலகம் அமைப்பேன்' எனக் கூறியமை நூலகத்தின் முக்கியத்துவத்தை உணர்த்த வல்ல அம்சமாகும்.

'புரட்சிப் பாதையில் கைத்துப்பாக்கிகளை விட பெரிய ஆயுதங்கள் நூலகங்களே' என்கிறார் லெனின். 'வேறு எந்த சுதந்திரமும் வேண்டாம். சிறையில் புத்தகங்களை வாசிக்க அனுமதியுங்கள்' என்றார் நெல்சன் மண்டேலா.

இவ்வாறாக, பெரும் அறிஞர்களும் போராட்டகாரர்களும் கூட புத்தக வாசிப்பினையும் நூலகங்களையும் பற்றியே பிரஸ்தாபித்துள்ளனர். அவர்கள் வாசிப்பின் சுவையினை உணர்ந்ததன் வெளிப்பாடுகளே இவைகளாகும். இவற்றினாலேயே இவர்கள் காலம் கடந்தும் வாழுகின்றனர்.

வாசிப்பினை வழக்கமாக்க வீட்டுச் சூழலை வாசிப்பின் முற்றங்களாகவும் வாசிப்பின் முகாங்களாகவும் மாற்றியமைக்க வேண்டும். நவீன ஊடகங்களின் வருகையினால் வாசிப்புத்திறன் தூரமாகிச் செல்கிறது என்கின்ற கருத்தினையும் ஏற்காமல் இருக்க முடியாது. எனினும் அதனை மிகைக்க வேண்டுமாயின் முறையானநேர்மையானஆழமான வாசிப்புக்கு வழிகாட்டும் நூல்களையும் அதன் உறைவிடமான நூலகங்களையும் நோக்கி மாணவர்கள் ஒவ்வொருவரும்நகர்வது அவசியம்.

ஜெஸ்மி எம்.மூஸா....✍
அல்மனார் தேசிய பாடசாலை,
மருதமுனை.

மோட்டார்50 காப்புறுதித் துறையில் புரட்சியை ஏற்படுத்தும் LOLC ஜெனரல் இன்ஷூரன்ஸ்

இலங்கையில் வேகமாக வளர்ந்து வரும் பொதுக் காப்புறுதி சேவைகளை வழங்கும் நிறுவனங்களில் ஒன்று LOLC ஜெனரல் இன்ஷூரன்ஸ் பிஎல்சி (LOLC GI) நிறுவனம். இந் நிறுவனம் தனது லோயல்டி திட்டமான 'Honours' ஐ அறிமுகம் செய்து, மோட்டார் காப்புறுதித் துறையில் முதலாவது வாழ்க்கைமுறை திட்டத்தை உள்வாங்கியுள்ளது. அத்துடன், டிஜிட்டல் காப்புறுதி வழங்கல் வலையமைப்பில் Electronic PointofSale (ePOS) ஐயும் அறிமுகம் செய்துள்ளது.

LOLC GI இன் புதிய லோயல்டி திட்டமான 'Honours', வாடிக்கையாளர்களுக்கு ஒப்பற்ற மற்றும் வியப்பூட்டும் அனுபவங்களை வழங்கவுள்ளது. வாடிக்கையாளர்களை, கிளாசிக், சில்வர், புரொன்ஸ் மற்றும் பிளாட்டினம் ஆகிய நான்கு பிரிவுகளாக பிரித்து தினமும் வெகுமதிகளை வழங்கவுள்ளது.

இந்த வெகுமதித் திட்டம் சகல LOLC GI மோட்டார் காப்புறுதிதாரர்களுக்கும் பொருந்தும் வகையில் அமைந்திருப்பதுடன், பெறுமதி வாய்ந்த விலைக்கழிவுகள் மற்றும் அனுகூலங்களை, Channel 17 (CH17) பங்காளர் வலையமைப்பினூடாக வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. முதலாவது வெகுமதித் திட்டத்தினூடாக, வாடிக்கையாளர்களுக்கு, விற்பனையாளர் விலைக்கழிவுகள்/லோயல்டி புள்ளிகள் ஊடாக பண மீளளிப்பு வழங்கப்படும். வாடிக்கையாளரின் காப்புறுதி தவணைக்கட்டணத்தை செலுத்தவும் மேலும் பல செலவுகளை ஈடு செய்து கொள்ளவும் இது உதவியாக அமைந்திருக்கும் என LOLC GI நம்புகின்றது.

விற்பனைப் பங்காளர் வலையமைப்பினூடாக லோயல்டி புள்ளிகளை திரட்டிக் கொள்ள முடிவதுடன், வாடிக்கையாளரின் காப்புறுதி புதுப்பிப்பின் போது அல்லது சமூக நலன்புரிச் செயற்பாடுகளுக்கும் பங்களிப்புச் செய்வதற்கு பயன்படுத்த முடியும்.

'Honours' லோயல்டி திட்டம், சவால்கள் நிறைந்த பொருளாதார காலப்பகுதியில் நிலைபேறான வியாபார மாதிரிக்கு ஊக்குவிப்பளிக்கும் கட்டமைப்பை பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளது. தற்போதைய சூழலில் வாடிக்கையாளர்கள் எதிர்நோக்கியுள்ள கடினமான சூழல் தொடர்பில் LOLC GI புரிந்து கொண்டுள்ளதுடன், பண வீக்கம் காரணமாக நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள விற்பனை நிலையங்களுக்கு ஆதரவளிப்பதிலும் கவனம் செலுத்துகின்றது. இரு தரப்பினருக்கும் மீட்சியை எய்துவதற்கு கைகொடுக்கும் வகையில் LOLC ஜெனரல் இன்ஷூரன்ஸ் ஆதரவளிக்கின்றது.

எனவே, 'Honours', வழமையான லோயல்டி கட்டமைப்பாக அமைந்திராமல், மோட்டார் காப்புறுதிதாரர்களை பாதுகாக்கும் வகையில் தந்திரோபாயமான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், SME வியாபாரங்கள் மற்றும் இதர வர்த்தகங்கள் போன்றன செயல் நிலையில் இருப்பதை உறுதி செய்யும் வகையில் அமைந்துள்ளது.

வாடிக்கையாளர்களுக்கு வலையமைப்பினுள் காணப்படும் எந்தவொரு விற்பனை நிலையங்களுடனும் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டு, 'Honours'லோயல்டி புள்ளிகளை திரட்டிக் கொள்ள முடிவதுடன், தெரிவு செய்யப்பட்ட பங்காளர் வலையமைப்புகளினூடாக புள்ளிகளை பயன்படுத்தலாம் அல்லது காப்புறுதியை புதுப்பிக்கும் போது புள்ளிகளை பயன்படுத்தலாம். மேலும் 'Honours' இனால் காப்புறுதிதாரர்களுக்கு, பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்டிருந்த குடும்பங்களுக்கு உதவும் வகையில், LOLC இனால் வடிவமைக்கப்பட்டுள்ள மனிதநேய நிகழ்ச்சித் திட்டமான 'Divi Saviya' க்கு, புள்ளிகளை வழங்கக்கூடிய வகையில் அமைந்துள்ளது. Honours என்பது பரிபூரண வலையமைப்பாக அமைந்திருப்பதுடன், மோட்டார் காப்புறுதிதாரர்களுக்கு, சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாளர், ஊழியர்கள் மற்றும் இலங்கை மக்கள் ஆகியோரின் தன்னிறைவை வழங்கும் வகையிலும் அமைந்துள்ளது.

ஹமர் வாகனம் ஏலத்தில் வழங்கியது தொடர்பாக ஒரு வாரத்தில் அறிக்கை

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட ஹமர் வாகனம் ஒன்றை இறக்குமதியாளருக்கே ஏலத்தில் வழங்கியது தொடர்பாக ஒரு வார காலத்துக்குள் அறிக்கை வழங்குமாறு நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிடிய சுங்க திணைக்களத்திடம் கோரியுள்ளார்.

சட்டவிரோதமாக இந்நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட ஹமர் (Hummer) ரக வாகனமொன்று அரசுடமையாக்கப்பட்ட பின்னர் இடம்பெற்ற ஏலத்தில் அதனை இறக்குமதி செய்த நபருக்கே மீள பெற்றுக் கொடுத்தல் மற்றும் டென்டர் விதிமுறைகளை மீறிய சம்பவம் தொடர்பாக ஒரு வார காலத்துக்குள் அறிக்கையை பெற்றுத் தரும்படி நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலா பிட்டிய சுங்கத்திணைக்களத்துக்கு பணிப்புரை விடுத்துள்ளார். குறிப்பிட்ட வாகனம் மேலும் மூன்று வாகனங்களுடன் இவ்வருடம் பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

பின்னர் அவை அரசுடமையாக்கப்பட்டு பகிரங்க ஏலத்தில் விற்கப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் இலங்கை அரசாங்கத்துக்கு எதுவித நட்டமும் ஏற்படவில்லை. ஆனாலும் அந்த வாகனங்களுடன் காணப்பட்ட ஹமர் ரக வாகனத்தை ஏலம் விடுவதற்கு பின்பற்றப்பட்ட நடைமுறை தொடர்பாக சுங்க அதிகாரிகளால் சரியான பதிலை வழங்க முடியவில்லையெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

குறிப்பிட்ட வாகனத்தின் மதிப்பீட்டு விலை 40 மில்லியனாக குறிப்பிடப்பட்டிருந்தாலும் இரண்டாவது சந்தர்ப்பத்தில் 27.5 மில்லியன் ரூபாவுக்கே ஏலம் விடப்பட்டுள்ளது. அதாவது மதிப்பிடப்பட்ட பெருமானத்திலிருந்து 33.75% குறைந்த விலையிலாகும். ஆனால் சுங்கக் கட்டளை சட்டத்தின் கீழ் டென்டர் குழுவுக்கு மதிப்பிடப்பட்ட பெறுமதியில் 10% க்கு மேற்படாத குறைந்த விலைக்கே ஏலம் விடுவதற்கு அதிகாரமுள்ளதென அமைச்சர் சுட்டிக்காட்டினார் .

அரச வருமானத்தை அதிகரிப்பது குறித்து மிகுந்த கவனம் செலுத்தியுள்ள இவ் வேளையில் அரசாங்கத்துக்கு கிடைக்க வேண்டிய பணம் அறவிடப்படாமை தொடர்பாக ஆராய வேண்டுமென அமைச்சர் தெரிவித்தார்.

சிறுவர்கள் உரிமைகள் குறித்த விழிப்புணர்வின் முக்கியத்துவம்

இன்றைய காலகட்டத்தில் உலகில் மனித உரிமைகள் குறித்து அதிகம் கலந்துரையாடப்படுகின்றன. அவற்றில் சிறுவர் உரிமைகளுக்கு அதிகம் முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றன. ஏனெனில் ஒரு சமூகத்தைச் சீர்செய்ய வேண்டுமெனில் அதற்கான அடித்தளம் வலிமையாக்கப்பட வேண்டும். அந்த அடித்தளமே சிறுவர்கள் தான். இன்றைய சிறுவர்கள் நாளைய தேசத்தைக் கட்டியமைக்கக்கூடிய எதிர்காலத் தூண்களாகும். இதனைப் பெற்றோரும் மற்றோரும் நன்குணர்ந்து கொள்ள வேண்டும்.

உலகின் சனத்தொகையில் மூன்றிலொரு பங்கினர் சிறுவர்களாவர். அவர்கள் எந்தவொரு பால், இன, மத, நிற வேறுபாடுகளுமின்றி தம் உரிமைகளை அனுபவிக்கும் உரிமையைக் கொண்டிருக்கின்றனர். உலகளாவிய ரீதியில் சிறுவர்கள் அனுபவிக்கும் அனைத்து உரிமைகளையும் இந்நாட்டு சிறுவர்களும் அனுபவிப்பதற்கு உரிமை உண்டு. இலங்கையின் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய பதினெட்டு வயதுக்குற்பட்ட அனைவரும் சிறுவர்களாவார்.

எதிர்காலக் கதாநாயகர்களாக உருவாகப் போகும் சிறுவர்கள் சிறுவயது முதலே பல கனவுகளை மனதில் சுமப்பர். அவர்களது கனவுகளை மெய்படுத்துபவர்களாகப் பெற்றோரும் ஆசிரியர்களும் சமூகமும் இருக்க வேண்டும்.

மனித உரிமைகள் என்பது வாழ்வதற்கான உரிமை, வளர்ச்சிக்கான உரிமை, பாதுகாப்புக்கான உரிமை, பங்கேற்பதற்கான உரிமை, கல்விக்கான உரிமை என பொதுவாக கூறப்படுகின்றன.

என்றாலும் இன்றைய உலகில் சமூகம் முகம் கொடுத்துள்ள மிக முக்கிய பிரச்சினைகளுள் ஒன்றாக சிறுவர் துஷ்பிரயோகம் உள்ளது. அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் உள்ளிட்ட அனைத்து நாடுகளிலும் இப்பிரச்சினை காணப்படுகிறது. ஆனாலும் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் இதுவொரு பாரிய பிரச்சினையாகும்.

குறிப்பாக வேலைக்கு அமர்த்துதல், போதைக்கு அடிமையாக்கல், பாலியல் துஷ்பிரயோகங்கள் போன்றவற்றில் சிறுவர்களை ஈடுபடுத்துவது அதிகபட்ச தண்டனைக்குரிய குற்றங்களாகும். பெரும்பாலான சிறுவர் உரிமை மீறல்கள் சிறுவர்களின் நெருங்கிய உறவினர்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. இதனை ஆய்வுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. குடும்பமே சிறுவர்களுக்கான கவசம் எனக்கருதப்படுகின்ற போதிலும் குடும்பத்தில் அன்பற்ற, ஆதரவற்ற, பாதுகாப்பற்ற நிலையில் சிறுவர்கள் வாழும் போது அவர்கள் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாவதற்கான வாய்ப்பு மிக அதிகமாகும்.

சர்வதேச புள்ளிவிபரங்களின் படி, உலகளாவிய ரீதியில் சுமார் 1.7 பில்லியன் சிறுவர்கள் துஷ்பிரயோகங்களை எதிர்கொள்கின்றனர். அந்த வகையில் 2012 முதல் 2020 வரையிலான காலப்பகுதியில் இலங்கையில் மாத்திரம் 5891 சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இந்நாட்டில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகரித்து வருவதாக யுனிசெப் நிறுவனமும் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறான சூழலில் தான் உலகின் முன்னணி நாடுகள் அனைத்தும் தமது சிறுவர்களை பாதுகாக்கவும் அவர்களது அனைத்து வள வாய்ப்புக்களிலும் அதிகம் கவனம் எடுத்துக்கொள்கின்றன. பாதுகாப்பான சூழல், ஊட்டச்சத்துக்கள் நிறைந்த உணவு, தரமான கல்வி, மகிழ்ச்சிகரமான சூழல் என்பவற்றை சிறுவர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதில் அந்நாடுகள் கூடுதல் அக்கறை எடுத்துக் கொள்கின்றன.

அந்த வகையில் உலகில் சிறுவர்கள் அனுபவிக்கும் அனைத்து உரிமைகளையும் இந்நாட்டு சிறுவர்களும் அனுபவிக்கக் கூடியவாறான சட்டங்கள் இங்கும் உருவாக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளன. பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்களில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் உரிமை, சித்திரவதை, குரூரமாக நடத்துதல் மற்றும் வன்முறையான தண்டனைகளிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளும் உரிமை, சுதந்திரத்திற்கும் பாதுகாப்பிற்குமான உரிமை என்பன அவற்றில் குறிப்பிடத்தக்கவையாகும். இவை சர்வதேச ரீதியிலும் சிறுவர்களுக்குரிய முக்கிய உரிமைகளாக விளங்குகின்றன.

ஐக்கிய நாடுகள் சபை 1979 ஆம் ஆண்டை சிறுவர் ஆண்டாகப் பிரகடனப்படுத்திய பின்னர் தான் சிறுவர்களின் உரிமைகளைப் பேண வேண்டுமென்ற புத்தெழுச்சி உலகலாவிய ரீதியில் ஏற்பட்டது. 1989 இல் சிறுவர் உரிமைகள் தொடர்பான சாசனம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. காலத்திற்குக்காலம் சர்வதேச தொழிலாளர் தாபனம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை ஆகியவற்றில் சிறுவர் உரிமைகள் தொடர்பாக வெளியிடப்பட்ட சாசனங்களை இலங்கையும் 1992 இல் அங்கீகரித்துள்ளது. இருந்தும் தத்தமது உரிமைகள் மீறப்படுவதனைப் பெரும்பாலான சிறுவர்கள் அறியாதவர்களாகவே இருக்கின்றனர். இது கவலைக்குரிய நிலைமையாகும். அதனால் சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கக்கூடிய சட்டங்கள் குறித்து பிரதேச, சமூக, பாடசாலை மட்டங்களில் போதிய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டிய தேவை பரவலாகக் காணப்படுகின்றது.

சிறுவர்கள் அன்பாகவும் பண்பாகவும் நடாத்தப்பட வேண்டும். அதன் ஊடாக அவர்கள் வன்முறைகளற்ற நற்பிரஜைகளாக உருவாகுவர். அந்தந்த வயதுகளில் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அன்பு, கல்வி, பாதுகாப்பு, ஆரோக்கியம் என்பவற்றை தமது சக்திக்குற்பட்ட வகையில் வழங்குவதில் பெற்றோரும் உறவினர்களும் அதிக கவனம் செலுத்தத் தவறலாகாது. எல்லா குழந்தைகளும் நல்லவர்களாவர். அவர்கள் வளர்க்கப்படும் முறைமையின் தவறான உள்வாங்கல்களால் தான் தமது நடத்தைகளிலும் பிழையான விடயங்களிலும் ஆர்வம் காட்ட முற்படுகிறார்கள். குழந்தை பருவத்தில் இருந்தே அவர்கள் முறையாக வழிநடத்தப்படுவது அவசியம்.

எம்.வை.எப்.சியாமா...
BA (Hons), மெய்யியல் உளவியல் விசேட துறை Dip in Human rights, மாவனல்லை.

சமூக வலைத்தளங்கள் ஊடாக மக்கள் சேவையில்

டிஜிட்டல் மயப்படுத்தப்பட்டுள்ள நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

ஸ்மாட்போன்கள் கண்டு பிடிக்கப்பட்ட பின்னர் சமூக ஊடகங்களின் வருகையால் உலகம் உள்ளங்கைக்குள் சுருங்கிவிட்டது. செய்திகள்கூட சமூக ஊடகங்கள் வாயிலாகவே மிக வேகமாக பரப்பப்படுகின்றன. கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளின் போது வீட்டிலிருந்து வேலைசெய்து, தொழில்நுட்பத்தின் அனுகூலங்கள் பலவற்றை அனுபவித்தோம்.

இலங்கையில் கடந்த பெப்ரவரி மாதம் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின்படி, 21.54 மில்லியன் சனத்தொகை கொண்ட நாட்டில் 32.29 தொலைபேசி இணைப்புகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அதாவது, சனத்தொகையைவிட தொலைபேசி இணைப்புகளின் எண்ணிக்கை அதிகமாகும். இதற்குக் காரணம், ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பல்வேறு சேவை வழங்குனர்களின் இணைப்புகளை (சிம் அட்டை) பயன்படுத்துவதாகும்.

அந்த வகையில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் 24 மணித்தியால வாடிக்கையாளர் சேவையான 1939 என்ற கட்டணமற்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளும்போது, நீர்ப்பட்டியல் கணக்கின் நிலுவைத் தொகை மற்றும் நீர் விநியோகத் தடையினை தானியங்கி முறையில் அறிந்துகொள்ளலாம். அத்துடன் முறைப்பாடுகளையும் இதே முறையில் மேற்கொள்ளலாம்.

இலங்கையில் 11.39 மில்லியன் பேர் இணையத்தளத்தை பயன்படுத்துவதாகவும், அதில் 8.20 மில்லியன் பேர் சமூக ஊடகங்களை பயன்படுத்துவதாகவும் குறித்த கணக்கெடுப்பில் கூறப்பட்டுள்ளது. ஒப்பீட்டளவில் இது பிரதான ஊடகங்களின் பயன்பாட்டைவிட அபரிவிதமான வளர்ச்சியாகும். அந்தவகையில், சகல நிறுவனங்களும் சமூக ஊடகங்களை தங்களை தேவைக்கேற்றவாறு தற்போது பயன்படுத்தி வருகின்றன.

அதற்கேற்ப தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை பேஸ்புக், இன்ஸ்டாகிராம், டுவிட்டர் மற்றும் யூடியூப் போன்ற சமூக வலைத்தளங்களில் தனது உத்தியோகபூர்வ கணக்கின் மூலம் தனது சேவையை மேம்படுத்தி வருகின்றது. இதன் அடுத்தகட்டமாக நுகர்வோர் சேவையை மேம்படுத்தும் நோக்கில், வட்ஸ்அப் செயலி மூலம் தானியங்கி தகவல்களை வழங்கும் சேவையை ஆரம்பித்துள்ளது. 2022 சர்வதேச நீர் தினத்தில் ஜனாதிபதி மூலம் இச்சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வட்ஸ்அப் தானியங்கி அரட்டை 011 2044800 என்ற தொலைபேசி இலக்கத்தை கையடக்கத் தொலைபேசியில் பதிவுசெய்த பின்னர், குறித்த இலக்கத்துக்கு "Hi" என்று அனுப்புவதன் மூலம் தானியங்கி முறையில் சேவைகளை பெற்றுக்கொள்ளலாம். இந்த வட்ஸ்அப் சேவையை தெற்காசியாவில் நுகர்வோருக்குமுதலாவதுஅறிமுகப்படுத்திய பயன்பாட்டு நிறுவனம் என்ற பெருமையை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை தனதாக்கிக் கொண்டுள்ளது.

இச்சேவைமூலம் நீர்க்கசிவு, சேவை முறைப்பாடுகள், நீர்மானி முறைப்பாடுகள், கட்டணப் பட்டியல் விசாரணை, புதிய இணைப்புகள், நீர்க்கட்டணம் செலுத்துதல், கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் பவுசர் சேவைகள் போன்றவற்றை வீட்டிலிருந்துவாறே விரல்நுனியில் உடனுக்குடன் மேற்கொள்ளலாம். சிங்களம், தமிழ், ஆங்கிலம் போன்ற மும்மொழிகளிலும் இச்சேவையை பயன்படுத்தலாம்.

சகலருக்கும் பரீட்சயமான வட்ஸ்அப் செயலி மூலம் 60% தகவல்கள் பரிமாற்றம் செய்யப்படுகின்றன. இதனை அடிப்படையாகக்கொண்டு வட்ஸ்அப் செயலி மூலம் நுகர்வோர் தங்களது சேவையை இலகுவாக பெற்றுக்கொள்வதற்கான வழிவகைகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் அலுவலகங்களுக்கு சென்று நேரத்தை செலவிட வேண்டிய தேவை இல்லாமலாக்கப்பட்டுள்ளது.

0112044800 என்ற வட்ஸ்அப் இலக்கத்துக்கு "Hi" என்று அனுப்பியவுடன், மொழியை தெரிவுசெய்யுமாறு கூறப்படும். நீங்கள் விரும்பிய மொழியை தெரிவுசெய்தால், அடுத்ததாக தற்போதைய பாவனையாளரா என கேட்கப்படும். அதற்கு நீங்கள் ஆம் என்றால், சேவை தொடர்பான பட்டியல் வரும். உதாரணமாக உங்கள் வீட்டு நீர்மானியில் கசிவு இருந்தால், நீர்க்கசிவு என்பதை தெரிவுசெய்யவும். அடுத்ததாக கசிவின் வகை, கணக்கிலக்கத்தை அனுப்பவும்.

அதற்கடுத்து, உங்கள் விபரங்களை உறுதிப்படுத்திய பின்னர் Google Map மூலம் உங்கள் முகவரியை தெரியப்படுத்தவும். அதன்பின் நீர்க்கசிவு புகைப்படத்தை அனுப்பினால் உங்களுக்கு முறைப்பாட்டு இலக்கமொன்று வழங்கப்படும். முறைப்பாட்டின் தற்போதைய நிலைமைய கண்டறிவதற்கான இணையத்தள இணைப்பும் கிடைக்கப்பெறும். அத்துடன் குறுந்தகவல் (SMS) மூலமும் உங்கள் தொலைபேசிக்கு விபரம் அனுப்பிவைக்கப்படும்.

அதன்பின், உங்கள் பிரதேசத்துக்குரிய அலுவலக பொறுப்பாளர் (OIC) அவலுவலகத்துக்கு குறித்த முறைப்பாடு உடனடியாக அனுப்பிவைக்கப்படும். அதன்பின் குறித்த அலுவலகத்தின் ஊழியர்கள் உங்கள் வீடுகளுக்கு வருகைதந்து நீர்க்கசிவை சரிசெய்து தருவார்கள். குறித்த வேலை செய்துமுடிக்கப்பட்ட பின், உங்கள் கையடக்கத் தொலைபேசிக்கு குறுந்தகவல் மூலம் அறிவிக்கப்படும். இதன்மூலம் அலுவலகத்துக்கு செல்லாமல், வீட்டிலிருந்தவாறே உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு நேரத்தை சேமித்துக்கொள்ளலாம்.

செயலிகள் (Apps)

நுகர்வோர் மற்றும் ஊழியர்களின் சேவையை மேம்படுத்தும் நோக்கில் பல செயலிகள் (Apps) இச்சபையினால் உருவாக்கப்பட்டுள்ளன. இவை தொடர்பான விபரங்களை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் உத்தியோகபூர்வ சமூக வலைத்தளங்களை பின்தொடர்வதன் மூலம் தகவல்களை உடனுக்குடன் அறிந்துகொள்ள முடியும்.

Facebook: NWSDB
Instagram: nwsdb_official
Twitter: NWSDB Official
YouTube: National Water Supply and Drainage Board.

பிறவ்ஸ் முஹம்மட்...
ஊடகப்பிரிவு, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை.

நாட்டின் அமைதி, நல்லிணக்கத்துக்கு சமூகங்களுக்கிடையில் புரிந்துணர்வு அவசியம்

நாட்டில் அமைதியையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கு எல்லா சமூகங்களுக்கிடையிலும் புரிந்துணர்வு ஏற்படுத்தப்படல் வேண்டும். அத்துடன் பெரும்பான்மையின மக்கள் சிறுபான்மை மக்களுக்கு எதிராகக் கொண்டுள்ள அல்லது வேண்டுமென்றே இனரீதியாக முன்னெடுக்கின்ற எல்லாக் காரியங்களும் உடன் நிறுத்தப்படல் வேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவைத் தலைவர் கலாநிதி ஜெஹான் பெரேரா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில் முன்மொழிவுகளைச் செய்து வருகின்ற சமாதானப் பேரவையின் தலைவரும் புத்திஜீவியுமான கலாநிதி ஜெஹான் பெரேரா, முன்னைய ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை ஆராந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக உச்ச நீதிமன்ற நீதியரசர் துலிப் நவாஸ் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்பாக இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த ஆணைக்குழு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் கூடியது. அச்சமயமே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஆணைக்குழுத் தலைவரான உச்ச நீதிமன்ற நீதியரசர் துலிப் நவாஸ் தலைமையில் கூடிய இவ்வமர்வில் ஆணைக்குழுவின் ஏனைய அங்கத்தவர்களான முன்னாள் பொலிஸ் மாஅதிபர் சந்திரா பெர்னாண்டோ, யாழ்ப்பாண மாநகர சபையின் முன்னாள் மேயர் லோகேஸ்வரி பற்குணநாதன், முன்னாள் அரச அதிபர் நிமல் அபேரத்ன உட்பட சட்டமாஅதிபர் திணைக்கள அலுவலகர் ஒருவரும் அங்கு பிரசன்னமாயிருந்தனர்.

இவ்வாணைக்குழு முன்பாக அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில், உண்மை கண்டறியும் ஆணைக்குழுவின் சிபாரிசுகளை இவ்வாணைக்குழு பரிந்துரைப்பதற்கு முன்வருமானால் அதனைத் தான் வரவேற்பவதாகக் கூறினார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில், அப்படியானதொரு கட்டமைப்பினை நிறுவுவதற்கு எல்லா மக்களது அங்கீகாரத்தினையும் சம்மத்தினையும் பெறல் வேண்டும்.

தென்னாபிரிக்காவில் இனப்பிரச்சினை தொடர்பான விசாரணைகளும் தீர்வுகளும் நாட்டில் வாழும் அனைத்து மக்களும் அறிந்துகொள்ளக்கூடிய வகையில் திறந்த வெளியரங்கில் தொலைக்காட்சி மூலம் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டன. இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு தேடும் முயற்சிகளில் அவ்வாறானதொரு முறைமை அறிமுகப்படுத்தப்படுவது நல்லது. நமது நாட்டில் நியமிக்கப்படும் ஆணைக்குழுக்கள் அனைத்தினதும் சாட்சியங்கள் மூடிய அறையில் தான் இடம்பெறுகின்றன. இம்முறைமையில் மாற்றங்கள் கொண்டு வரப்படல் வேண்டும்.

தென்னாபிரிக்காவில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு செய்தது போன்று எல்லாக் கட்சியினரும் இதற்கு ஆதரவு நல்க வேண்டும். அதேநேரம் இது என்ன நோக்கத்திற்காக உருவாக்கப்படுகின்றதோ அந்நோக்கம் தொடர்பிலும் மக்கள் மத்தியில் புரிந்துணர்வினை ஏற்படுத்துதல் வேண்டும்.

ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாக தேசிய சமாதானப் பேரவையின் தலைவர்

புலம் பெயர்ந்த தமிழர்களும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் ஒன்றாகக் கலந்துரையாடி அவர்களின் நல்லிணக்கத்துடன் இந்நாட்டில் சமாதானத்தையும் புரிந்துணர்வினையும் ஏற்படுத்துதல் வேண்டும். அதிகாரப் பரவலாக்கல் யோசனை உடனடியாக முன்னெடுக்கப்படல் வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் 47 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. அவற்றில் 11 நாடுகள் கடந்த ஆண்டு இலங்கைக்கு ஆதரவு நல்கின. இம்முறை 06 நாடுகளே ஆதரவளிக்கவிருப்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

எமது நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இன்றைய காலகட்டத்தில் இவ்வாறான சூழ்நிலையை எதிர்கொள்வதானது, நாம் மீண்டும் பின்நோக்கிச் செல்லவே வழிவகுக்கும். எமது நாடு குறித்து சர்வதேச மட்டத்தில் பிழையான பார்வைகளை நாம் எதிர்நோக்கலாம். கடந்த காலத்தில் சில அரசியல்வாதிகள் இனரீதியாக செயல்பட்டதன் விளைவாகவே இவ்வாறதொரு நிலைமையும் பிரச்சினைகளும் ஏற்பட வழிவகுத்துள்ளன.

கடந்த 25 வருட காலப்பகுதியில் இந்நாட்டில் ஆட்சிக்கு வந்த அரசியல் தலைமைகள் பல ஆணைக்குழுக்களை நியமித்துள்ளன. அவ்வாணைக்குழுக்கள் முன்மொழிந்துள்ள பரிந்துரைகள் கிடக்கில் போடப்பட்டுள்ளன. அவற்றை சில கட்சிகள் இனவாதமாகத் தூக்கிப் பிடிப்பதனால் அவ்வறிக்கைகளுக்கு இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளன. இந்நாட்டின் தேசிய கீதத்தினைக் கூட சிறுபான்மை மக்கள் தமிழ் மொழியில் கேட்பதற்கும் பாடுவதற்கும் தடை விதித்தார்கள்.

ஆனால் இந்நாட்டிலுள்ள பிரதான அரசியல் கட்சிகள் இணைந்து தமிழ், முஸ்லிம் மற்றும் மலையக மக்களின் அதிகாரப் பரவலாக்கல் உள்ளிட்ட பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதோடு அவர்களது உரிமைகளையும் கலந்தாலோசித்து வழங்க முன்வருதல் வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அஷ்ரப் ஏ சமத்...
(தெஹிவளை கல்கிஸ்ஸ விஷேட நிருபர்)

உலகில் மேன்மையான தொழில்களுள் முதன்மையானது ஆசிரியர் தொழிலே!

சர்வதேச ஆசிரியர் தினத்தில் ஜனாதிபதி வாழ்த்துச் செய்தி

உலகையும் மனிதகுலத்தையும் வழிநடத்தும் வழிகாட்டியாக ஆசிரியர் தொழில் காணப்படுவதனால் இது உலகின் மேன்மையான தொழில்களுள் முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது சர்வதேச ஆசிரியர் தின செய்தியில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஆசிரியர் என்பவர் ஞானம் மற்றும் உள்ளம் ஆகியவற்றின் கலவையாகும். ஆசிரியப் பணி என்பது ஒரு தொழில் அல்ல. அது சேவைக்கு அப்பாற்பட்ட ஒரு பொறுப்பாகும். அதனால்தான் ஆசிரியர், சமுதாயத்தில் உயர்வாகக் கருதப்படுகிறார் . இப்படிப்பட்ட பெருமைக்குரிய பணியை ஆற்றிவரும் ஆசிரியரை போற்றும் வகையில் உலக ஆசிரியர் தினத்தை கொண்டாடுகிறோம்.

அரசாங்கம் என்ற வகையில், ஆசிரியர் மற்றும் ஆசிரியர் பணிக்கான எமது பொறுப்புகளை நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ளோம். கல்வி அமைச்சராக நான் பணியாற்றியபோது ஆசிரியர் பணியின் கௌரவத்தை பாதுகாக்கும் நோக்கத்துடன் செயற்பட்டேன். அரசியல் அடிப்படையிலான ஆசிரியர் நியமனத்தை இடைநிறுத்தவும், கல்வியியல் கல்லூரி முறைமையை உருவாக்க நடவடிக்கை எடுத்ததையும் நினைவு கூறுகின்றேன். ஆசிரியர்களுக்கு நவீன உலகத்துடன் இணைவதற்கான வாய்ப்பை அளிக்கும் வகையில் நான் அவர்களுக்கு ஆங்கில மொழியை கற்பதற்கான விசேட பயிற்சியை ஏற்பாடு செய்தேன். மாணவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க அரசாங்கம் திட்டமிடும் இவ்வேளையில், மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கும் பொறுப்பை ஏற்றுள்ள ஆசிரியர்கள், தங்களின் பொறுப்பை சரியாக நிறைவேற்றுவார்கள் என நம்புகிறேன். அனைத்து ஆசிரியர்களுக்கும் உயர்வான ஆசிரியர் தின வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விநியோகம்...

தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டதாக பெற்றோலிய விநியோகஸ்தர்கள் சங்கத்தின் செயலாளர் கபில நாஒட்டுன்ன குறிப்பிட்டார்.

அதற்கமைய, அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் நேற்று முதல் உரியவாறு எரிபொருள் விநியோகிக்கப்படும் என அவர் கூறினார்.

இதனிடையே, கொழும்பு உள்ளிட்ட சன நெரிசல் மிக்க பல பகுதிகளிலுள்ள சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் இல்லை என (04) அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்தது.

நேற்று முதல் தொலைபேசி...

கடந்த முதலாம் திகதி முதல் சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி (SSCL) நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதன் காரணமாக இந்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தொலைதொடர்பு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

புதிய வரி 2.5% ஐ சேர்க்கும் போது, தொலைக்காட்சி சேவைகள், முற்கொடுப்பனவு மற்றும் பிற் கொடுப்பனவு கட்டணப் பொதிகள் திருத்தப்பட்டுவதாக நிறுவனங்கள் அறிவித்தன. புதிய கட்டண விபரங்கள் தத்தமது அதிகாரப்பூர்வ இணையதளங்களில் வெளியிடப்படுமென்றும் தொலைதொடர்பு சேவை வழங்குநர்கள் அறிவித்துள்ளனர்.

'கோபா' தலைமைப் பதவி...

கணக்குகள் தொடர்பான குழு நேற்று முதல் தடவையாக பாராளுமன்ற கட்டிடத்தில் கூடியுள்ளது. அதன் போதே அக் குழுவின் தலைவராக கபீர் ஹாசிம் எம் பி ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஆளும் கட்சியின் பிரதான கொரடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நேற்றுக்காலை சபையில் விசேட கூற்றொன்றை முன்வைத்து கருத்து தெரிவிக்கையில், ஜனாதிபதி மற்றும் பிரதமரின் ஆலோசனைக்கமைய அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுவின் (கோபா) தலைவராக எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிமை நியமிப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது என்றும் அது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார். அதனையடுத்து நேற்று கூடிய மேற்படி குழுவின் அமர்வின் போது அவர் அக்குழுவின் தலைவராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சுற்றுலா பயணிகளுக்கு ...

திட்டமிட்டு மேற்கொண்டு வருவதாக அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ பாராளுமன்றத்தில் தெரிவித்தார். எந்த தரப்பினரும் குழப்பாவிட்டால் எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் எதிர்பார்க்கும் எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு வரவழைக்க முடியும். அதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வாய்மூல விடை க்கான வினாக்கள் வேளையில் சம்பத் அத்துகோரள எம்பி எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப்பதில் அளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்:

சுற்றுலாத் துறையை ஊக்குவிக்க வேண்டும். சுற்றுலாப் பயணிகளை அதிகளவில் நாட்டுக்கு வரவழைக்க வேண்டும் என கூறுவோரே மறுபுறம் பாராளுமன்றத்தை முற்றுகையிடும் நடவடிக்கைகளிலும், நாட்டில் மக்களுக்கு உணவில்லை, பாராளுமன்றம் இல்லை எரிபொருள் இல்லை, என வெளிநாடுகளில் திட்டமிட்ட பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

வீடொன்றுக்குள் சிக்கிய...

வீடொன்றுக்குள் சிக்கிய சிறுத்தைப்புலி, சுமார் 05 மணிநேர போராட்டத்தின் பின்னர் பாதுகாப்பாக மீட்கப்பட்டது.

ரந்தெனிகல மிருக வைத்தியசாலையின் அதிகாரிகள் குழுவொன்றும், நுவரெலியா வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளும் இணைந்தே, சிறுத்தைப்புலிகளை பிடிப்பதற்கான நடவடிக்கையில் இறங்கினர். இந் நடவடிக்கை வெற்றிகரமாக முடியும் வரை பிரதேசத்துக்கு தேவையான பாதுகாப்பை திம்புளை – பத்தனை பொலிஸார் வழங்கினர். சுமார் 04 அடி நீளமான, ஒரு வயதான இந்த ஆண் சிறுத்தைப் புலி, நாயொன்றை வேட்டையாட வந்தவேளை, வீட்டின் பின்பகுதியிலுள்ள அறைக்குள் விழுந்து அதற்குள் சிக்கியிருக்கலாமென அதிகாரிகள் தெரிவித்தனர். மீட்கப்பட்டுள்ள சிறுத்தை, ரந்தெனிகல மிருக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. அதன் உடல் நிலை பரிசோதிக்கப்பட்ட பின்னர், குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அது பாதுகாப்பான வனப்பகுதியில் விடுவிக்கப்படுமென அதிகாரிகள் தெரிவித்தனர்.

தேசிய பேரவையிலிருந்து ...

வெளியேறியுள்ள நிலையில் அதற்கு பதிலாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதி பொறுப்பாளரும் எம்.பி.யுமான மருதபாண்டி ராமேஷ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி உட்பட நடைமுறை பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் அரசாங்கத்தினால் அண்மையில் தேசிய சபை உருவாக்கப்பட்டதுடன் அந்த சபையின் தலைவராக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன செயற்பட்டு வருகின்றார். பாராளுமன்றம் நேற்றுக்காலை 9.30மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் கூடியது. வழமையான பணிகளையடுத்து சபாநாயகர் அறிவிப்பின்போதே சபாநாயகர் இதனை சபையில் அறிவித்தார்.

அது தொடர்பில் சபாநாயகர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய சபையிலிருந்து ஜீவன் தொண்டமான் எம்.பி. விலகியுள்ளார். அவரது வெளியேற்றத்தினால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு மருதபாண்டி ராமேஷ்வரன் எம்.பி. நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன், பாட்டலி சம்பிக்க ரணவக்க எம்.பி.யும் தேசிய சபையின் உறுப்பினராக இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன கடந்த செப்டெம்பர் 20 ஆம் திகதி தேசிய சபையை உருவாக்குவது தொடர்பான பிரேரணையை சபையில் முன்வைத்த நிலையில் அது ஏகமனதாக சபையில் அங்கீகரிக்கப்பட்டது. இந்த தேசிய சபையில் 35 க்கும் மேற்படாத எம்.பி.க்கள் உறுப்பினர்களாக நியமிக்கப்படவுள்ளனர். இதில் பலர் ஏற்கனவே நியமிக்கப்பட்டு விட்ட நிலையிலேயே தற்போது புதிதாக சம்பிக்க ரணவக்க எம். பி உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழகங்களில் பகிடிவதைக்கு ...

எடுக்கப்படுமென பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

சபாநாயகர் தலைமையில் நேற்று (05) புதன்கிழமை நடைபெற்ற பாராளுமன்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவை பதவி விலக்கிய எமக்கு வேந்தரை பதவி விலகச் செய்வது பெரியதொரு விடயமல்ல என பேராதனை பல்கலைக்கழகத்தில் ஒரு பிரிவினர் அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக பேராதனை பல்கலைக்கழக வேந்தர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்துள்ளார்.

பல்கலைக்கழகங்களில் பகிடிவதைக்கு அப்பாற்பட்ட பல கொடுமைகள் இடம்பெறுகின்றன.பல்கலைக்கழகத்துக்குள் அடிப்படைவாதம் பாசிசவாதம் உள்ளிட்ட பல முறையற்ற செயற்பாடுகளும் இடம்பெறுகின்றன.

பல்கலைக்கழகத்தின் முதலாம் ஆண்டு மாணவன் கைக்கடிகாரம் அணிந்து கொண்டு பல்கலைக்கழகத்துக்கு வரக் கூடாது. முதலாம் ஆண்டு மாணவி சீத்தை துணியிலான ஆடை அணிய வேண்டும். காதணி, மாலை ஆகியவற்றை அணியக் கூடாதென பகிடிவதைகள் இடம்பெறுகின்றன.

ஜனநாயகம் தொடர்பில் பலர் தமக்கு ஏற்றால்போல் வரைவிலக்கணம் செய்துக்கொள்ளலாம். வீடுகளை எரித்து,வன்முறை சம்பவங்களில் ஈடுப்பட்டவர்களை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய பின்னர் அவர்களுக்கு ஒரு மணி நேரத்தில் பிணை வழங்கப்பட்டதை கைத்தட்டி வரவேற்றமை ஜனநாயகமல்ல. பல்கலைக்கழக மாணவர்கள்,விரிவுரையாளர்கள் மற்றும் பல்கலைக்கழக வேந்தர்கள் ஆகியோரின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பு பாதுகாப்பு அமைச்சுக்கு உண்டு. அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமென்றார்.

லிட்ரோ Gas விலைகள்...

சிலிண்டரின் விலை 107 ரூபாவினாலும், 2.3 கிலோ சிலிண்டரின் விலை 48 ரூபாவினாலும் குறைக்கப்பட்டுள்ளதாகவும், புதிய விலை நேற்று (5) நள்ளிரவு முதல் அமுலுக்கு வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இந்தப் புதிய விலை மாற்றத்தால் ரூ.4,551 ஆக இருந்த 12.5 கிலோ எரிவாயு சிலிண்டரின் விலை ரூ.4,280 ஆக குறைந்துள்ளது. 1,827 ரூபாவாக இருந்த 05 கிலோ சிலிண்டரின் விலை 1, 720 ரூபவாகவும், 848 ரூபாவாக இருந்த 2.3 கிலோ சிலிண்டரின் விலை 800 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

உபயோகிப்போருக்கு எதிராக...

அமைந்துள்ளது. அவ்வாறு குடியிருப்போரை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை பிரதேச பொறியியலாளர்கள் மற்றும் ரயில்வே பாதுகாப்பு அதிகாரிகள் மேற்கொள்வர் என்றும் தெரிவித்தார்.

அல்லது ரயில்வே பொது முகாமையாளர் அவர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் கவனம் செலுத்துவார் என்றும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் கோகிலா குணவர்தன எம்பி எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

ரயில்வே திணைக்களத்துக்கு சொந்தமான காணிகளில் குத்தகை ஒப்பந்தம் இல்லாமல் சட்டபூர்வற்ற ரீதியில் குடியிருப்பது மற்றும் அதனை உபயோகிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.

ரயில்வே திணைக்களத்துக்கு சொந்தமான சொத்துக்களை முகாமைத்துவம் செய்வது தொடர்பில் அமைச்சரவை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்காக விசேட நிறுவனம் ஒன்றை ஏற்படுத்தி செயற்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பாரம்பரியமாக ரயில்வே திணைக்களத்துக்கு சொந்தமான இடங்களில் குடியிருப்போர் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்காக அந்த இடங்களை உபயோகிப்பவர்கள் என இரண்டு பகுதியாக அவர்களை பார்க்க வேண்டி உள்ளது. அது தொடர்பில் ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்காக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் தலைமையில் அமைச்சரவை உப குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும் ரயில்வே திணைக்களத்துக்கு சொந்தமான இடங்கள் முகாமைத்துவம் செய்யப்படும் அதே வேளை அந்த இடங்களை துஷ்பிரயோகம் செய்வதற்கு ஒரு போதும் இடமளிக்க முடியாது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட வாசுதேவ நாணயக்கார எம்.பி:

நீண்ட காலமாக ரயில்வே காணிகளில் குடியிருப்போர் தொடர்பில் மாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா? அவர்களுக்கு வேறு இடங்களில் குடியிருப்புகள் வழங்கப்படுமா? அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா? என கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதில் அளித்த அமைச்சர் அவ்வாறானவர்களுக்கு மாற்றி வழி ஒன்று ஏற்படுத்தப்படும் என்றும் பதிலளித்தார்.

நாட்டின் உள் விவகாரங்களில்...

இலங்கைக்கு இப்போது தேவைப்படுவது பொருளாதார சீர்திருத்தங்கள் மாத்திரமே என்றும் அவர் கூறியுள்ளார்.

பொருளாதார சீர்திருத்தங்கள் குறித்து இலங்கைக்கு கற்றுக் கொடுக்கும் நிபுணத்துவம் ஐக்கிய நாடுகளின் உரிமைகள் பேரவைக்கு இல்லையென்றும் வெளிவிவகார அமைச்சர் கூறியுள்ளார். எனினும், பொருளாதார சீர்திருத்தங்களில் நிபுணத்துவம் பெற்றவர்கள் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி என்பனவே என்று அவர் தெரிவித்துள்ளார்,

சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரிலிருந்து சூம் தொழில் நுட்பம் ஊடாக விசேட செய்தியாளர் மாநாட்டை அமைச்சர் அலி சப்ரி நேற்று இலங்கை நேரப்படி 11 மணியளவில் நடத்தினார். இதன்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அமைச்சர் தொடர்ந்தும் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,

இலங்கை சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் கடன் மறுசீரமைப்பு நிபுணர்களுடன் இணைந்து பொருளாதார சீர்திருத்தங்களுக்கான கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை இலங்கையை முன்னோக்கி நகர்த்துவதற்கு இடமளிக்காமல் பலவந்தமாக இலங்கையை தமது நிகழ்ச்சி நிரலில் வைத்திருப்பதாகக் கடுமையாகச் சாடிய அவர், அது இலங்கையின் உள்விவகாரங்களில் தேவையற்ற தலையீடுகளை மேற்கொள்வதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

மனித உரிமைகள் பேரவையில் மேற்குலக நாடுகள் எவ்வாறான அழுத்தங்களைப் பிரயோகித்தாலும் நாட்டின் இறைமை மற்றும் அரசியலமைப்பை எவ்வகையிலும் காட்டிக்கொடுக்கப் போவதில்லையென இலங்கை வலியுறுத்தியது. சர்வதேச மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது அமர்வில்அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், கனடா, ஜேர்மனி உள்ளிட்ட பலம்வாய்ந்த நாடுகள், இலங்கை தொடர்பான பிரேரணையொன்றை முன்வைத்துள்ளன. இந்தப் பிரேரணையில் இலங்கைக்குப் பாதகமான சரத்துகள் காணப்படுவதனால் அதனை கடுமையாக எதிர்ப்பதாக தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, எந்தவொரு நிலையிலும் நாட்டை காட்டிக் கொடுப்பதில்லை என்பதில் இலங்கை உறுதியாக இருப்பதாகவும் கூறினார்.

இலங்கை தொடர்பில் மேற்குலக நாடுகள் முன்வைத்துள்ள பிரேரணை, இலங்கையின் அரசியலமைப்பை மீறியிருக்கும் அதேநேரம் எமது இராணுவ வீரர்களை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த முயற்சிப்பதாகவும் அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார். மேற்குலக நாடுகள் முன்வைத்துள்ள பிரேரணையை நிராகரிப்பதாகக் குறிப்பிட்ட அமைச்சர், மனித உரிமைகள் விடயத்தில் இலங்கை என்ன செய்தாலும் சில புலம்பெயர் அமைப்புகள் திருப்தியடையாதென்றும், அவர்கள் தனித்தனி அரசியல் குழுக்களாக செயற்பட்டு அவர்களின் அரசியல் பலத்தை காட்டுவதாகவும் அவர் தெரிவித்தார். மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர், "ஜெனீவா மாநாட்டில் பலம் வாய்ந்த நாடுகள் ஒன்றுகூடி இலங்கைக்கு எதிரான பிரேரணையை சமர்ப்பித்துள்ளன. இலங்கை தொடர்பாக பல்வேறு சந்தர்ப்பங்களில் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டன. அது தொடர்பான தீர்மானங்களுக்கு உள்நாட்டுப் பொறிமுறை மூலம் பதில் வழங்க முயற்சித்த போதும் அதில் சில நாடுகள் திருப்தியடையவில்லை. 2009 ஆம்ஆண்டு யுத்த வெற்றியின் பின்னர் முன்னாள் எல்.ரீ.ரீ.ஈ உறுப்பினர்கள்12,194 பேருக்கு இலங்கை அரசாங்கம் புனர்வாழ்வளித்து சமூகமயப்படுத்தியது .அவர்கள் பொருளாதார உதவிகளையே கேட்டனர். நாட்டின் இறையாண்மையைக் காப்பதற்காகசுமார் 25,000 இராணுவ வீரர்கள் உயிர்தியாகம் செய்துள்ளனர். அவர்களுடன் சுமார் 1000 இந்திய இராணுவ வீரர்களும் உயிரிழந்துள்ளனர். இராணுவம் பயன்படுத்தி வந்த 94 சதவீதமான நிலங்கள் மீண்டும் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. ஐக்கிய இராச்சியம் மற்றும் கனடா தலைமையிலான மேற்குலக நாடுகளிலுள்ள புலம்பெயர் தமிழர்கள் இதில் திருப்தியடையாமல் தமது அரசியல் பலத்தைப் பயன்படுத்தி எமது நாட்டுக்கு எதிராகச் செயற்படுகின்றனர். இவ்வருட 51 ஆவது அமர்வுக்கு இலங்கை தொடர்பான பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்தப் பிரேரணை தொடர்பில் மாநாட்டில் எத்தகைய தீர்மானம் எடுக்கப்பட்டாலும் இலங்கையின் அரசியலமைப்புக்கு முரணாக நாம் செயற்படமாட்டோம். இந்தப் பிரேரணைகளில் இலங்கையின் அரசியலமைப்புக்கு எதிரான பல விடயங்களுள்ளன. அதனடிப்படையில் அதிலுள்ள 08 ஆம் சரத்துடன் உடன்பட முடியாது. நாங்கள் அதனை முழுமையாக எதிர்க்கின்றோம். இலங்கையின் இராணுவ வீரர்கள் எந்த நாட்டுக்கும் செல்லமுடியாத வகையில் இப் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. யுத்தம் தொடர்பில் எமது நாட்டுக்கு எதிராக மற்ற நாடுகள் சட்ட நடவடிக்கை எடுப்பதை ஏற்க முடியாது. எமது இராணுவ வீரர்களை இலக்கு வைத்தே அவர்கள் இவ்வாறான பிரேரணைகளை கொண்டுவந்துள்ளனர். இந்தப் பிரேரணையின் ஊடாக எமது இராணுவ வீரர்களை சர்வதேச நீதிமன்றம் முன் நிறுத்தவோ வெளிநாட்டு நீதிபதிகளை இலங்கைக்கு அழைத்து வவே நேரிடும். ஆனால் அதனை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

சர்வதேச மனித உரிமைகள் பேரவையில் 47 நாடுகள் அங்கம் வகிக்கின்றன . அதில் 38 நாடுகள் அண்மையில் இலங்கைக்காக குரல் கொடுத்திருந்தன. எனினும் அந்த நாடுகளுக்கு வாக்களிக்கும் உரிமை இல்லை. இருப்பினும் அவர்கள் அனைவரும் இணைந்து எமக்கு ஆதரவளிப்பதாக கூறியுள்ளனர். மேற்கத்தேய நாடுகள் அரசியல் ரீதியாக மிகவும் பலம்வாய்ந்தவை இது எமது அரசாங்கத்துக்கு எதிரானதோ அல்லது எமது அரச தலைவருக்கு எதிரானதோ அல்ல என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். கடந்த 2009 ஆம் ஆண்டு முதல்,ஆட்சியில் யார் இருந்தாலும் இவ் விடயத்துக்கு எதிராக பல்வேறு யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இது ஒட்டு மொத்த நாட்டையும் பாதிக்கக் கூடிய விடயம். இதனால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாம் எமது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்துவருகிறோம். பொருளாதார மறுசீரமைப்புகள் குறித்தும் அங்கு விவாதிக்கப்பட்டது. யாராவது எமது பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தினால், அதற்கு எதிராக சட்டம் செயற்படுத்தப்படுமென்பது எமக்குத் தெரியும். பொருளாதாரம் தொடர்பில் செயற்படும் அதிகாரம் சர்வதேச நாணயநிதியத்திடமே உள்ளது. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பொருளாதார நிபுணர்கள் இல்லை. அதனால் தான் இப்பிரேரணைகளுக்கு நாம் கொள்கையளவில் எதிரானவர்களாக இருக்கின்றோம். இப்படியே தொடர்ந்தால் நாளடைவில் கிரிக்கெட் விவகாரங்கள் தொடர்பிலும் ஜெனீவாவில் பேசப்படும். இதனால் இந்தப் பிரேரணையை நாம் எதிர்க்கின்றோம். இவை தொடர்பில் நாம் தூதரக மட்டத்திலும் பேச்சு நடத்தியுள்ளோம். இவ்விடயம் தொடர்பில் அரச மட்டத்தில் செல்வாக்குச் செலுத்தப்பட்டு வருகிறது. எமக்கு ஆதரவாக வாக்களிக்கத் தயாராக இருக்கும் நாடுகளிடம் சென்று இந்தப் பிரேரணைக்கு ஆதரவளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. எனவே, கடந்த தடவையுடன் ஒப்பிடுகையில் இம்முறை வாக்குகளின் எண்ணிக்கை குறைவடையலாம். பாதிக்கப்பட்டவர்கள் யாராவது இருந்தால் அவர்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் தயாராக உள்ளது. அதனால் உண்மையைக் கண்டறியும் பொறிமுறையொன்றை துரிதமாக முன்னெடுக்க எதிர்பார்க்கின்றோம். இத்தகைய பொறிமுறையொன்றை உருவாக்க அரசாங்கத்தால் முடியும். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு, பரணகம ஆணைக்குழு என்பவற்றின் அறிக்கைகளும் இதுதொடர்பில் பரிந்துரைகளை முன்வைத்துள்ளன. இந்தப் பொறிமுறையினூடாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள தரப்பினருக்கும் கூட தங்களை விடுவித்துக் கொள்ள வாய்ப்புள்ளது என்றார்.

முல்லைத்தீவு கடற்றொழிலாளரின் நியாயமான...

சுருக்குவலை பாவனை உள்ளிட்ட சட்டவிரோத மீன்பிடி மற்றும் வெளிமாவட்டத்தினரின் வருகை உள்ளிட்ட பல விடயங்களை முன்வைத்து ஒரு தரப்பினர் ஆரப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகி்றனர்.

சுருக்குவலை பாவனை அவசியமென மற்றுமொரு தரப்பினரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதேவேளை அதிகாரிகள் மாற்ற வேண்டுமென்றும் அதிகாரிகளை மாற்றக்கூடாதென மற்றொரு தரப்பும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் ஏற்பட்ட குழப்பம் பொலிஸாரின் தலையீட்டினார் தடுக்கப்பட்டது.

இந்த விடயம் தொர்பாக அமைச்சரால் நியமிக்கப்பட்ட குழு ஆராயும் வரை இரு தரப்பும் அமைதியை கடைப்பிடிக்க வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் மீனவர்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

இன்று முல்லைத்தீவுக்கு விஜயம்செய்யும் குழுவினர் நிலைமையை ஆராய்ந்து அமைச்சரிடம் அறிக்கை சமர்ப்பித்ததன் பின்னர் எதிர்வரும் 12 ஆம் திகதி கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முல்லைத்தீவுக்கு நேரடியாக கள விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை ஆராயவுள்ளதுடன் மீனவர்களுடனும் பேச்சு நடத்தவுள்ளார்.

எரிபொருள் கிடைக்காத நிலையில் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் தொழிலுக்கு சென்று வருகின்ற நிலையில் கடலில் இடம்பெறும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் காரணமாக முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் தொழிலுக்கு செல்லும் மீனவர்களான தமது நிலைமையை புரிந்து கொள்ளாத அதிகாரிகள் சட்டவிரோத தொழிலுக்கு உடந்தையாகவுள்ளதாகவும் இவ்வாறான அதிகாரிகள் தமக்கு தேவையில்லை எனவும் அவர்களை உடனடியாக மாற்றம் செய்து தமக்கான ஒரு தீர்வினை வழங்குமாறு வலியுறுத்தியும் போராடி வருகின்றனர்.

கடந்த 3 ஆம் திகதி காலை கடற்தொழில் நீரியல் வள திணைக்கள உத்தியோகத்தர்கள் அனைவரையும் உள்ளே செல்ல அனுமதிக்காத போதிலும் பின்னர் அனுமதித்தனர். தமது கோரிக்கைகள் அடங்கிய கடிதத்தை தேசிய கடற்றொழில் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்துள்ளதுடன் தமக்கான தீர்வுகள் கிடைக்கும் வரையில் தமது போராட்டம் தொடரும் என அறிவித்த மீனவர்கள் கடற்தொழில் நீரில்வள திணைக்களத்தின் நுழைவாயிலுக்கு அருகில் கூடாரம் அமைத்து தொடர் போராட்டத்தில் மீனவர்கள் தற்போதும் ஈடுபட்டு வருகின்றனர்.

அரசியலில் பிரவேசிக்கும் திட்டம்.....

ஊடகமொன்றின் கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். தான் அரசியலில் பிரவேசிப்பதாக இருந்தால் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்ற போதே அவ்வாறு செய்திருப்பேன் எனவும் அவர் கூறியுள்ளார்.

கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றதன் பின்னர் அரசியலில் இணைந்து கொள்ளுமாறு தனக்கு அழைப்பு வந்ததாகவும், ஆனால் அந்த வாய்ப்பை நிராகரித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களில் ரொஷான் மஹாநாம பங்கேற்றிருந்ததால் அவர் அரசியலில் பிரவேசிக்கவுள்ளதாக ஊகங்கள் எழுந்திருந்தன என்பதுக் குறிப்பிடத்தக்கது.

எதிரணியின் நிலைப்பாட்டை ஆராய்ந்து...

இந்த அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார். 22ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் ஆளும் தரப்பில் இருந்து எதிர்க்கட்சிக்கு சென்ற குழு ஒரு கருத்தையும், எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட ஏனைய கட்சிகள் மற்றொரு கருத்தையும் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளன. 22ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் முதன்முதலில் எடுத்துள்ள நிலைப்பாட்டுக்கு முற்றிலும் மாற்றமான நிலைப்பாட்டை எடுத்துள்ள நிலையில் இது தொடர்பில் ஜனாதிபதிக்கு தொடர்ச்சியாக சுட்டிக்காட்டப்பட்டது. இந்தநிலையிலே பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கு ஜனாதிபதி மேற்கண்டவாறு அறிவித்துள்ளதாக ஜனாதிபதி அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தமிழ் சேவை ஒழுங்கு செய்த நவராத்திரி விழா நேற்று (05)கூட்டுத்தாபனத்தின் முனிதாஸ கலையகத்தில் இடம்பெற்றது. பூஜைகள் மற்றும் கலாசார நிகழ்வுகளின் பின்னர், குத்துவிளக்கு ஏற்றப்பட்டு மதுரகீதங்கள் இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது. நிறுவனத் தலைவர் ஹட்சன் சமரசிங்க குத்துவிளக்கை ஏற்றி வைத்தார். இதன்போது தென்றலின் விஷேட அபிமானிகள் ஐவர் கௌரவிக்கப்பட்டனர். நிந்தவூர் உசனார் சலீமுக்கு டவர் நிதிய பணிப்பாளர் சபை உறுப்பினரும், இ,ஒ,கூட்டுத்தாபன தமிழ் சேவை ஆலோசகருமான புரவலர் ஹாஸிம் உமரும், கீதா சவரியப்பனுக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் பிரிவு ஆலோசகர் கலாபூஷணம் ஏ,மகேந்திரனும், மணிமேகலை வரதராஜன், பிரபல பாடகி எஸ். கலாவதி ஆகியோருக்கு பணிப்பாளர் நாயகம் நளின்நிஷங்கவும், கந்தையா கலீபனுக்கு ரவி ஜுவலர்ஸ் முகாமையாளர் பிரேமும் சின்னங்கள் வழங்கி கௌரவித்தனர்.

நவராத்திரி விழாவை முன்னிட்டு கொழும்பு 13, ஜெம்பட்டவீதி அருள்மிகு ஸ்ரீ முனீஸ்வரர் முத்துமாரியம்மன் ஆலயத்தில் செவ்வாய்க்கிழமை விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன. சர்வசாதகம், சர்வபோதகம் பிரம்மஸ்ரீ விஷ்வ நாராயண குருக்களின் பங்குபற்றுதலுடன் சாரதா நவராத்திரி விழாவும் நவாரண ஸ்ரீ சக்கர பூஜையும் நவசக்தி மஹா ஹோமமும் கடந்த 26ம் திகதி ஆரம்பித்தது. அதனைத் தொடர்ந்து தொடர்ச்சியாக ஒன்பது நாட்கள் பூஜை வழிபாடுகள் நடைபெற்றுவந்த நிலையில் நவ சக்தி ஹோமம் பூர்த்தி நேற்று ஆலயத்தில் நடைபெற்றது. ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சிவனேச குருக்கள் உள்ளிட்ட சிவாச்சாரியார்கள் பூஜை வழிபாடுகளை நடாத்தினார்கள். கனடா டொரண்டோ ஸ்ரீ வரசித்திவிநாயகர் ஆலய முதல்வர் சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள் மற்றும் அவரது பாரியார் தம்பதியினரின் ஷஷ்டியப்த பூர்த்தி மணிவிழா கௌரவிப்பும் இதன்போது இடம்பெற்றது. துர்க்கை,லக்ஷ்மி,சரஸ்வதி ஆகிய முப்பெரும் தேவியருக்கு வசந்த மண்டப அலங்கார சிறப்பு தீபாராதனைகள் கடந்த ஒன்பது நாட்கள் இடம்பெற்றன. படம் மொஹமட் நசார்

அநுராதபுரத்துக்கு விசேட சொகுசு ரயில் சேவை 08ஆம் திகதி ஆரம்பம்

அநுராதபுரம் வழிபாட்டு தலங்களுக்கு வழிபாடுகளில் கலந்து கொள்ளச்செல்லும் பக்தர்களின் வசதிகருதி ரயில்வே திணைக்களத்தினா சொகுசு ரயில் சேவையொன்று எதிர்வரும் 08ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளதாக புகையிரத திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கொழும்பு கோட்டையில் இருந்து அனுராதபுரம் வரையான இந்த சொகுசு ரயில் சேவை எதிர்வரும் 08ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதோடு அன்றைய தினம் முற்பகல் 9.20 மணிக்கு கொழும்பு கோட்டையில் இருந்து பயணத்தை ஆரம்பிக்கும் எனவும் புகையிரத திணைக்களம் அறிவித்துள்ளது.

கம்பஹா,வெயாங்கொட, பொல்கஹவெல ரயில் நிலையங்களில் மாத்திரம் இந்த ரயில் நிறுத்தப்படுவதோடு பிற்பகல் 1.00 மணியளவில் அநுராதபுரம் ரயில் நிலையத்தை சென்றடையும்.

அதன்படி அவ் ரயிலில் பயணிக்கும் பயணிகளுக்கு அன்றைய தினம் அநுராதபுரத்தில் உள்ள வணக்கஸ்தலங்களை தரிசிக்க சந்தர்ப்பம் கிடைப்பதோடு மறுநாள் முற்பகல் ஸ்ரீ மகாபோதி அருகில் நடைபெறும் பூஜையிலும் கலந்து கொள்ள முடியும்.

அதன்பின்னர் 09 ந் திகதி மாலை 5 மணிக்கு அனுராதபுரம் ரயில் நிலையத்திலிருந்து கொழும்பை நோக்கி பயணத்தை ஆரம்பிக்கும் சொகுசு ரயில் அன்று இரவு 10 மணியளவில் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தை வந்தடையும். இச்சேவை வார இறுதி நாட்களில் நடைபெறும்.

பொருளாதாரத்தை ... (03ஆம் பக்கத் தொடர்)

என்றும் அமைச்சர் தெரிவித்தார். 2022ஆம் ஆண்டுக்கான தொடர்ச்சியான செலவீனங்களைக் கருத்தில் கொண்டு, 2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் எவ்வாறு வரிச் சீர்திருத்தங்கள் செய்தாலும், இதில் பாதியளவுதான் ஈட்ட முடியும், இதுவே நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய யதார்த்தம் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அரச ஊழியர் சம்பளம் மற்றும் ஓய்வூதியம், அரசு வழங்கும் மானியங்கள் மற்றும் பொதுக் கடனுக்கான வட்டிக்கு பெரும் செலவுகள் ஏற்படும், அத்தகைய செலவுகளை ஈடுகட்ட இந்த நாட்டில் எந்த வருமானமும் உருவாக்கப்படவில்லை, மேலும் ஒவ்வொரு ஆண்டும் நடப்புக் கணக்கில் பற்றாக்குறை உள்ளது. 3,245 பில்லியன் ரூபா மேலதிக ஒரு பாரிய வரவு செலவுத் திட்ட இடைவெளியை உருவாக்கும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த இடைவெளியை போக்க, 1977 க்குப் பின்னர் , நாட்டிலுள்ள ஒவ்வொரு அரசாங்கமும் கடன் வாங்கியது, உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் வாங்கிய கடன்கள் தொடர்ந்து கடன்களாகவும் வட்டியாகவும் செலுத்தப்பட்டன, மேலும் அவர்களால் கட்ட முடியாமல் போனபோது, வாங்கிய கடனை அடைக்க அதிக கடன்களை எடுத்தனர். மேலும் நிலவும் கொவிட்19 சூழ்நிலையில், வருவாய் பற்றாக்குறையாக இருந்தது. கடனை செலுத்த முடியாது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

பல தரப்புக் கடன் செலுத்தும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாகவும், ஆனால் இருதரப்புக் கடனை செலுத்துவது நிறுத்தப்பட்டுள்ளதாகவும், அதனை செலுத்துவதற்கு பொருத்தமான தீர்வு தொடர்பில் கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதை நிறுத்துவதன் மூலம் செலவுகளை குறைக்க முடியாதெனவும், அபிவிருத்தி திட்டங்களை நிறுத்தி அபிவிருத்தி செலவுகளை குறைப்பதன் மூலம் பணத்தை சேமிக்க முடியாதெனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டு வரைவு மூலதனச் செலவீனத்தை முடிந்தவரை குறைத்து தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், தொடர் செலவீனங்களை விட மூலதனச் செலவு குறைவாகவும், அரசாங்க வருவாய் வரவுகள் தொடர் செலவீனங்களை விடவும் குறைவாகவும், பொருளாதார வீழ்ச்சிக்கு அரசியல் ரீதியாக பதில் இல்லை, பொருளாதார அறிவியலே பதிலாக உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்... (03ஆம் பக்கத் தொடர்)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட 12 பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

எவ்வாறாயினும், ஜனாதிபதி விக்கிரமசிங்கவை பிரதிவாதியாக பெயரிட்டுள்ள மனுக்களை தொடர வேண்டாம் என உச்ச நீதிமன்றம் அண்மையில் தீர்மானித்துள்ளது. தற்போதைய ஜனாதிபதிக்கு எதிராக மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலை பட்டமளிப்பு... (03ஆம் பக்கத் தொடர்)

யும், பரிசில்களையும், புலமைப் பரிசில்களையும் வழங்கவுள்ளார். உயர் பட்டப்படிப்புகள் பீடத்தைச் சேர்ந்த 185 பேர் உயர் பட்டத் தகைமைகளைப் பெறவுள்ளனர். அவர்களில் கலாநிதிப் பட்டத்தை இரண்டுபேரும், முதுமெய்யியல்மாணிப் பட்டத்தை பதினொரு பேரும், சூழல் முகாமைத்துவத்தில் முதுவிஞ்ஞானமாணிப் பட்டத்தை ஆறு பேரும், சுகாதார முகாமைத்துவத்தில் முதுவிஞ்ஞானமாணிப் பட்டத்தை ஒருவரும் முதுவியாபார நிர்வாகமாணிப் பட்டத்தை ஏழு பேரும், கல்வியியலில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழினை 157 பேரும், சுகாதார முகாமைத்துவத்தில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழினை ஒருவரும் பெறவிருக்கின்றனர். பட்டமளிப்பு விழாவுக்கு வழமைபோன்று பட்டம் பெறும் மாணவர்களுடன், பெற்றோரும் கலந்துகொள்ள வசதியேற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. பட்டம் பெறுகின்ற மாணவர்கள், மற்றும் விருந்தினர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுகொள்ளப்பட்டுள்ளனர். விழா மண்டபத்தினுள் பட்டதாரிகள், அழைக்கப்பட்ட பெற்றோர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

பதுக்கி வைக்கப்பட்டிருந்த... (03ஆம் பக்கத் தொடர்)

500 கிலோ அரிசி பதுக்கி வைக்கப்பட்டிருந்ததாகவும், ஏனைய 90 கிலோ அரிசியை தர்கா நகர் பகுதியில் பதுக்கி வைத்திருந்ததாகவும் சுற்றிவளைப்பை மேற்கொண்ட பொலிஸார் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர். சந்தேக நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென பேருவளை பொலிஸார் தெரிவித்தனர்.

மாணவர்களை ... (03ஆம் பக்கத் தொடர்)

விசாரணைகளில் ஆண் ஒருவரும் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக ஹிக்கடுவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இப் பெண் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து ஹெரோயின் போதைப்பொருளை விற்பனை செய்து வந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

முறைகேடாக பாவிப்பதை... (03ஆம் பக்கத் தொடர்)

தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தங்காலையில் 90 நாள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது 48 நாட்கள் நிறைவடைகின்றன.தடுத்துவைத்து விசாரணை நடத்தும் அளவுக்கு அவர்கள் செய்த தவறு என்ன?அத்துடன் வசந்த லியனகேவை இரவு நேரங்களில் கம்பஹா, மள்வானை என பல்வேறு பிரதேசங்களுக்கு அழைத்துச்செல்வதாகவும் அறியக்கிடைக்கின்றது. இரவு நேரத்தில் ஏன் இவர் அழைத்துச்செல்லப்பட வேண்டும்? இவ்வாறு இரவு நேரத்தில் அழைத்துச் செல்லும்போது எதாவது விபரீதங்கள் இடம்பெறலாம். திட்டமிட்டு அவரை கொலை செய்து, அவர் தப்பிச்செல்ல முற்பட்டபோது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் கூற முடியும் அதனால் இதுதொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும். அரசாங்கத்தின் பிழைகளை சுட்டிக்காட்டி, ஆர்ப்பாட்டம் செய்ய, ஊர்வலம் செல்ல நாட்டில் உரிமை இல்லையா? நாம் ஒருபோதும் வன்முறையை ஆதரிக்கப்போவதில்லை. அவர்களுக்கு எதிராக இன்னும் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படவில்லை. இது மிகவும் மோசமான நிலைமை.

ஜெனிவாவில் மனித உரிமைகள் தொடர்பில் விவாதிக்கப்படும் நிலையில் இவ்வாறான விடயங்கள் பொருத்தமானதா? ஜெனிவாவில் எமது நாட்டுக்கு எதிராக மேலும் பிரேரணைகளை காண்டுவர இது இடமளிக்கலாம் என்றும் மேலும் தெரிவித்தார்.

பேராதனை பல்கலை சம்பவம்: வன்முறைக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது

99 வீதமானோரின் மனித உரிமை தொடர்பிலேயே கவனம்

சபையில் இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன்

லோரன்ஸ் செல்வநாயகம்

பல்கலைக்கழகத்திலோ வெளி யிலோ வன்முறைக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாதெனவும் ஒருவரது மனித உரிமையை விட 99 வீதமானோரின் மனித உரிமை தொடர்பிலேயே கவனம் செலுத்தப்பட வேண்டுமென்றும் இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் பகிடிவதை சம்பவங்கள், அது தொடர்பிலான பெற்றோரின் முறைப்பாடுகள் மற்றும் அங்கு இடம் பெற்று வரும் சம்பவங்கள் தொடர்பில் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பேராதனை சம்பவங்கள் தொடர்பில் ஊடகங்களிலும் செய்திகள் வெளியிடப்பட்டு வரும் நிலையில் சபையில் நேற்று அது தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அதற்கு பதிலளிக்கும் வகையில் சபையில் தொடர்ந்தும் குறிப்பிட்ட அமைச்சர்: நாட்டில் 45 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளனர்.

அதில் ஒரு சிலரது மனித உரிமை பற்றி கவனம் மேற்கொள்வதா அல்லது 99 வீதமானோரின் மனித உரிமை தொடர்பில் கவனம் எடுப்பதா? என்பது தொடர்பில் கற்றவர்களும் நன்கு உணர்வர்.

அரசியல் நோக்கத்திலும் பல்வேறு நோக்கங்களுக்காகவும் ஒருசிலர் செயற்பட்டு வருகின்றனர். அங்கு அரசியல் தீயை மூட்ட வேண்டாமென நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

பேராதனை சம்பவங்கள் தொடர்பில் எனக்கு பெற்றோர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரிடமிருந்து 600க்கும் மேற்பட்ட குறுஞ்செய்திகள் வந்துள்ளன.

மனித உரிமையை நாம் வரவேற்கின்றோம். எனினும் குறுகிய நோக்கங்களுக்காக செயல்படுபவர்கள் மற்றும் வன்முறைகளையும் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

நடிகர் தர்ஷன் தர்மராஜுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் இறக்குவானை பகுதியிலுள்ள அன்னாராது இல்லத்திற்கு சென்று அஞ்சலி செலுத்தினார். அத்துடன் அவரது குடும்ப உறுப்பினர்களுடனும் தமது சோகத்தை பகிர்ந்துகொண்டார். இ.தொ.காவின் உபத்தலைவர் பரத் அருசாமியும் தர்சன் தர்மராஜுக்கு அஞ்சலி செலுத்தினார்.

கிழக்கின் குரல்

நூறு வயது முதியவர் பரிசு வழங்கி கௌரவிப்பு

(அக்கரைப்பற்று மத்திய நிருபர்)

அக்கரைப்பற்று பிரதேச செயலகம் ஏற்பாடு செய்த சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள் பிரதேச செயலாளர் ரீ.எம்.எம். அன்சாரின் வழிகாட்டலில் சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.பி.எம்.ஹுசைன் தலைமையில், பிரதேச செயலகக் கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில், அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்சார், நிருவாக உத்தியோகத்தர் என்.ரி.பாறூக் தலைமைபீட முகாமையாளர் எம்.பி.எம்.ஹுசைன், கருத்திட்ட முகாமையாளர் என்.ரி.மசூர், திட்ட முகாமையாளர் எம்.ஜே.எம்.நிஹ்மதுல்லாஹ், கணக்காளர் எஸ்.எல்.சர்தார்மிர்சா, உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் இசட்.ஏ.றகுமான், உதவித்திட்ட மிடல் பணிப்பாளர் ஏ.எம்.தமீம், சமுதாய அடிப்படை அமைப்பு உத்தியோகத்தர் எம்.எச்.எப்.சஜித்தா, சமுக அபிவிருத்தி உதவியாளர் எம்.ஐ.சபாயுத்தீன், வலய உதவியாளர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இதில்,அக்கரைப்பற்று 12ஆம் பிரிவைச் சேர்ந்த நூறு வயதுடைய எம்.ஐ.எம்.இஸ்மாயில் எனும் முதியோர் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

கல்முனை விகாராதிபதியின் பிணைக்கு கையொப்பமிட்டோர் வீடுகள் மீது தாக்குதல்

(காரைதீவு குறூப் நிருபர்)

கல்முனை சுபத்ரா ராமய விகாரையின் விகாராதிபதி ரன்முத்து கல சங்கரத்ன தேரர், பிணையில் விடுதலையாவதற்கு ஒப்பமிட்ட சிலரின் வீடுகள் தாக்கப்பட்டுள்ளன.நேற்று முன்தினம் (04) நள்ளிரவில் இவர்களின் வீடுகள் தாக்குதலுக்குள்ளாகின. வாள் மற்றும் கற்களால் இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

சிறுவர் துஷ்பிரயோக குற்றச்சாட்டில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட கல்முனை விகாராதிபதி சிறை வைக்கப்பட்டிருந்தார். இவர்,மூன்று தனித்தனி வழக்குகளுக்காக ரொக்கப்பிணை, சரீரப்பிணைகளில் விடுதலை செய்யப்பட்டார் இவரை விடுதலை செய்வதற்கான முயற்சிகளில், ஈடுபட்டதமிழ் தேசிய கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரன் ராஜன், நேரடியாக சிறைச்சாலைக்குச் சென்று விகாராதிபதியை அழைத்து வந்து விகாரையில் ஒப்படைத்தார்.

இவருக்கு கல்முனை நீதவான் நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை பிணை வழங்கியது. விடுதலையான விகாராதிபதி நேற்று முன்தினம் மாலை, பிரதேசத்தில் இடம்பெற்ற வாணி விழாக்களிலும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. விகாராதிபதி, விகாரைக்கு திரும்பிய இரவே, பிணையில் ஒப்பமிட்டவர்களின் வீடுகளில் தாக்குதல் நடாத்தப்பட்டன. கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயம் தொடர்பில் கல்முனை மாநகர சபை உறுப்பினர் ராஜனுடன், விகாராதிபதியும் உண்ணாவிரதமிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ வீரையடி விநாயகர் ஆலயத்தில் நவராத்திரி விழா

(பாசிக்குடா நிருபர்)

மட்டக்களப்பு பேத்தாழை வாழைச்சேனை ஸ்ரீ வீரையடி விநாயகர் ஆலயத்தில் நவராத்திரி விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

துர்க்கா, இலட்சுமி, சரஸ்வதி ஆகிய முப்பெரும் தேவிகளுடைய வழிபாடாக 9 நாட்கள் ஆலயத்தில் விஷேட பூஜைகள் நடைபெற்றன.

இறுதி நாளாகிய நேற்றைய விஜயதசமி தினம் அம்பிகை, சூரனை வதம் செய்த நாளாகும்.அந்த நன்னாளில் கன்னி வாழைமரம் நட்டு, சூரனை அழித்த கைங்கரிய நிகழ்வு ஆலயத்தில் நடைபெற்றது.

அத்துடன் வித்தியாரம்பம் எனப்படும், ஏடு தொடக்கும் ஆரம்பமானது.

அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் கேதார கௌரி விரதம்

(அன்புவழிபுரம் தினகரன் நிருபர்)

திருகோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில், நேற்று (05) கேதாரகௌரி விரதம் அனுஷ்டிக்கப்பட்டது. நேற்று புதன் கிழமை இவ்விரதம் ஆரம்பித்து 25 – 10 – 2022 செவ்வாய்க்கிழமை கூடிய அமாவாசைத் தினத்தன்று நிறைவு பெறுகின்றது. இருபத்தொரு நாள் விரதமனுஷ்டிக்க விரும்பும் அடியார்கள் ஆரம்ப தினத்தன்று சங்கற்பம் செய்து தினமும் ஆலய தரிசனம் பண்ணி இறுதி நாளன்று உபவாசமிருந்து திருக்காப்பை அணித்து கொள்ளலாம்.

இருபத்தொரு நாளும் விரதமனுஷ்டிக்க இயலாதவர்கள் விரத இறுதி நாளாகிய (25) உபவாசமிருந்து நோன்புக்கயிற்றை அணிந்து கொள்ளலாம் என ஆலயத்தின் ஆதினகர்த்தாவும் பிரதமகுருவுமாகிய பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள் தெரிவித்தார்.

ஆதிகாலம் முதல் விரதங்களிலே மிகச்சிறந்த விரதமாக ஆன்றோர்களால் இவ்விரதம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தில் விஜயதசமி தினத்தில் வித்தியாரம்பம்

(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தில் விஜயதசமி பூசையும், புதிய மாணவர்களுக்கான வித்தியாரம்பம் நிகழ்வும் அதிபர் க.செல்வராசா தலைமையில் நடைபெற்றது.மூன்று வயதிற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு விஜயதசமி தினத்தன்று வித்தியாரம்பம் செய்து வைக்கப்பட்டது.

புதிதாக தொழிற்றுறைகளை ஆரம்பிப்பவர்களும் இந்நாளில், நற்காரியங்களை ஆரம்பிப்பதை வளக்கமாகக் கொண்டுள்ளனர்.

இதற்கமைய கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தில் அதிபர் செல்வராசாவினால் மாணவர்களுக்கு வித்தியாரம்பம் செய்து வைக்கப்பட்டதுடன், சிவஸ்ரீ தனுராஜ சர்மாவினால் விசேட பூஜை வழிபாடுகளும் நடாத்தப்பட்டன. பாடசாலை வளாகத்தில் கும்பம் சொரிதலுடன் நவராத்திரி விழா நிறைவு பெற்றது.

பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களுக்கு கௌரவம்

(கல்லடி குறூப், மட்டக்களப்பு விஷேட நிருபர்கள்)

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் 2021 வருடத்தில் உயர் பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்ட மாணவர்களை கௌரவிக்கும் விழா மட்டக்களப்பு ஈஸ்ட் லகூன் விடுதியில் மிகப்பிரமாண்டமான முறையில் இடம்பெற்றுள்ளது.மட்டக்களப்பு வர்த்தகர்கள் சங்கம் இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

மட்டக்களப்பு வர்த்தக சங்க தலைவரும் சமூக சேவையாளருமான தேசபந்து முத்துலிங்கம் செல்வராஜா தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ. எம்.டபிள்யூ.ஜீ.திசாநாயக்க மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களை கௌரவித்தனர்.

பாரம்பரிய மங்கள வாத்திய இசை முழங்க அதிதிகள் மலர் மாலைகள் அணிவித்து வரவேற்கப்பட்டதையடுத்து, வரவேற்புரை, வரவேற்பு நடனம், தலைமையுரை, அதிதிகளின் விஷேட உரைகள் இடம்பெற்றன.

கடந்த வருடம் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவனை163 மாணவர்களுக்கு இதன்போது பொன்னாடை போர்த்தி, பதக்கங்கள் அணிவித்து நினைவுச்சின்னங்கள் வழங்கப்பட்டன. கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் உயிரியல் விஞ்ஞான துறையில் அகில இலங்கை ரீதியில் முதலாவது இடத்தை பெற்று மட்டக்களப்பு மாவட்டத்திற்கு பெருமை சேர்த்த மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி தேசிய பாடசாலை மாணவன் தமிழ்வாணன் துவாரகேஷ் இதன்போது விசேட நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

பொத்துவில் அல்ஹிதாயா வித்தியாலயத்தில் சிறுவர் நிகழ்வு

(எஸ்.எம்.அறூஸ்)

பொத்துவில் அல்ஹிதாயா வித்தியாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச சிறுவர் தின நிகழ்வும், ஊர்வலமும் நேற்று (05) அதிபர் எம்.எல்.எம்.அஸ்ரப் தலைமையில் இடம்பெற்றது.

ஹிதாயாபுரம் சகவாழ்வு சங்கம், பாடசாலை சமூகம் ஒன்றிணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

இந்நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

கௌரவ அதிதிகளாக பொத்துவில் பிரதேசசபை தவிசாளர் எம்.எச். அப்துல் ரஹிம், பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஐ.பிர்னாஸ் மற்றும் கல்வி அதிகாரிகள், பாடசாலை அபிவிருத்திச்சங்க பிரதிநிதிகள், சகவாழ்வு சங்கத்தின் தலைவரும், சமூக செயற்பாட்டாளருமான யூசுப் முகைடீன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

அல்ஹிதாயா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர்களான எம்.ஐ.எம்.செரீப், எம்.சி.எம்.சம்சுதீன் ஆகியோர் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் மற்றும் அதிதிகளால் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இங்கு மாணவர்களின் பல்வேறு திறமைகளும் அரங்கேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இரண்டு மாடி பல்சந்தை கட்டடத் தொகுதி திறப்பு

(அன்புவழிபுரம் தினகரன் நிருபர்)

திருகோணமலை நகராட்சி மன்றத்தால் 23 மில்லியன் ரூபா நிதியில் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடி பல்சந்தைக் கட்டிடத் தொகுதி திறப்பு விழா நேற்று (05) விஜயதசமி தினமன்று இடம் பெற்றது.

நகராட்சி மன்றத்தின் தலைவர் நா. இராஜநாயகம் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில், உபதலைவர் கா. கோகுல்ராஜ் மற்றும் செயலாளர் வெ. இராஜசேகர் உட்பட சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

இந்தக்கட்டடத் தொகுதியின் முதலாம் தளத்தில் ஒன்று கூடல் மண்டபமும்,இரண்டாவது தளத்தில் வாடகைக்கு வழங்கக் கூடிய தங்கும் அறைகளும் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக்கட்டடத் தொகுதி திருகோணமலை கடற்படைத்தள வீதியில் அமைந்துள்ளது.

சாய்ந்தமருதில் சிறியோர், முதியோர் தின நிகழ்வுகள்

(சவளக்கடை குறூப் நிருபர்)

சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் சிறுவர் மற்றும் முதியோர் தின நிகழ்வுகள் பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் தலைமையில் லீ மெரிடியன் மண்டபத்தில் நேற்று (05) இடம்பெற்றது.

இந்நிகழ்வில்,அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ. டக்ளஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

கௌரவ அதிதிகளாக அம்பாரை மாவட்ட மேலதிக அரசாங்க வி.ஜெகதீசன், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா, சாய்ந்தமருது உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ.முவஃபிக்கா, நிந்தவூர் உதவி பிரதேச செயலாளர் ஜீசான் ஆஷிக், சாய்ந்தமருது பிரதேச செயலக கணக்காளர் ஏ.ஜே.நுஸ்ரத்பானு, உதவி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட் சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் அல்ஹாஜ் ஏ.எம்.ஹிபத்துல் கரீம் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் சமுர்த்தி தலைமைப்பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சி.ஏ. நஜீம், சமுர்த்தி மகா சங்க முகாமையாளர் ஏ.எல்.யூ.ஜுனைதா, சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ்.றிபாயா, நிர்வாக உத்தியோகத்தர் ஏ.சி.எம். பஸீல், நிதி உதவியாளர் எம்.சி. முஹம்மட், சாய்ந்தமருது சிவில் அமைப்புக்கள் சம்மேளனத்தின் தலைவர் எம்.பரீட், சாய்ந்தமருது பல நோக்கு கூட்டுறவு சங்கத் தலைவர் எம்.எம் எம்.உதுமாலெவ்வை உள்ளிட்ட பாடசாலை அதிபர்கள், முன்பள்ளி மாணவர்கள், முதியோர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இதில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள், முதியோர் கௌரவிப்பு உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுளும் இடம்பெற்றன. நிகழ்வில் அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ. டக்ளஸ், மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் ஆகியோர் பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னம் வழங்கி பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக்கினால் கௌரவிக்கப்பட்டனர்.

அக்கரைப்பற்று கனிஷ்ட வித்தியாலயத்தில் நேற்று (05) சிறுவர் தின நிகழ்வுகள் இடம்பெற்றன.எம்.எச். அப்துல்கபூர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கலாசார நிகழ்வுகளுடன் ஊர்வலமும் இடம்பெற்றது.

பாண்டிருப்பு மகா வித்தியாலயத்தில் நேற்று வாணி விழா நிகழ்வுகள் இடம்பெற்றன. அதிபர், புனிதன் தலைமையில் காலை எட்டு மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கல்முனை வலயக் கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் எம்.லக்குணம்,விஷேட அதிதியாக பாடசாலை மேம்பாட்டு திட்ட இணைப்பாளர் கிருஷ்ணகுமாரி டேவிட், சிறப்பு அதிதிகளாக பிரபல வைத்தியர் கி. சுந்தரநாதன், கே. பிரகலாதன், பி.துஷானந்தன், ஆர்.ரகுராஜ், ரி. சுந்தரேசன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். கலை நிகழ்ச்சிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 ஒக்டோபர் 6
வியாழக்கிழமை

முல்லைத்தீவு வட்டுவாகல் பாலம் தாழிறக்கம்: வீதியால் பயணிப்பவர்கள் அவதானம்

புதுக்குடியிருப்பு விசேட நிருபர்

முல்லைத்தீவு மாவட்டத்தின் நகருக்குள் நுழையும் பிரதான வீதியான முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு வீதியின் முதன்மையான பாலமாக காணப்படும் வட்டுவாகல் பாலம் நீண்டகாலமாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.

பாலத்தில் அவ்வப்போது ஏற்படும் வெடிப்பு மற்றும் பாதிப்புக்கள் சீர்செய்யப்பட்டு வருகின்ற போதிலும் தற்போது பாலத்தில் ஒருபகுதியில் வீதி தாழிறங்கிய நிலையில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இவ்வீதியால் பயணிப்பவர்கள் மிகுந்த அவதானமாக செயற்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

நீண்டகாலமாக பாலம் புனரமைக்கப்படாமையால் தொடர்ச்சியாக கடற்றொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் இந்த பாலத்தினை புனரமைக்க கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் விஜயதசமி – மானம்பூ உற்சவம் நேற்றைய தினம் புதன்கிழமை காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. காலை 6.45 மணிக்கு வசந்த மண்டப பூசையுடன் இடம்பெற்று குதிரை வாகனத்தில் முருகப்பெருமான் எழுந்தருளி வெளிவீதி உலாவந்ததுடன் மானம் பூ உற்சவம் சிறப்பாக இடம்பெற்றது.
படம்: யாழ். விசேட நிருபர்

கால்நடைகளை கட்டுப்படுத்தாவிட்டால் அபராதம்

சாவகச்சேரி விஷேட நிருபர்

சாவகச்சேரி எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்பினர் காலப்போக நெல் விதைப்பினை ஆரம்பித்திருப்பதால் கால்நடை வளர்ப்போர் கால்நடைகளை கட்டி வளர்க்க வேண்டுமென எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்பின் செயலாளர் இ.தெய்வேந்திரம்பிள்ளை தெரிவித்துள்ளார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

அண்மையில் இடம்பெற்ற காலப்போகக்கூட்டத்தில் 25/09/2022 தொடக்கம் 27/02/2023 வரையான காலப் பகுதியில் கால்நடைகளை கட்டுப்படுத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.எனவே கால்நடை வளர்போர் குறிப்பிட்ட கால எல்லைக்குள் கால்நடைகளை கட்டுப்படுத்த தவறி பயிர்களுக்கு சேதம் ஏற்படும் பட்சத்தில் மாடு ஒன்றுக்கான பிடி கூலி மூவாயிரம் ரூபாய், நாள் ஒன்றுக்கான பராமரிப்பு தொகை 500 ரூபாய் மற்றும் குற்றப்பணம் 500ரூபாய் ஆகியவற்றை செலுத்திய பின்னரே கால்நடைகளை மீட்க முடியுமென மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

மன்னார் இரணை இலுப்பை குளத்தில் இஞ்சி அறுவடை விழா

மன்னார் குறூப் நிருபர்

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலக பிரிவில் மேற்கொள்ளப்பட்ட தோட்டச்செய்கை உற்பத்திப் பொருட்களின் அறுவடை நிகழ்வு நேற்று முன்தினம் (4) செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இதன்போது மன்னார் இரணை இலுப்பை குளத்தில் இஞ்சி அறுவடை விழா நடைபெற்றது.

பிரதமஅதிதியாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் கலந்து கொண்டார்.

மேலும் பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் (விரி) எஸ். உதயச்சந்திரன், மன்னார் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் க. மகேந்திரன், மன்னார் மாவட்ட செயலக பிரதான கலாசார உத்தியோகத்தர் நித்தியானந்தன் ஆகியோரும் இவ்விழாவில் கலந்து

கொண்டு சிறப்பித்தனர்.

இரணை இலுப்பை குளத்தைச் சேர்ந்த விவசாயிக்கு விவசாய திணைக்களம் வழங்கிய தூவல் நீர்ப்பாசன உபகரணம் தொகுதியின் உதவியுடன் விவசாய திணைக்களத்தின் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் அவர்களின் ஆலோசனைக்கு அமைவாக உற்பத்தி செய்யப்பட்டிருந்தது.

மேலும் வெங்காயம், பூசணிக்காய், கச்சான் கடலை, மிளகாய் உள்ளிட்டவையும் அறுவடை செய்யப்பட்டது.

மண்டைதீவு சுற்றுலா மையத்தின் செயற்பாடுகளில் மோசடி இடம்பெற்றிருப்பதாக குற்றச்சாட்டு

கோப்பாய் குறூப் நிருபர்

யாழ்.மண்டைதீவுக் கடற்கரையில் நடைமுறைப்படுத்தப்பட்ட மண்டைதீவு சுற்றுலா மையத்தின் செயற்பாடுகள் அனைத்தும் செயலிழந்த நிலையில் யாழ் மாவட்ட செயலக திட்டமிடல் துறைக்கு வழங்கப்பட்ட தகவல் அறியும் சட்டமூலத்திற்கு 3 மாதங்கள் கடந்தும் பதில் வழங்கவில்லை.

கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் அமைச்சு ஒன்றின் சுமார் 8 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் யாழ்.மாவட்ட செயலகத்தால் மண்டைதீவு சுற்றுலா மையத்தின் வேலைத்திட்டத்துக்காக நிதி விடுவிப்புச் செய்யப்பட்டது.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக வேலணை பிரதேச செயலகம் மற்றும் வேலணை பிரதேசசபை இணைந்து மண்டப சுற்றுலா மையத்தின் அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்க ஆரம்பித்த திட்டம் இதுவரை மக்களுக்கு பயனளிக்கவில்லை.

இத்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்ட கடற்பிரதேசம் ஆழம்குறைந்த கடற்பகுதியாக காணப்படுகின்றமையால் படகுச் சவாரிகளை மேற்கொள்ள அதிகாரிகள் கடல் பிரதேசத்தை எவ்வாறு தெரிவு செய்தனர்.

சாட்டி மற்றும் காரைநகர் கடற்கரைகள் சுற்றுலா பயணிகள் அதிகமாக வந்து செல்லும் பகுதியாக காணப்படும் நிலையில் ஏன் குறித்த திட்டத்தை மண்டைதீவில் செயற்படுத்தினர்.

மக்களின் வரிப்பணத்தில் அமைச்சினால் ஒதுக்கப்பட்ட சுமார் 8 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டதாக கூறப்படும் மண்டைதீவு சுற்றுலா மையத்தில் தற்போது ஒளிராத மின் குமிழ்கள் மட்டும் எஞ்சியுள்ளது .

இவ்வாறு பல குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்படும் மண்டைதீவு சுற்றுலா மையத்திற்கு ஒதுக்கப்பட்ட பல கோடி ரூபாய் நிதி மோசடி செய்யப்பட்டுள்ளதாக அறியவருகின்றது. யாழ்.மாவட்ட செயலக திட்டமிடல் பிரிவுக்கு கடந்த 6ஆம் மாதம் தகவல் அறியும் சட்டமூலத்தில் சுற்றுலா மையம் தொடர்பான கேள்விகள் எழுப்பப்பட்டன.

இவ்வாறான நிலையில் மூன்று மாதங்கள் கடந்தும் யாழ்.மாவட்ட செயலக திட்டமிடல் பிரிவால் இத்திட்டம் தொடர்பாக கோரிக்கையாளருக்கு பதில் வழங்க முடியவில்லை.

மரணச்சடங்குக்கு சென்றிருந்த வேளை வீட்டில் நகைகள் திருட்டு

யாழ்.விசேட நிருபர்

யாழ்.அராலி பகுதியிலுள்ள வீடொன்றின் கதவினை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் வீட்டிலிருந்த 06 பவுண் நகைகளை திருடி சென்றுள்ளனர். வீட்டார் மரணச் சடங்கு ஒன்றுக்கு சென்று விட்டு, வீடு திரும்பிய வேளை வீட்டின் முன் கதவு உடைக்கப்பட்டிருந்தது.

வீட்டினுள் சென்று பார்த்த போது பொருட்கள் எல்லாம் சிதறி காணப்பட்டதுடன், வீட்டில் வைத்திருந்த 06 பவுண் நகை திருட்டு போயுள்ளமை தெரியவந்துள்ளது.

வவுனியாவில் வெடிகுண்டுகள் மீட்பு

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா வேப்பங்குளத்தில் வெடிகுண்டுகள் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா வேப்பங்குளத்திலுள்ள தனியார் காணியில் அமைந்துள்ள கைவிடப்பட்ட மலசலக்கூடத்தினை புனரமைக்கும் செயற்பாட்டினை நேற்றையதினம் மேற்கொண்ட போதே குழியிலிருந்து குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன. இதன்போது 60 மில்லி மீற்றர் குண்டு, கைக்குண்டு ஒன்றும், சிறிய ரக மிதிவெடி ஒன்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

யாழ்.மாநகர சபைக்கு இரண்டு கோடி ரூபாய் பெறுமதியான தீயணைப்பு வாகனம் அன்பளிப்பு

பருத்தித்துறை விசேட நிருபர்

நொதோர்ன் தனியார் வைத்திய சாலை ஸ்தாபகர் எஸ்.பி.சாமியால் யாழ்.மாநகர சபைக்கு இரண்டு கோடி ரூபாய் பெறுமதியான தீயணைப்பு வாகனம் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டது.

நொதோர்ன் தனியார் வைத்திய சாலையில் நேற்று (05) காலை 10 மணியளவில் இடம்பெற்ற நிகழ்வில் தீயணைப்பு வாகனம் நொதோர்ன் தனியார் வைத்தியசாலை நிர்வாகத்தினரால் யாழ்.மாநகர சபைக்கு வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் நொதோர்ன் தனியார் வைத்தியசாலை நிர்வாகத்தினர், யாழ் மாநகர முதல்வர், யாழ்ப்பாண மாவட்ட செயலர், யாழ் மாநகர ஆணையாளர், யாழ். மாநகரசபை உறுப்பினர்கள் மற்றும் யாழ். வணிகர் கழக பிரதிநிதிகள், தீயணைப்பு படை பிரிவு உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

கடந்த 2020 ஆம் ஆண்டு யாழ். மாநகர சபைக்கு சொந்தமான தீயணைப்புப் படைவாகனம் விபத்தில் முற்றாக சேதமடைந்திருந்தது. யாழ் வணிகர் கழகத்தின் ஒருங்கிணைப்பில் நொதோர்ன் தனியார் வைத்திய சாலை ஸ்தாபகர் எஸ்.பி.சாமியால் வாகனம் யாழ்.மாநகர சபைக்கு கையளிக்கப்பட்டது.

இதன்போது தீயணைப்பு வாகனம் சம்பிரதாயபூர்வமாக பரிசோதித்து பார்க்கப்பட்டது.

முல்லைத்தீவில் மீனவர்கள் இரு தரப்பாக போராட்டம்; பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்தாரை பிரயோகம்

மாங்குளம் நிருபர்

முல்லைத்தீவில் இடம்பெறும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளுக்கு துணைபோகும் அதிகாரிகளை மாற்றுமாறு கோரி முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அலுவலகத்திற்கு நேற்றும் மூன்றாவது நாளாக போராட்டம் தொடர்ந்தது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மீனவர்கள் தொடர்ச்சியாக பல்வேறு வழிகளில் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக மீன்பிடி நடவடிக்கைகளுக்கு எரிபொருள் கிடைக்காமையால் பல்வேறு துன்பங்களுக்கு மத்தியில் தொழிலுக்கு சென்று வருகின்ற போதிலும் கடலில் இடம்பெறும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் காரணமாக மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் தொழிலுக்கு செல்லும் மீனவர்களான தமது நிலைமையை புரிந்து கொள்ளாத அதிகாரிகள் சட்டவிரோத தொழிலுக்கு உடந்தையாகவுள்ளனர். இவ்வாறான அதிகாரிகள் எமக்கு தேவையில்லை எனவும் அவர்களை உடனடியாக மாற்றம் செய்து தமக்கான ஒரு தீர்வினை வழங்குமாறு வலியுறுத்தி போராடி வருகின்றனர்.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் 24 சங்கங்களை சேர்ந்த மீனவர்கள் குறித்த போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில் நேற்று முல்லைத்தீவு பஸ் நிலையத்துக்கு அருகே காலை 11 மணியளவில் தென்பகுதியை சேர்ந்த சில மீனவர்கள் முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அதிகாரிகளை மாற்ற வேண்டாம் என கோரி போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இதனையடுத்து இருதரப்பினருக்கிடையில் முரண்பாடுகள் ஏற்படலாம் என்ற அச்சத்தில் பொலிஸார் போராட்டக்காரர்கள், கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அலுவலகம் நோக்கி செல்லாத வகையில் முல்லைத்தீவு இலங்கை வங்கிக்கு முன்பாக வீதித்தடையும் தொடர் போராட்டத்தில் ஈடுபடும் மீனவர்கள் போராட்டக்காரர்களை நோக்கி வர முடியாத வகையில் ஒரு வீதித்தடையையும் ஏற்படுத்தினர்.

இந்நிலையில் நேற்று அதிகாரிகளை மாற்ற வேண்டாம் என கோரிய போராட்டக்காரர்கள் இலங்கை வங்கி முன்பாக பொலிஸார் அமைத்த வீதித்தடையை உடைத்து கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அலுவலகம் நோக்கி செல்ல முற்பட்டபோது போராட்டக்காரர்கள் மீது கண்ணீர் புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகம் செய்தனர். இதனையடுத்து தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்ற மீனவர்கள் வீதித்தடையை உடைத்து செல்ல முற்பட்ட போது அவர்கள் மீதும் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகை பிரயோகம் செய்தனர் இதன்போது பாதிக்கப்பட்ட ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதன் பின்னர் கலைந்து சென்ற போராட்டக்காரர்கள் தொடர் போராட்டத்தை முன்னெடுத்தவர்கள் கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அலுவலக வாயிலில் அமைக்கப்பட்ட கொட்டகையில் போராடி வரும் அதேவேளை அதிகாரிகளை மாற்ற வேண்டாம் என்று கேட்டு போராட்டத்தை முன்னெடுத்தவர்கள் மாவட்ட செயலக முன்றலில் போராடி வருகின்றனர்.

விபத்து, அவசர சிகிச்சைப் பிரிவுகள் ஆரம்பம்

சாவகச்சேரி விஷேட நிருபர்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகள் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் சி.குமரவேல் தலைமையில் இடம்பெறவுள்ள திறப்பு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.எம்.சமன் பந்துலசேன கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

மேலும் தென்மராட்சி அபிவிருத்தி கழகத்தின் பிரித்தானிய கிளைத் தலைவர் வைத்திய கலாநிதி ஆ.புவிநாதன், கொழும்பு தெற்கு றோட்டறி கழகத்தின் சமூக சேவைகள் நிகழ்ச்சித்திட்டத் தலைவர் வே.ரமணா, சுகாதார சுதேச மருத்துவ நன்நடத்தை, சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி.மோகநாதன், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன்,தென்மராட்சி அபிவிருத்திக் கழக தலைவரும், வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரி சங்க போசகருமான பேராசிரியர் க.கந்தசாமி,வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி எச்.லியனகே, யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இணுவில் தமிழ்வேள் கந்தசுவாமி நூற்றாண்டுக் குழுவும் கொழும்புத்தமிழ்ச் சங்கமும் இணைந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை ৯.০০ மணிக்கு இணுவில் சிவகாமி அம்மன் கோவில் மண்டபத்தில் நிகழ்த்திய தமிழ்வேள் க.இ.க கந்தசுவாமி நூற்றாண்டு விழாவின் போது எடுக்கப்பட்ட படங்கள்.

நீர் நிலைகளில் முதலைகள் நடமாட்டம் குடிநீரைப் பெறுவதில் மக்கள் அச்சம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

முதலைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் ஆறுகள், குளங்கள் மற்றும் நதிகளில் நீரைப் பெறும் மக்கள் மிகுந்த அச்சத்துக்கு உள்ளாகியுள்ளனர். இப்பிரசேத்தில் தொடர்ச்சியாக பெய்த மழையையடுத்தே முதலைகள் அதிகளவு ஊடுருவியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக, இரத்தினபுரி களுகங்கை பிரதேசத்திலேயே முதலைகளின் அச்சுறுத்தல் அதிரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால், களுகங்கையில் நீரைப் பெறும் மக்கள் பெரும் சிரமத்துக்குள்ளாகி உள்ளனர்.

களுகங்கையின் தொடம்பே கொரகஎல மற்றும் பரகஹ குளியல் பாறை ஆகிய இடங்களிலேயே முதலைகளின் இந்த அச்சுறுத்தல் அதிகரித்துள்ளதாக இப்பிரதேச மக்கள் குறிப்பிடுகின்றனர்.

குடி நீரைப் பெறும் இடங்கள், நீராடும் இடங்களிலே இம் முதலைகள் நடமாடுகின்றன. இதனால், சிறுபிள்ளைகளை அழைத்து வந்து நீராட்டுவதை பெற்றோர்கள் தவிர்த்து வருவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இப்பிரதேசத்தில் நான்கு முதலைகள் நடமாடுவதாகவும் இவற்றால் எச்சந்தர்ப்பத்திலும் பொது மக்களின் உயிர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம் எனவும் அஞ்சப்படுகிறது.

மேலும், கால்நடைகளுக்கும் இம் முதலைகளால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இப்பிரதேசத்தில் வசித்து வரும் பொதுமக்கள் கழுகங்கையைத் தவிர வேறு எங்கும் குடிநீரைப் பெற முடியாதுள்ளனர். மாற்று வழி நீர்த்திட்டங்கள் இல்லாமையே இதற்கான காரணமாகும். எனவே, இவ்வாறான நெருக்கடியான நேரங்களில் பயன்படுத்தும் பொருட்டு மாற்றுத் திட்டங்களை தயாரிக்கும் படியும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். பொது மக்களின் பாதுகாப்புக் கருதி இப்பகுதியிலுள்ள முதலைகளை வேறு இடங்களுக்கு அனுப்ப அவசரமாக நடவடிக்கை எடுக்கும்படியும் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

வத்தேகம கல்வி வலயத்தின் க/வ/பாரதி தமிழ் மகா வித்தியாலயத்தில், மாணவ தலைவர்களுக்கு சின்னம் வழங்கப்பட்டது. பாடசாலை அதிபர் எஸ்,பி,செல்வராஜ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி எம்,பி,எம்,குணவர்தன மற்றும் பொலிஸ் பிரிவு அதிகாரி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை

(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)

காசல்ரீ நீர்தேக்கத்துடன் இணையும் ஹற்றன் ஓயா மற்றும் கெசல்கமுவ ஓயா ஆறுகள் பெற்றுக்கெடுத்துள்ளதால், இவற்றிலிருந்து நீர் நிரம்பி வழிவதாக தெரிவிக்கப்படுகிறது.

நீர்தேக்கத்தில் நீர் நிரம்பி வழிவதனால் காசல்ரீ ஓயா கரையோரப்பகுதிகளில் வசிக்கும் மக்களை அவதானமாக இருக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக ஒஸ்போன் தண்டுகளா மற்றும் நோட்டன் பிரதேசத்தவர்கள் அவதானத்துடன் இருக்குமாறு நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

அரச பேருந்து சேவையின்றி மாணவர்கள் அவதி

(மஸ்கெலியா தினகரன் விஷேட நிருபர்)

மஸ்கெலியா பிரதேச சபைக் குட்பட்ட பகுதியிலுள்ள மஸ்கெலிய அரச பேருந்து சேவை கடந்த ஒரு வாரமாக இடம்பெறாததால், அப்பகுதியிலுள்ள பயணிகள், பாடசாலை மாணவர்கள் மற்றும் அரச ஊழியர்கள் மிகவும் சிரமத்தை எதிர்கொள்வதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

இச்சேவை,நாளாந்தம் காலை 6.30 மணிக்கு மரே தோட்ட தேயிலை தொழிற்சாலை அருகில் இருந்து ஆரம்பித்து, பொரஸ், முள்ளுகாமம், நல்லதண்ணி, லக்ஷபான, ரிக்காடன் கிராமம், மவுஸ்சாகல, கங்கேவத்த, புரவுன்லோ தோட்ட பிரதான வீதி வழியாக மஸ்கெலியா நகருக்கு வருகிறது.

இச்சேவை ஊடாக பாடசாலை மாணவர்கள், பயணிகள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் நாளாந்த பணியை மேற்கொள்கின்றனர். இந்நிலையில், கடந்த ஒரு வார காலமாக இந்த சேவை இடம் பெறாதுள்ளது. இதனால் முன்கூட்டியே அரச பேருந்துக்கு பணம் செலுத்தி பருவகாலச் சீட்டைப் பெற்றவர்கள் பெரும் ஏமாற்றத்துக்கு உள்ளாகியுள்ளனர். இதனால், தனியார் பஸ்களில் இவர்கள் பயணிக்க நேரிட்டுள்ளது. பணம் செலுத்தி தனியார் பஸ்ஸில் சென்றாலும் குறிப்பிட்ட நேரத்தில் செல்ல முடியாத நிலை தோன்றியுள்ளது.

இது குறித்து ஹற்றன் அரச பேருந்து நிலைய பொறுப்பதிகாரியிடம் கேட்டபோது, குறித்த பேருந்து சாரதி கடந்த ஒரு வாரமாக விடுமுறையில் உள்ளதாகவும், வேறு சாரதியை ஈடுபடுத்த ஹற்றன் அரச பேருந்து நிலையத்தில் சாரதிகள் பற்றாக்குறை நிலவுவதாகவும் தெரிவித்தார்.

தவிசாளரின் நான்காண்டு நினைவு தினத்தையிட்டு இரத்ததான நிகழ்வு

(ஊவா சுழற்சி நிருபர்)

பண்டாரவளை மாநகர சபையின் முன்னாள் தவிசாளர் நலிந்த சூரியன் நான்காவது சிரார்த்த தினத்தை முன்னிட்டு இரத்ததான நிகழ்வு இடம் பெற்றது.

மாநகர சபையின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற இந்த இரத்ததான நிகழ்வை, சபையின் தவிசாளர் ஜனக் நிஸ்ஸங்க ரத்நாயக மற்றும் திருமதி.நலின் பியந்கே ஆகியோர் ஏற்பாடு செய்தனர். நிகழ்வில் பண்டாரவளை ஸ்ரீ சுப்புரமணி சுவாமி தேவஸ்தான பிரதானி, பால குகனேஸ்வர குருக்கள், ஜும் ஆப் பெரியபள்ளி வாசலின் பேஷ் இமாம் நிஸாட் மௌலவி, பௌத்தவிகாரையின் இந்திர ரத்தின தேரர் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

சிறுவர் தின நிகழ்வு

ஆ.ரமேஸ்.

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி வலப்பனை கல்வி வலையத்திற்குட்பட்ட உடப்புஸ்ஸலாவை எமஸ்ட் தமிழ் வித்தியாலயத்தில் சிறுவர் தின நிகழ்வு இடம்பெற்றது.

"சகல பிள்ளைகளுக்கும் சிறந்ததொரு எதிர்காலம்"எனும் தொனிப்பொருளில் அகரம் அறிவின் அரங்கம் அமைப்பின் பங்கேற்புடன் கடந்த (03) அன்று பாடசாலை அதிபர் திரு ப.முகுந்கமலவண்ணன் தலைமையில் இது நடைபெற்றது.

இதன்போது மாணவர்களின் விநோத நிகழ்வுகளுடன் பரிசுகள் வழங்குதல் மற்றும் கௌரவிப்பு நிகழ்வும் சிறப்பாக நடைபெற்றன.

வீட்டின் பின் பகுதியிலிருந்து சிறுத்தைப்புலி உயிருடன் மீட்பு

(நோட்டன் பிரிட்ஜ்)

வீட்டின் பின்புறத்தில் இருந்த சிறுத்தைப்புலியை நுவரெலியா வனஜீவராசிகள் அதிகாரிகள் மற்றும் இரந்தனிகல பசு வைத்திய வைத்தியர் அத்தரங்கொல பிரிதெனிய தலைமையிலான குழுவினர் மீட்டுள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட இந்த புலிக்குட்டி ரந்தனிகலவிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

வீட்டில் உள்ள நாய்களை வேட்டையாடுவதற்காக இப்பிரதேசத்திற்கு இச்சிறுத்தைப்புலி வந்திருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இப்பகுதியில், சிறுத்தைகள் நடமாட்டம் குறித்து உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென பிரதேச மக்கள் வன ஜீவராசி அதிகாரிகளிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, இப்பகுதி வீடொன்றில் விறகு வைக்கும் கூட்டில் சிறுத்தைப் புலி இருந்தது.இதனால், அப்பகுதியில் நேற்று (05) பெரும் பரபரப்பு ஏற்பட்டது. சிறுத்தைப்புலியைக் கண்ட வீட்டு உரிமையாளரும் பிரதேச மக்களும் பத்தனை பொலிஸாருக்கு அறிவித்தனர்.

இது தொடர்பில் நுவரெலியா வன ஜீவராசிகள் காரியாலயத்திற்கும் அறிவித்ததையடுத்து திம்புள்ள பத்தனை பொலிஸார் மற்றும் வனஜீவராசி அதிகாரிகள் இணைந்து குறித்த சிறுத்தை புலிக்குட்டியை உயிருடன் மீட்டனர்.

திம்புள – பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மவுண்ட்வேர்ணன் தோட்டத்தின் வட்டக்கான் பிரிவில் உள்ள வீடொன்றின் பின்பகுதியிலே இந்தச் சிறுத்தைப் புலி காணப்பட்டது.

காணாமல்போன மாணவரை தேடும் பணிகள் மும்முரம்

(எம்.ஏ.அமீனுல்லா)

காணாமல்போன பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட மாணவனை தேடும் நடவடிக்கைகள் கடந்த 03 ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்பட்டன. இருந்த போதிலும், நேற்று மாலை வரை, மாணவன் தொடர்பில் தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

விடுதியை விட்டு வெளியே வந்ததும்,இம்மாணவன் கைத்தொலைபேசியை எடுத்துச் சென்றுள்ளார். எனினும் கைத்தொலைபேசி இயங்காமல் நிறுத்தப்பட்டுள்ளதால், குறித்த மாணவனை தொடர்பு கொள்ள முடியாதுள்ளதாக தெரியவருகின்றது.

தனது மகன், இவ்வாறு காணாமல் போவதற்கு எந்த காரணமும் இல்லை எனப் பெற்றோர் தெரிவிக்கின்றனர். இது குறித்து மாணவனின் தாயார் திருமதி ஜி.எஸ்.என்.பெரேரா பேராதனை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். இந்த மாணவன் கடந்த (02) இரவு கடிதமொன்றை எழுதிவிட்டு விடுதியை விட்டு வெளியேறியுள்ளார்.

மண்சரிவில் உயிரிழந்த பெண்ணின் இறுதிக் கிரியைக்கு நிதியுதவி

(நோட்டன் பிரிட்ஜ் தினகரன் நிருபர்)

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மவுண்ட்வேர்ணன் மேற்பிரிவு தோட்டத்தில் மண்மேடு சரிந்து வீழ்ந்து உயிரிழந்த, 61 வயதுடைய மூன்று குழந்தைகளின் தாயான இராமசாமி காளியம்மாவின் இறுதி கிரியைகளுக்கு நுவரெலியா மாவட்ட இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தால் ஒரு தொகை நிதி வழங்கப்பட்டுள்ளது.

இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் நுவரெலியா மாவட்ட கிளையின் பணிப்பாளர் ரஞ்சித் அழகக்கோன், விதுர சம்பத் ஆகியோர் டிக்கோயா மாவட்ட வைத்தியசாலைக்கு சென்று சடலத்தை பார்வையிட்டதுடன் குடும்பத்தாரிடம் 25 ஆயிரம் ரூபா நிதியை வழங்கினர்.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஒரு இலட்சம் ரூபா வழங்கப்படும் நிலையில், முதற்கட்டமாக உயிரிழந்த தாயின் இறுதி கிரியைகளுக்காக. 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இறப்புச் சான்றிதழ் வழங்கிய பின்னர் மிகுதி தொகை கையளிக்கப்படவுள்ளது. மண்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ள குறித்த வீட்டிற்கும் இழப்பீடு வழங்கப்படவுள்ளதாகவும் ரஞ்சித் அழகக்கோன் தெரிவித்துள்ளார்.

பாததும்பரை பிரதேசசபை பிரிவுக்குட்பட்ட மடவளை மதீனா தேசிய பாடசாலைக்கு அருகில் செல்லும் வீதி, போக்குவரத்துக்கு போதுமானதாக இல்லாதுள்ளது. இதனால், இவ்வீதியை அகலமாக்கி தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்தக் கோரிக்கைக்கு அமைவாக பாததும்பரை பிரதேச சபையின் ரூ. 500,000/= நிதி ஒதுக்கீட்டிலும், பிரதேச மக்களின் ஒத்துழைப்புடனும் எட்டு அடி அகலம் கொண்ட வீதியாக இவ்வீதி அபிவிருத்தி செய்யப்பட்டு வருவதை படத்தில் காணலாம் (படம் பூஜாபிட்டிய தினகரன் நிருபர்)

கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு இயந்திரங்கள் விநியோகம்

(தலவாக்கலை குறூப் நிருபர்)

நுவரெலியா மாவட்டத்தில் கிராமிய கைத்தொழில்களை ஊக்குவிக்கும் நோக்கில் சிறு தொழில் முயற்சியாளர்களுக்கு இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

நுவரெலியா மாவட்ட செயலகத்தில்வைத்து, இவர்களுக்கு இவ்வியந்திரங்கள் விநியோகிக்கப்பட்டன.

தொழில் அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் தேசிய தொழில் அபிவிருத்தி திணைக்களத்தினால் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. கிராமப்புறங்களில் கைத்தொழில்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், இச்செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் இது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

நுவரெலியா மாவட்டத்தின் ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சிறு தொழில் முயற்சியாளர்களுக்கு இந்த இயந்திரங்கள் மற்றும் கருவிகள் நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட தலைமையில் வழங்கப்பட்டன.

கண்டி பொதுநூலகத்தில் நவராத்திரி விழா

(எம்.ஏ.அமீனுல்லா)

கண்டி டீ.எஸ்,சேனாநாயக்க ஞபகார்த்த பொது நூலக தமிழ் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'நவராத்திரிவிழா நேற்றுமுன்தினம் (04) காலை பொது நூலக பிரதான மண்டபத்தில் மிகச்சிறப்பாக இடம்பெற்றது. கண்டி மாநகர முதல்வர் கேசர சேனநாயக்க, தலைமையில் நடைபெற்ற இந்த நவராத்திரி விழாவில், மாநகரசபையின் பிரதி முதல்வர் இலாஹி ஆப்தீன், எதிர்க்கட்சித் தலைவர் சேனா திஸாநாயக்க, உள்ளிட்ட சபை உறுப்பினர்கள் மற்றும் சமூக சேவகர் பீ. பழனியப்பன், ஆணையாளர் ஐ. திலகரத்ன. பிராதன நூலகர் திருமதி எச். என். பி.ஹேரத், தமிழ் பிரிவு பொறுப்பாளர் ஈ.செந்தில் குமார், உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நகர்வலம்

கொவிட் தொற்றால் மரணித்தோருக்கு

பெறுமதியான உலர் உணவு

வெலிகம தினகரன் நிருபர்

கொவிட் 19 கொரோனா தொற்றால் மரணித்த வருமானம் குறைந்த பிள்ளைகள் இருக்கும் குடும்பங்களுக்கு ரூ. 8000 பெறுமதியான உலர் உணவு பொதிகளை வழங்கும் வேலைத்திட்டமொன்றை மாத்தறை மாவட்ட செயலகம் மேற்கொண்டுள்ளது.

இதுவரை மாத்தறை மாவட்ட மாலிம்பட, மாத்தறை திக்வெல்லை, தெவிநுவர, திஹகொட வெலிகம, அகுரஸ்ஸ மற்றும் கொடபொல ஆகிய பிரதேசங்களுக்குட்பட்ட பகுதிகளின் கொவிட் 19 தொற்றினால் மரணித்த வருமானம் குறைந்த 200 குடும்பங்களுக்கு இவ் உலர் உணவுப் பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

மேலும் கிரிந்தை புகுல்வல்ல, முலடியன, பஸ்கொட மற்றும் அதுரெலிய ஆகிய பிரதேச செயலகங்களுக்குட்பட்ட பகுதிகளில் கொவிட் 19 தொற்றினால் மரணித்த வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு இவ் உலர் உணவுப் பொதிகள் எதிர்வரும் தினங்களில் பகிர்ந்தளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்த) சட்டம்

திருத்தங்களுடன் அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் அனுமதி

பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலத்துக்கு உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கமைய திருத்தங்களுடன் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சுசார் ஆலோசனைக் குழு அதன் தலைவர் அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தலைமையில் (04) நடைபெற்றபோதே இதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

இந்த பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலத்தின் ஊடாக பெற்றோலிய இறக்குமதி, வழங்கல்

மற்றும் விநியோகம் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இந்தியன் ஒயில் நிறுவனம் ஆகியவற்றுக்கு மேலதிகமான தரப்பினருக்கு இடமளிக்கப்படும். இந்தக் குழுக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான நாலக்க பண்டார கோட்டேகொட, எம்.எஸ்.தௌபீக் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கொழும்பு தமிழ்ச் சங்க நவராத்திரி விழா கடந்த திங்கட்கிழமை மாலை சங்கத்தின் உப தலைவர் திருமதி ஜெயந்தி விநோதன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட கொழும்பு மாநகரசபை மேயர் ரோஸி சேனாநாயக்கவை மலர் கொத்து வழங்கி கௌரவிப்பதை படத்தில் காணலாம். படப்பிடிப்பு: எஸ்.எம்.சுரேந்திரன்

ஏற்றுமதி, இறக்குமதி வரி திருத்தம் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வாக அமையாது

தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பி சாணக்கியன் இராசமாணிக்கம்

லோரன்ஸ் செல்வநாயகம்

ஏற்றுமதி இறக்குமதி வரியில் திருத்தம் மேற்கொள்வதால் மாத்திரம் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியாது என சாணக்கியன் இராசமாணிக்கம் எம்.பி சபையில் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதை விடுத்து போராட்டத்தில் ஈடுப்பட்டவர்களை அடக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கருத்து சுதந்திரத்துக்கு எதிராக அரசாங்கம் செயற்பட்டால் அதன் பிரதிபலனை வெகு விரைவில் பெற்றுக் கொள்ள நேரிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற நிதியமைச்சின் வரிச் சலுகைகள் மற்றும் சில வரிச் சட்டங்கள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சட்டத்தை திருத்தம் செய்வதால் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியாது.கடந்த ஓரிரு மாதங்களில் ஏற்றுமதி வருமானம் அதிகரிக்கப்பட்டுள்ளது என அரசாங்கம் குறிப்பிடுகிறது. எனினும் ஏற்றுமதி அதிகரிக்கப்படவில்லை. மாறாக ஏற்றுமதி கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் மாத்திரம் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியாது.

2019ஆம் ஆண்டுக்கு பின்னரான காலப்பகுதியில் அரசாங்கத்தின் தவறான பொருளாதார முகாமைத்துவ தீர்மானங்களினால் அந்நிய செலாவணி மற்றும் சுற்றுலாத்துறை வருமானம் வீழ்ச்சியடைந்தது.

சட்ட திருத்தங்கள் செய்வதால் மாத்திரம் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியாது, கொள்கை ரீதியில் நடைமுறைக்கு பொருத்தமான திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும் என்றார்.

லெட்சுமனார் சஞ்சய்க்கு தேசபந்து விருது

இலங்கை சாதனையாளர் மன்றத்தின் வருடார்ந்த கலை, கலாசார, சமூக துறையில் சாதனை படைத்தவர்கள் மற்றும் விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. இந்நிகழ்வில், சமூக சேவைகளை அதிகமாக முன்னெடுத்தமைக்காக லெட்சுமனார் சஞ்சய்க்கு இலங்கை சாதனையாளர் மன்றத்தால் தேசபந்து விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு

கொழும்பு 15, மிஜயசெவன பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் பிரஜா பொலிஸ் அதிகாரி இணைந்து ஏற்பாடு செய்த சிறுவர் துஷ்பிரயோகம் தவிர்த்தல் மற்றும் பெண்கள் பாதுகாப்புக்கான விழிப்புணர்வு கூட்டமும் மென்பந்து வீரர்களுக்கு கேடயம் வழங்குதல், சமூக சேவைகள் போன்ற பல நிகழ்வுகளை கொழும்பு மாதம்பிட்டிய நவஹேன முல்லயில் அமைந்துள்ள ரன்திய உயன அடுக்கு மாடி வீட்டுத்திட்ட வரவேற்பு மண்டபத்தில் நடாத்தியது. இந் நிகழ்வில் கொழும்பு மாவட்ட செயலக உயர் அதிகாரிகள் சமூக பொலிஸ் பிரிவு சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தின் அதிகாரி நிமாந்திக ஆகியோர் அறிவுரை வழங்கினர். இந்நிகழ்வில் மிஜய செவன பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி கமல் பண்டார, சமூகபொலிஸ் அதிகாரி பெர்னாண்டோ உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர்.

போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட கணவன் மனைவி கைது

அநுராதபுரம் தினகரன் நிருபர்

ஹெரோயின் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த கணவரையும் மனைவியையும் அநுராதபுரம் வலய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய 04ஆம் திகதி இரவு 7.45 மணியளவில் அநுராதபுரம் யாழ்ப்பாணம் சந்தி பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின்போது சந்தேக நபர்களை கைது செய்துள்ளதுடன் 315g, 700mg ஹெரோயின் போதைப் பொருள்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் 28 வயதுடைய மிஹிந்தலை இஹலகம பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இலங்கை விமானப்படை ஏற்பாட்டில் உலக சிறுவர் தின நிகழ்வுகள்

"எங்கள் கனவு உலகம்" என்ற தொனிப்பொருளின் அடிப்படையில் 2022 ம் ஆண்டுக்கான உலக சிறுவர் தின கொண்டாட்ட நிகழ்வுகள் இலங்கை விமானப்படையின் சேவா வனிதா பிரிவின் தலைவி திருமதி.சார்மினி பத்திரனவின் வழிகாட்டலின் கீழ் ரத்மலான விமானப்படைத்தளத்தில் அமைந்துள்ள அருங்காட்சியக வளாகத்தில் (02) விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரனவின் தலைமையில் நடைபெற்றது

இதன்போது விமானப்படை சேவா வனிதா பிரிவினால் " குவன் ரந்தரு சித்தம் 2022 " எனும் சித்திரப்போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய சிறுவர்களுக்கும் விமானப்படை தளபதி பரிசில்களை வழங்கிவைத்தார். மேலும் இந்த நிகழ்வில் விமானப்படை பணிப்பாளர்கள் மற்றும் அதிகாரிகள் சேவா வனிதா பிரிவின் அங்கத்தவர்களும் கலந்துகொண்டனர்.

அக்கரை யுனைட்டட் அணி வெற்றி

பேருவளை சீனன்கோட்டை எகொடவத்தை 'டைய்டான்' விளையாட்டு கழகம் ஒழுங்கு செய்த அணிக்கு 11 பேர் கொண்ட மாபெரும் கிரிக்கட் சுற்றுப்போட்டி அண்மையில் சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் சுமார் 30 க்கும் மேற்பட்ட விளையாட்டு கழகங்கள் பங்குபற்றின. இப்போட்டியில் இதுவரை சிறந்த விளையாட்டு அணியாக தடம்பதித்த "ஸ்டேடியம் A" அணியை அக்கர யுனைட்டட் விளையாட்டுக்கழகம் தோல்வியடையச் செய்து 2ஆம் சுற்றுக்கு தெரிவு செய்யப்பட்டதாக அணியின் தலைவர் யூசுப் காஸிம் தெரிவித்தார். இப்போட்டியில் எமது அணி சிறப்பாக விளையாடி எமது பிரதேசத்துக்கு பெருமை சேர்த்துள்ளதாகவும் சிறப்பாக விளையாடிய அணி வீரர்களை அனைவரும் பாராட்டியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

'ஆரோக்கியமான கல்வி மையம்' அநுராதபுரத்தில் திறந்து வைப்பு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அநுராதபுரம் விஜேபுர பகுதியில் அமைந்துள்ள சுகாதார பயிற்சி நிலையத்தில் ஆரோக்கியமான தொலைதூர கல்வி மையம் வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத்தினால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

தற்போது நிலவும் உடல் உபாதைகளை தவிர்ப்பதற்கான ஒரு மருத்துவ பயிற்சி திட்டத்தை உருவாக்குவதே குறித்த மையத்தின் நோக்கமாகும்.

ஆசிய அபிவிருத்தி வங்கி சுகாதார அமைப்பினை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் மூலம் இதற்காக 13 மில்லியன் ரூபாவை செலவு செய்துள்ளது.

ஆரம்ப சுகாதார சேவை, தாய் மற்றும் சேய் சுகாதார பாதுகாப்பு, தொற்று மற்றும் தொற்றா நோய்கள், டிஜிட்டல் சுகாதாரம், ஆண், பெண் சமூக சேவைகள், சிறுவர் பாதுகாப்பு மற்றும் நிவாரண நலத்திட்டம்,

முகாமைத்துவம் மற்றும் ஆராய்ச்சி போன்ற பாடங்கள் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்கள் என்பன இங்கு செயல்படுத்தப்படுகிறது.

நாடளாவிய ரீதியில் எந்த பிரதேசத்தில் பயிற்சி திட்டம் நடைபெற்றாலும் இந்த மையத்தின் ஊடாக தொடர்புகளை மேற்கொள்ள வாய்ப்புண்டு. தற்போதைய எரிபொருள் பற்றாக்குறை, கால நேரம் என்பனவைகளை இதன் மூலம் முகாமைத்துவம் செய்து கொள்ள முடியும்.

காலியில் மீலாத் ஊர்வலம்

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் பிறந்த தினமான மீலாத் தினத்தை முன்னிட்டு காலி மீலாத் இயக்கம் 15 ஆவது தடவையாகவும் ஏற்பாடு செய்துள்ள மீலாத் ஊர்வலம் எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 7.30 மணிக்கு காலி சோலை ஸிந்தா ஷாஹ் மாதர் பள்ளிவாயல் முற்றவெளியில் இருந்து ஆரம்பமாகும். இந்த ஊர்வலத்தில் உலமாக்கள், குர்ஆன் மத்ரஸா மாணவர்கள் உட்பட பெருந்திரளானோர் கலந்து கொள்ள உள்ளதாக ஊர்வல ஏற்பாட்டாளர் மௌலவி பீ.எம். சாகிர் ஹுஸைன் தெரவித்தார்.

இலங்கை வங்கி

CRM இயந்திரமொன்றை நிறுவுவதற்கு பொருத்தமான கட்டடம் நீண்டகால குத்தகை அடிப்படையில் தேவைப்படுகின்றது.

கிம்மன்துடாவ சந்தி, பண்டாரகம

உத்தேசக் கட்டடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- கட்டடத்தின் முகப்பு குறைந்தபட்சம் 8 அடிகளைக் கொண்ட பிரதான வீதிக்கு முகப்பாக அமைந்திருத்தல் வேண்டும்.
- குறைந்தபட்ச நிலப்பரப்பு 8′x14′ (112 சதுர அடிகள்) அடிகளாக இருத்தல் வேண்டும்.
- 30 அம்பியர் மின்சார விநியோகம் இருத்தல் வேண்டும்.
- வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதுமான இடவசதி இருத்தல் வேண்டும்.
- மக்கள் இலகுவில் வந்து செல்லக் கூடிய மனதுக்குகந்த இடத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கட்டட உரிமையாளர் கட்டட வரைபடம், நிலஅளவையியல் திட்டம், உரிமைத்துவ உறுதி போன்ற ஆவணங்களின் பிரதிகள் என்பவற்றை எதிர்பார்க்கும் மாதாந்த வாடகையையும் குறிப்பிட்டு 14 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"CRM அலகு – கிம்மன்துடாவ"** எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

உதவிப் பொது முகாமையாளர்
(மேல் மாகாணம் தெற்கு),
இலங்கை வங்கி,
மேல் மாகாணம் - தெற்கு மாகாணக் காரியாலயம்
இல: 175, ஹைலெவல் வீதி, நுகேகொடை
தொலைபேசி: 0112 809 125 / 0112 809 126
தொலைநகல்: 0112 809 238
மின்னஞ்சல்: bocwps.@boc.lk

1975 BOC CALL CENTRE www.boc.lk
AA- (Ika) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

சுகாதார அமைச்சு

ஆதார வைத்தியசாலை - அக்கரைப்பற்று

வழங்குநர்களை பதிவு செய்தல் – 2023

கீழ்வரும் பொருட்கள், சேவைகளைப் பெற வழங்குநர்களை பதிவு செற்வதற்கான விண்ணப்பங்கள் உற்பத்தியாளர்கள்/ முகவர்கள் / வரையறுக்கப்பட்ட இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபனங்கள் / அரசினால் அங்கீகரிக்கப்பட்ட வியாபார தாபனங்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட தனியார்களிடமிருந்தும் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் " தவிசாளர், பெறுகைக்குழு, ஆதார வைத்தியசாலை, அக்கரைப்பற்று" என்ற முகவரிக்கு 2022.11.09ம் திகதி அல்லது அதற்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்குநர்களை பதிவு செயதல் - 2023" என குறிப்பிட்டு அனுப்பப்படல் வேண்டும்.

தொ. இல	பொருட்கள்/ வழங்கல்
01	எல்லா வகையான காகிதாதிகளும் ii. நிழற்ப்பிரதி செய்யும் இயந்திரத்துக்கான மை கொள்கலன்கள் (cartridges), iii. இலத்திரனியல் அச்சு இயந்திரத்துக்கான மை கொள்கலன்கள் (Toner), கணனி அச்சு இயந்திரத்துக்கான பட்டிகள் (ribbons) மற்றும் ஏனைய தேவையான பொருட்கள்.
02	மேசைகள், கதிரைகள், அலுமாரிகள் மற்றும் எல்லா வகையான அலுவலக தளபாடங்களும் (உலோக /உருக்கு, மற்றும் மரம்)
03	கணனிகள், laptops, அச்சு இயந்திரங்கள் (Printers), நிழற்பிரதி செய்யும் இயந்திரங்கள் (Photocopiers), தொலைநகல் இயந்திரங்கள் (fax), மற்றும் உதிரிப்பாகங்களும்.
04	கட்டிடப் பொருட்கள், i. நீர் குழாய் இணைப்புப் பொருட்கள், மின் இணைப்பு உபகரணங்கள் ii. அலுமினிய கட்டிடப்பொருட்கள், iii. இரும்புப்பட்டம், பார் மற்றும் ஏனையவை.
05	ஆய்வுகூட பரிசோதனை பொருட்களும் திரவியங்களும்.
06	ஆரோக்கிய நுகர்வுப்பொருட்கள் (சவர்காரம், சலவைத்தூள், விம், மின்கலம், கை மற்றும் கார் கழுவும் திரவம், கழிவுப்பை, நுளம்பு வலை தொற்று நீக்கிகள்) பொதுவான களஞ்சிய பொருட்கள்.
07	i. வாகன பற்றரிகளும் ii. டயர்களும் ரியூப்களும்
08	இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள், பிளாஸ்ரிக் அறிவித்தல் பலகைகள், அச்சு வேலைகள் மற்றும் வில்லை உறைகள்.
09	எல்லா வகையான துணிகளும் திரைச்சீலைகளும்.
10	சப்பாத்துக்களும் (shoes) சத்திர சிகிச்சைக்கூட சப்பாத்துக்களும்.
11	தீந்தை, தீந்தை பூசுவதற்கான உபகரணங்கள், கலவைகள், தூரிகைகள்.
12	வைத்தியசாலைக் கட்டில்கள், பெட்டகங்கள், (Lockers) தள்ளுவண்டிகள், (Trolleys) மெத்தைகள், கால் தட்டிகள் போன்ற விடுதிகளுக்குத் தேவையான ஏனைய பொருட்கள்.
13	காற்றுச் சீராக்கிகளும் குளிர் சாதனப் பெட்டிகளும்.
14	மின்னணு பொருட்கள் மற்றும் வீட்டு உபயோகப்பொருட்கள்
	சேவைகளும் திருத்தங்களும்
15	கண்காணிப்பு கமறா திருத்தவேலையும் பராமரிப்பும்.
16	500KVA மின் பிறப்பாக்கி திருத்தவேலையும் பராமரிப்பும்.
17	குளிர்சாதனப் பெட்டி,சலவை இயந்திரம் திருத்தவேலை.
18	i.கணனி ii. தொலைநகல் இயந்திரம் iii. தையல் இயந்திரம் iv. பிரதியெடுக்கும் இயந்திரம் மற்றும் Duplicator v. தொலைக்காட்சி போன்றவற்றுக்கான திருத்த வேலைகளும் பராமரிப்பு.
19	ஆய்வுகூட, சத்திர சிகிச்சை மற்றும் இணைந்த வைத்தியசாலை மருத்துவ உபகரணங்கள் திருத்த வேலை.
20	நீர் ஏற்றும் இயந்திரம் மற்றும் எல்லா மின் உபகரணங்களுக்குமான திருத்தம்.
21	கட்டிடம் திருத்தல் மற்றும் புதுப்பித்தல் வேலை.
22	கட்டிட மின் இணைப்பு திருத்த வேலை.
23	அலுமினிய பொருத்து வேலை.
24	மரத் தளபாட வேலைகள்
25	வாகனப் பராமரிப்பு. (servicing)
26	வாகனத் திருத்த வேலை.
27	இறந்த உடல்களை கொண்டு செல்வதற்கான வாகனங்களை வாடகைக்கு வழங்குதல்.
	கொள்வனவு
28	வைத்தியசாலையிலிருந்து பாவனைக்குதவாதென ஒதுக்கப்பட்ட பிளாஸ்ரிக் போத்தல்கள், சேலையின் போத்தல்கள், பிளாஸ்ரிக் பொருட்கள், 5L, 10L பிளாஸ்ரிக் கலன்கள், மரத்துண்டுகள், இரும்பு, கணனி, குளிரூட்டி போன்ற உபகரணங்கள், காட்போட்.

சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரம் அல்லது ஆதார வைத்தியசாலையினால் விநியோகிக்கப்படும் விண்ணப்பத்தின் ஊடாக பதிவு மேற்கொள்ளப்பட வேண்டும். ஒவ்வொரு பதிவிற்கும் தலா ரூபா 1000.00 வீதம் செலுத்த வேண்டும். செல்லுபடியான வியாபார பதிவுச்சான்று, வரி பதிவுச்சான்று, மீளளிக்கப்படாத தொகையினை செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும். வைத்திய அத்தியட்சகர், ஆதார வைத்தியசாலை, அக்கரைப்பற்று எனும் பெயருக்குரிய காசுக் கட்டளை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு வகை பதிவிற்கும் தனித்தனியான விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

தலைவர், பிராந்திய பெறுகைக் குழு,
ஆதார வைத்தியசாலை,
அக்கரைப்பற்று.
0672277213-511/0761351775

பாராளுமன்றத்தின் மீதான மக்கள் நம்பிக்கை பலப்படுத்த வேண்டும்

லோரன்ஸ் செல்வநாயகம்

பாராளுமன்றத்தின் மீதான மக்கள் நம்பிக்கை பலப்படுத்தப்பட வேண்டுமென நீதியமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றம் மீதான மக்கள் நம்பிக்கை இழக்கப்படுமானால் நாட்டில் ஜனநாயகம் வீழ்ச்சியடைந்து நாட்டு மக்களுக்கு பொறுப்பு கூறுவோர் இல்லாத நிலையே ஏற்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அதை வேளை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்புரிமை மக்கள் உரிமைகளை பெற்றுக் கொடுப்பதற்காகவே வழங்கப்பட்டுள்ளது என்பதையும் சகலரும் உணர்ந்து கொள்ள வேண்டுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நிலையியற் கட்டளைகள் திருத்தம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர், பாராளுமன்றம் மக்கள் நம்பிக்கையை வென்றதாக இருப்பது அவசியம். அந்த நம்பிக்கை இல்லாது போனால் பாராளுமன்ற ஜனநாயகம் வீழ்ச்சியடைந்து விடும்.

அவ்வாறு ஜனநாயகம் வீழ்ச்சியடைந்தால் இந்த நாட்டிலுள்ள மக்களின் வாழ்க்கைக்கு பொறுப்பானவர்கள் எவரும் இல்லாத நிலையே உருவாகும்.

அத்துடன் மக்களுக்குரிய பாதுகாப்பும் இல்லாது போகும். அதனைக் கவனத்திற் கொண்டு ஜனநாயகத்தை பாதுகாக்கும் வேலைத்திட்டங்களை பலப்படுத்துவது அவசியமாகும்.

பாராளுமன்ற முறை வீழ்ந்தால் இந்த நாட்டின் நிறைவேற்றுத்துறை மற்றும் நீதித்துறைக்கு பாதிப்புகள் ஏற்படும்.

அதனால் காலத்துக்கு பொருத்தமான வகையில் நிலையியற் கட்டளைகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த திருத்தங்களை நிறைவேற்றுவதற்காக அனைத்து எம்பிக்களினதும் ஒத்துழைப்பு அவசியமாகும். பாராளுமன்றம் பலமானதாகவும் மக்களுக்கு பொறுப்புக் கூறுவதாகவும் கட்டியெழுப்பப்பட வேண்டும். அது அனைவரதும் பொறுப்பாகும்.

பாராளுமன்றம் பல்வேறு விடயங்களையும் பொறுப்புக்களையும் கொண்டுள்ளது. நிதி திட்டமிடல் சட்டங்களை நிறைவேற்றல் உள்ளிட்ட விடயங்கள் அதில் உள்ளடங்குகின்றன.

பல தெரிவுக் குழுக்கள் மற்றும் விசேட குழுக்களும் செயற்படுகின்றன.

கோப் குழுவானது அரசாங்கம் மற்றும் மக்களினதும் நட்டம் தொடர்பில் பல்வேறு விடயங்களை வெளிக்கொண்டு வந்துள்ளது. அந்த வகையில் தெரிவுக் குழுக்கள் அரசியல் செய்யும் நிறுவனமல்ல என்பதை சகலரும் புரிந்து கொள்ள வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சிறப்புரிமை மக்களின் உரிமைகளை பெற்றுக் கொடுப்பதற்காகவே வழங்கப்பட்டுள்ளது என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டுமென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஜனநாயக நாடுகள் மத்தியில் இலங்கையை தனிமைப்படுத்தும் செயல்களை அரசு நிறுத்த வேண்டும்

லோரன்ஸ் செல்வநாயகம்

உலக நாடுகள் அனைத்தும் எமது நாடு தொடர்பில் மிகுந்த கவனம்ம் செலுத்தி வருவதால் ஜனநாயக நாடுகள் மத்தியில் இலங்கையை தனிமைப்படுத்தும் செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டுமென எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான வாக்கெடுப்பு இன்று நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. எனினும் இந்த வாக்கெடுப்பில் பின்னடைவை தவிர்த்துக் கொள்ளும் வகையில் அரசாங்கம் செயற்படுவது அவசியமென்பதை சுட்டிக்காட்டிய அவர், நாட்டிற்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் செயற்படுவதை நிறுத்திக்கொள்ள வேண்டுமென்று சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நிலையியற் கட்டளைகள் திருத்தம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

உலக நாடுகள் அனைத்தும் இலங்கை தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் செய்யப்பட்டு வருகின்றன.

இத்தகைய சூழ்நிலையில் ஜனநாயகத்துக்கு சவால் விடும் செயற்பாடுகளை அரசாங்கம் கைவிடுவது முக்கியமாகும். அதே வேளை, நாட்டு மக்களை மேலும் நெருக்கடி நிலைக்குத் தள்ளும் செயற்பாடுகளையும் அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும்.

களனிப் பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தின் போது அந்த மாணவர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலை நியாயப்படுத்தும் வகையில் நிதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ கருத்துக்களை முன் வைத்திருந்தார். பல்கலைக் கழக மாணவர்கள் சுதந்திரமாக தங்களது கருத்துக்களை வெளியிடுவதற்கான சுதந்திரமும் உரிமையும் வழங்கப்பட வேண்டும். வசந்த முதலிகே தடுத்து வைக்கப்பட்டுள்ள முகாமிலிருந்து அவர் நள்ளிரவில் வெவ்வேறு இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகிறார் என்பது தெரியவந்துள்ளது என்பதை சுட்டிக் காட்டிய அவர், இத்தகைய நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும்.

இளைஞர்கள் குரலுக்கு செவிமடுக்க வேண்டும். ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்களை புணர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்பதையும் நாம் அரசாங்கத்துக்கு கூறி வைக்க விரும்புகின்றோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

வங்கி வட்டி வீத குறைப்பு பொதுவானதொன்று;

சிரேஷ்ட பிரஜைகளுக்கு பாதிப்பு ஏற்பட அரசு இடமளிக்காது

லோரன்ஸ் செல்வநாயகம்

அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் குறுகிய கால வரி மறுசீரமைப்பு நாட்டு மக்களின் மத்திய கால மற்றும் நீண்ட கால நன்மைகளுக்கு வழிவகுக்குமென நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் வரி கொள்கை மக்களை கோபமூட்டுவதற்காக கொண்டு வரப்பட்டதல்லவென சுட்டிக்காட்டிய இராஜாங்க அமைச்சர், அதற்கான பிரதிபலன்களை மக்கள் விரைவில் அனுபவிக்க முடியுமென்றும் சபையில் தெரிவித்தார்.

சிரேஷ்ட பிரஜைகளின் வட்டி வீதத்தை இல்லாதொழிப்பதாக அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டு சுமத்தப்படுகின்ற போதிலும் அதில் எந்தவித உண்மையும் கிடையாது என தெரிவித்த அவர், அதனை விட அதிகமான வட்டி வீதம் அவர்களுக்கு கிடைக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்திலேயே புதிய நடைமுறை முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் சபையில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நிதி அமைச்சின் வரி சட்ட மூலம் தொடர்பான விவாதத்திற்கு பதிலளித்து உரையாற்றும் போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், சர்வதேச நாணய நிதியத்தின் கடன்களை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும் மக்களின் நலன்புரி செயற்திட்டங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் எந்த ஆலோசனையையும் அந்த நிதியம் முன் வைக்கவில்லை.

பல்வேறு விஷமப் பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்த போதிலும் வருமானத்தை அதிகரித்துக் கொள்வது தொடர்பான செயல்பாடுகளிலேயே கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

எமக்கு பல்வேறு சவால்கள் உள்ளன. மோசமான பொருளாதார நிலைமையை மீள நிவர்த்தி செய்ய வேண்டியது முக்கிய பொறுப்பாக உள்ளது. அதற்கு வரி மறுசீரமைப்பு அவசியமானது.

அரசாங்கமானது மாதாந்த அரசாங்க ஊழியர்களுக்கான சம்பளம், ஓய்வூதியம் சமுர்த்தி உதவிகள் உள்ளிட்ட நலன்புரி விடயங்களுக்காக 120 பில்லியன் டொலர்களை செலவிட்டு வருகிறது. அதற்கான நிதியை உரிய நேரத்தில் பெற்றுக் கொடுப்பதற்கு மத்திய வங்கி அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. எனினும் அரசியல் இலாபத்துக்காக மோசமான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. சிரேஷ்ட பிரஜைகளுக்கான 15 வீத வட்டியை இல்லாதொழிக்க அரசு நடவடிக்கை எடுப்பதாக பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. உண்மையில் தற்போது நடைமுறையிலுள்ள அதிக வட்டியை அவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே குறைந்த வட்டியான 15 வீதத்தை இல்லாமலாக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அவர்களுக்கு கிடைக்க வேண்டிய நன்மைகள் கிடைக்காமல் போகும் என்ற சிறந்த நோக்கத்துடனே அத்தகைய மாற்றம் மேற்கொள்ளப்படுகிறது. எனினும் அதனை சிலர் அரசியல் லாபத்திற்கான விமர்சனங்களாக முன்னெடுக்கின்றனர்.

உலக நீர் வளமும் உள்ளூர் நீர் பயன்பாடும் தொடர்பில் விழிப்புணர்வு செயலமர்வு

கிளிநொச்சி குறூப் நிருபர்

உலகநீர் வளமும், உள்ளூர் நீர்பயன்பாடும், நீர்முகாமைத்துவமும் பற்றிய மாணவர்களுக்கான ஒருநாள் விழிப்புணர்வு செயலமர்வு நேற்றைய தினம் கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

கிளிநொச்சி தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை கிளிநொச்சி நகர றோட்டறிக் கழகத்தின் நிதி அனுசரணையில் இச்செயலமர்வு இடம்பெற்றது.

பாடசாலை முதல்வர் ஜெயா மாணிக்கவாசகன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபையின் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட பொறியியலாளர் எஸ்.சாரங்கன், கிளிநொச்சி நகர றோட்டறிக் கழகத்தின் தலைவர் வண. அருட்தந்தை ரி.யோசுவா ஆகியோர் அறிமுக உரையினையும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உத்தியோகத்தர்களான மு. தமிழ்ச்செல்வன் உலக நீர் வளம், நீர் பயன்பாடு பற்றியும், ஜனனு ஜனன்சந்த் நீரின் தரம், நோய்த்தாக்கங்கள் பற்றியும்,

அன்றூ பிரவீன் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையும் பொது மக்கள் உறவும், சேவைகள் பற்றியும், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் கிளிநொச்சி அலுவலக பொறுப்பதிகாரி சி. பாலகுமார் குழாய் வழி குடிநீர் விநியோகம் நடைமுறைகளும் செயற்முறைகள் பற்றியும் மாணவர்களுக்கு விளக்கமளித்தனர்.

தரம் 9,10,11 மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட இச்செயலமர்வினை முன்னிட்டு மாணவர்களிடையே நடாத்தப்பட்ட நீர் தொடர்பான பேச்சுப் போட்டியில் வெற்றிப்பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களும் கலந்துகொண்ட அனைத்து மாணவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கி

வைக்கப்பட்டதோடு, 45 நிமிடங்கள் பரீட்சையும் நடாத்தப்பட்டது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி றோட்டறிக் கழகத்தை சேர்ந்த அதிபர் அ.பங்கையற்ச்செல்வன், விதை நெல் ஆராச்சி நிலையப் பணிப்பாளர் சிவநேசன், திருமதி சிவநேசன், கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தின் ஓய்வுப்பெற்ற தமிழ் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி பிறேமா மதுரநாயகம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பாணந்துறை ஹேனமுல்லை அஹதிய்யா பாடசாலை அதன் மாணவ தலைவர்கள் தினத்தை கடந்த ஞாயிறன்று (2) கொண்டாடியது. இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட அகில இலங்கை அஹதிய்யா மத்திய பீடத்தின் தேசிய தலைவர் அல்ஹாஜ் எம்.ஆர்.எம். சறூக் உரையாற்றுவதையும் ஹேனமுல்லை அஹதிய்யா தலைவர் அல்ஹா ஜ் எம். எம். எம். ஜாபிர் , அதிபர் சட்டத்தரணி முஹம்மது நிப்ரா ஸ் உட்பட கலந்துகொண்டவர்களில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம். (படம் : மொறட்டுவை மத்திய விசேட நிருபர்)

விஜயதசமியை முன்னிட்டு யாழ். ஊடக அமையத்தில் நேற்றைய தினம் புதன்கிழமை வாணி பூஜை நடைபெற்றது. படம்: யாழ். விசேட நிருபர்

இலங்கை வங்கி

ஏலவிலை கோரலுக்கான அழைப்பு

ஏலவிலை கோரல் இல. : P/PROC/2022/03

Dual Interface உடைய 200,000 Visa மற்றும் Mastercard அட்டைகளை வழங்குதல்

1. Dual Interface உடைய 200,000 Visa மற்றும் Mastercard அட்டைகளை இலங்கை வங்கிக்கு வழங்குவதற்கென ஒட்டி முத்திரையிடப்பட்ட ஏலவிலை கோரல்களைக் கீழ்க் காணும் நிபந்தனைகளுக்கு இணங்கும் வழங்குனர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

இலங்கை வங்கியானது கீழ்க்கண்ட உரிமைகளைக் கொண்டிருக்கும் :

- இரண்டு வருடகாலங்களினுள் 20 பல்வேறான உப கட்டளைகளை வைக்க முடியும்
- ஒவ்வொரு உப கட்டளைக்குமான ஆக்க வேலைப்பாடுகளைத் தீர்மானிக்க முடியும்.

தகுதி பெறுவதற்கான பிரிவுகள்

பிரதான / அசல் உபகரண உற்பத்தியாளர் (OEM)

i. விலைமனு கூறுபவர் முன்மொழியப்பட்ட அட்டையை கடந்த இரண்டு வருடங்களினுள் UKன் "The Banker" சஞ்சிகையில் இறுதிப் பதிப்பில் வெளியிட்டுள்ள பட்டியலில் உள்ள முதல் ஆயிரம் வங்கிகளில் ஏதாவதொன்றிற்கு ஒற்றை ஒப்பந்தத்தில் ஐந்து இலட்சம் இரட்டை இடைமுகப் பற்று அட்டைகளை விநியோகித்திருக்க வேண்டும்.

ii. ஏலவிலை கூறுபவர் வழங்கப்பட்ட உற்பத்திகள் (சிப் வன்பொருள் மற்றும் OS) எந்தவொரு சர்வதேச IPகளினதும் (Intellectual Property) விதிகளை மீறவில்லை எனும் உத்தரவாதத்தை வழங்க வேண்டும்.

ஏலவிலை கூறுபவர்

i. ஏலவிலை கூறுபவர் அசல் உபகரண உற்பத்தியாளராக (OEM) அல்லது உற்பத்திக்கான அதிகாரம் வழங்கப்பட்ட அல்லது இலங்கைக்கான அதிகாரம் அளிக்கப்பட சேவை வழங்குனராகக் காணப்பட வேண்டும்.

ii. ஏலவிலை கூறுபவர் அசல் உபகரண உற்பத்தியாளரல்லாதவிடத்து, ஏலவிலை கூறுபவர் EMV அட்டைகளை உற்பத்தி செய்வதற்கு கடந்த இரண்டு ஆண்டுகளுக்குள் உற்பத்தியாளரிடமிருந்து அனுமதி பெற்ற முகவராகக் காணப்பட வேண்டும். முகவராகச் செயற்பட உற்பத்தியாளரிடமிருந்து பெற்ற அனுமதிப் படிவமானது இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

iii. ஏலவிலை கூற ஆர்வமுடையவரின் வருடாந்தப் பணப் புரள்வு கடந்த மூன்று தொடர் நிதி ஆண்டுகளில் ஆகக் குறைந்தது ரூ. 150 (சமமான வெளிநாட்டுப் பணப் பெறுமதி) மில்லியனாகக் காணப்பட வேண்டும் (2019/20, 2020/21, 2021/22) மற்றும் சாதகமான பெறுமதியுடைய இலாபமீட்டும் நிறுவனமாகவும் காணப்பட வேண்டும்.

iv. ஏலவிலை கூறுபவர் அல்லது அவர்களது OEM தவறான ஒப்பந்தக்காரராக இலங்கை அரசாங்கத்திற்கான அல்லது ஏதேனும் ஒரு அரசாங்க நிறுவனத்தின் அல்லது இலங்கை வங்கிக்கான பட்டியலில் காணப்படாதவராக இருக்க வேண்டும்.

v. ஏலவிலை கூறுபவர் இலங்கைக்குள் வங்கியின் வர்த்தகக் களம் தொடர்பில் முரண்பாடுடையவராக இருத்தலாகாது.

vi. விலைமனு கூறுபவர் கடந்த மூன்று வருடங்களினுள் இலங்கையினுள் உள்ள குறைந்தது ஒரு வங்கிக்காவது 100,000க்குக் குறையாத முன்னச்சிடப்பட்ட இரட்டை இடைமுக (DI) அட்டைகளை விநியோகித்திருக்க வேண்டும். (2020, 2021, 2022)

(ஏலவிலை கூறுபவர் மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு நிபந்தனைக்குமான உரிய ஆதார ஆவணங்களை ஏலவிலை கூறல்களுடன் இணைக்க வேண்டும்.)

2. ஏலவிலை கூற ஆர்வமுடையோர் ஆங்கில மொழியிலான விலை கூறல் ஆவணத்தொகுதியை திருப்பிச்செலுத்தாக் கட்டணம் ரூபா.23,000/- ஐ வரிகளுடன் (ரூபா.20,000/- + ரூபா.3,000/-(பெ.சே.வரி)) (கட்டணம் செலுத்தும் முறை - உடன் பணம்) அல்லது USD 65/- (கட்டணம் செலுத்தும் முறை - SWIFT) கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01 BOC சதுக்கம், இலங்கை வங்கித் தலைமையகம், 14ம் தளம், சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி, பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் இவ் ஏலவிலை கூறலின் நகலினை அல்லது எழுத்து மூலமான விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் கொள்வனவு செய்யலாம்.

Swift code : BCEYLKLX
கணக்கின் பெயர் மற்றும் இலக்கம் : Properties Dept. Non-Refundable Tender Deposit, 52401015

குறிப்பு :

i. SWIFT கட்டணம் மற்றும் அனைத்து வங்கிக்குரிய கட்டணங்களும் ஏலவிலை கூறுபவரால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். ஆவணக் கட்டணமாக வங்கியானது USD 65/- இனைப் பெற வேண்டும்.

ii. தகவலுக்கான விளக்கம் பின்வருமாறு இருத்தல் வேண்டும் "Non-Refundable Tender Deposit fee-P/PROC/2022/03)"

3. பூரணப்படுத்தப்பட்ட ஏலவிலை கூறல்களை (இலங்கை வங்கி தவிர்ந்த வேறொரு) வர்த்தக வங்கியிடமிருந்து பெற்ற 2022.11.17 ஆம் திகதி முதல் 2023.03.16 ஆம் திகதி வரை (ஏலவிலை கோரல்கள் திறக்கப்பட்ட திகதியிலிருந்து 119 நாட்காட்டி நாட்கள்) செல்லுபடியாகும் ரூபா 1,700,000) அல்லது USD 4,750/- பெறுமதிக்கு பண வைப்பாகவோ, உத்தியோகபூர்வ காசோலையையோ அல்லது வங்கி உண்டியலையோ பிணை முறியாக இணைக்க வேண்டும். ஒப்பந்த தாரரால் வழங்கப்பட்ட காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பிணை முறியானது USD ஆகக் காணப்படின், இலங்கை வங்கியுடன் தொடர்புடைய வங்கியொன்றிடமிருந்து பெற்று மற்றும் அதனை மற்றொரு இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியின் மூலம் உறுதிப்படுத்தியிருக்க வேண்டும். (உரிய விபரங்களுக்கு இலங்கை வங்கியின் இணையத்தளத்தினைப் பார்வையிடவும்)

ஏலவிலை கூறல் ஆவணத் தொகுதியை விநியோகிக்கும் இறுதித் திகதியும் நேரமும்	:	2022.11.16 1400 மணி வரை
ஏலவிலை கூறல் ஆவணத் தொகுதியை விநியோகிக்கும் நேரம்	:	0900 மணி முதல் 1400 மணி
ஏலவிலை கூறல் முடிவடையும் திகதியும் நேரமும்	:	2022.11.17 1000 மணி
ஏலவிலை கூறல்கள் திறக்கப்படும் திகதியும் நேரமும்	:	ஏலவிலை கூறல்கள் மூடப்பட்டவுடன் திறக்கப்படும்

இலங்கை வங்கி, எவ்விதக் காரணங்களையும் குறிப்பிடாது எந்தவொரு அல்லது எல்லா கேள்விப்பத்திரங்களையும் நிராகரிக்கும் அல்லது கேள்விப்பத்திரமொன்றின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்ளும், உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளது.

பிரதான முகாமையாளர்
சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம், இலங்கை வங்கி தலைமை அலுவலகம்
இலங்கை வங்கி சதுக்கம்
இல. 01. இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 01.
தொலைபேசி : 0112 434786, 0112 544310,
தொலைநகல் : 011-2449629
மின் அஞ்சல் : procurement1@boc.lk

1975 BOC CALL CENTRE www.boc.lk

AA- (lka) Fitch மற்றும் AAA- Brand Finance மதிப்பீடு. இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

மீகஹகிவுல பிரதேச சபை

2023ஆம் ஆண்டிற்கான குறை நிரப்பு வரவு செலவுத் திட்ட அறிக்கையை பரீட்சித்துப் பார்த்தல் சார்பாக பொதுமக்களுக்கு விடுக்கப்படும் அறிவித்தல்

1987 இல. 15 பிரதேச சபை சட்டத்திற்கு அமைவாக மற்றும் 2020 வரவு செலவுத்திட்ட தயாரிப்பு மற்றும் அமுல்படுத்தும் விதிகளின் பிரகாரம் 2023ஆம் ஆண்டின் குறைநிரப்பு வரவு செலவுத் திட்ட அறிக்கை 2022.10.06 முதல் 2022.10.17 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை அரசினால் அவ்வப்போது விதிக்கப்படும் சுகாதார வழிகாட்டல் அறிவுறுத்தல்களுக்கு உட்பட்டு அதிகாரப் பிரதேசத்தின் பொதுமக்களுக்கு பரீட்சித்துப் பார்ப்பதற்காக அலுவலக வளாகம் மற்றும் பொது நூலக வளாகத்தில் வைக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறியத் தருகிறேன்.

எஸ்.எம்.எல்.எச். ஜயவர்தன,
தலைவர்,
மீகஹகிவுல பிரதேச சபை.

வாகனங்கள் விற்பனைக்கு

வாகன இல.	வகை	மாதிரி	வருடம்
கார்			
KC -1XXX	KIA	RIO 1.5 M H/B	2002
KA -3XXX	MARUTI	800	2005
KN -4XXX	TOYOTA	DBA-NZE141	2008
லொறி			
DAB -9XXX	TATA	SUPER ACE	2015
முச்சக்கர வண்டிகள்			
GK -2XXX	BAJAJ	BAJAJ AUTO	2001
GV -2XXX	BAJAJ	BAJAJ AUTO	2002
HG -2XXX	BAJAJ	AUTO RE 2 STROKE	2003
HX -0XXX	BAJAJ	AUTO RE 2 STROKE	2003
JK -7XXX	BAJAJ	AUTO RE 2 STROKE	2004
QC -9XXX	BAJAJ	AUTO RE 2 STROKE	2005
QD -6XXX	BAJAJ	AUTO RE 2 STROKE	2005
QF -0XXX	BAJAJ	AUTO RE 2 STROKE	2006
QF -2XXX	BAJAJ	AUTO RE 2 STROKE	2006
QG -8XXX	BAJAJ	AUTO RE 2 STROKE	2006
QE -8XXX	BAJAJ	AUTO RE 2 STROKE	2006
QL -8XXX	BAJAJ	AUTO AR4S	2007
QJ -7XXX	BAJAJ	AUTO AR4S	2007
QO -4XXX	BAJAJ	AUTO AR4S	2008
QP -2XXX	BAJAJ	AUTO AR4S	2008
QQ -9XXX	BAJAJ	AUTO AR4S	2008
QO -3XXX	BAJAJ	AUTO AR4S	2008
YA -3XXX	BAJAJ	AR4S-UG	2010
YM -8XXX	BAJAJ	RE 205	2011
YU -8XXX	BAJAJ	RE205	2011
AAM -3XXX	BAJAJ	RE 205	2013
AAN -7XXX	BAJAJ	RE	2013
ABB -7XXX	BAJAJ	RE	2015
AAX -2XXX	BAJAJ	RE	2015
ABE -6XXX	PIAGGIO	APE	2015
ABL -6XXX	BAJAJ	RE	2016

வாகன பரிசீலித்தல்களுக்கு:
மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112 088 505

வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்

மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2022 ஒக்டோபர் 6ஆம், 7ஆம், 10ஆம், மற்றும் 11ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2022 ஒக்டோபர் 11ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.

மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி
தலைமை அலுவலகம்
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: 2343720 - 7 நீட்சி: 210
Mercantile Investments and Finance PLC

தொடர்பு:
ஜானக்க - 071 1624559 / மொதிது - 071 9530350

www.skillsads.com

Repeat Your ad For Better Offers

சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சகம்

போதனா வைத்தியசாலை - பேராதெனிய

கொள்முதல் அறிவிப்பு

மருத்துவ உபகரணங்கள் வழங்கல், நிறுவுதல் மற்றும் பராமரித்தல் – 2022

போதனா வைத்தியசாலை - பேராதெனிய பிராந்திய கொள்முதல் குழு 2022 அக்டோபர் 06 முதல் 2022 அக்டோபர் 20ஆம் திகதி மதியம் 1.30 மணிவரை பின்வரும் மருத்துவ உபகரணங்களை வாங்குவதற்கான ஏலங்களை அழைக்கிறது.

- Cardiac output monitor - 01
- EEG Machine -01

மேலதிக தகவல்களை போதனா வைத்தியசாலை - பேராதெனிய அதிகாரப்பூர்வ வலைதளமான www.peradeniya-hospital.health.gov.lk இலிருந்து பெறலாம்.

எச்.எம்.ஏ. திலகரத்ன
பணிப்பாளர்
போதனா வைத்தியசாலை
பேராதெனிய.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

இலங்கை வங்கி
ஏல விற்பனை அறிவித்தல்

1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்

1) கடன் தொடர்பு இலக்கங்கள்: 74475077, 74475170, 74475261

இல. 694/4. ராஜ எல, கந்தளாய் என்ற முகவரியைச் சேர்ந்த திரு. ரந்திலக கெதர வீரசிங்க, திரு. ரந்திலக கெதர கருணாதாச, திருமதி, கோதாகொட கமகே பத்மினி, திருமதி ரந்திலக கெதர நிமல்கா மதுவந்தி ஆகியோரின் பங்காண்மையின் கீழுள்ள M/S சம்பிக அரிசி ஆலையின் ஈடு வைக்கப்பட்ட ஆதனத்தின் விற்பனை

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய 2017.07.07ஆம் திகதிய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2027ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2017.06.27ஆம் திகதி தினமின, டெய்லி நியூஸ். தினகரன் ஆகிய நாளிதழ்களிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவையிலுள்ள முதலையும் விற்பனைத் திகதி வரை செலுத்த வேண்டியுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் அறவிடத்தக்க செலவுகளையும் பணங்களையும் அறவிடும் பொருட்டு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தையும் கட்டடங்களையும் இல. 06A, பெயாபீல்ட் காடின்ஸ், கொழும்பு -08 என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் ஷொக்மன் & சமரவிக்ரம ஏல நிறுவனதாரர் 2022.11.15ஆந் திகதி காலை 11.00 மணிக்கு கந்தளாய் கிளையில் பகிரங்க ஏலத்தில் விற்பாரென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை

கிழக்கு மாகாணம் திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ராஜ எல 227/B கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள ராஜ எல கிராமத்தில் (காட்டலய் பட்டுவ) அமைந்துள்ள 'ராஜ எல கொலனி' என அழைக்கப்படும் காணியின் 780ஆம் இலக்க காணித்துண்டின் கிழக்குப் பக்கத்திலுள்ள பிரிக்கப்பட்ட காணித்துண்டானது **வடக்கில்** 741ஆம் இலக்க காணித்துண்டையும் **கிழக்கில்** 780ஆம் இலக்கக் காணித்துண்டையும் **தெற்கில்** 781ஆம் இலக்க காணித்துண்டையும் **மேற்கில்** 782ஆம் இலக்கக் காணித்துண்டையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. ஒரு ஏக்கர் இருபத்து மூன்று தசம் சைபர் ஆறு பேர்ச்சுகள் (ஏ.1றூ.0பே.23.06) பரப்பளவையும் அதன் கண் காணப்படும் வீடு அரிசி ஆலை என அனைத்தையும் கொண்டுள்ள இக்காணி திருகோணமலை காணிப் பதிவகத்தில் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் LDO/P/3/54இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. உரிமம் பெற்ற நில அளவையாளர் கே. செல்லப்பிள்ளை தயாரித்த 1997 செப்டெம்பர் 19ஆம் திகதியிட்ட 553ஆம் இலக்க அண்மைய நில அளவை வரைபடத்தின்படி மேற்குறிப்பிட்ட காணி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணம் திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் பிரதேச சபை எல்லைகளுள் கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவில் ராஜ எல 227 B கிராம உத்தியோகத்தர் பிரிவில் கந்தளாய் ராஜ எல, நான்காம் வட்டாரத்தில் அமைந்துள்ள ராஜஎல, பிரிவு 4 694 'ராஜஎல கொலனி' என அழைக்கப்படும் காணியின் மேற்குறிப்பிட்ட 553ல் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டதுமான குறித்த காணித்துண்டு **வடக்கில், கிழக்கில்** பாதையும் **தெற்கில்** மேற்குறிப்பிட்ட 553ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 2ஐயும், **மேற்கில்** F.T.P 2ல் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 782ஐயும் எல்லைகளாகக் கொண்டுள்ளதோடு மேற்குறிப்பிட்ட 553ஆம் இலக்க வரைபடத்தின்படி ஒரு ஏக்கர் இருபத்தி மூன்று தசம் சைபர் ஆறு பேர்ச்சுகள் (ஏ.1றூ.0பே.23.06) பரப்பளவையும் அதன்கண் அமைந்துள்ள வீடு, அரிசி ஆலை என அனைத்தையும் கொண்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட இரண்டாவது அட்டவணை

மேலே முதலாவது அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணி மற்றும் கட்டடத்துடன் இணைந்த இயந்திர சாதனங்கள் வருமாறு:

இயந்திர சாதன விபரம்

01. Two 18 feet Elevators with 2 H.P. motors
02. Paddy cleaner with 3 H.P. motor
03. Two paddy stoners with 2 H.P. motors
04. Two Hullers with 10 H.P. motors
05. Two 12 feet elevators with 2 H.P. motors
06. Automatic elevator and Huller with 10 H.P. motors
07. Separator with 15 H.P. motors
08 Polisher with motor
09. Two Rice Stoner with 2 H.P. motors
10. 17 feet Elevator with 2 H.P. motors
11. Winnower with 2 H.P. motor
12. Winnower with 2 H.P. motor
13. Paddy drier with 30 H.P. Motor
14. Paddy Cleaner with 3 H.P. motor
15. Huller with 25 H.P. motor
16. Two 12 feet elevators with 2 H.P. motor
17. Two Winnower fans with 2 H.P. motor
18. Polisher with 25 H.P. motor and starter
19. Rice Stoner with 3 H.P. motor and starter
20. 18 feet Elevator with 2 H.P. motor and starter
21. 12x4x4 feet Rice Bin
22. Grader with motor and starter
23. 110 KVA Generator
24. Boiler
25. Blower
26. Suction Fan

மேலே முதலாவது அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணிக்கும் நிலமனைக்கும் தற்சமயம் பொருத்தப்பட்டுள்ளவையும் இதன் பின்பு பொருத்தப்படவுள்ள அனைத்தும் இதனுள் அடங்கும்

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி.

திரு. தி. விஜயபாஸ்கர்
கிளை முகாமையாளர்

இலங்கை வங்கி
கந்தளாய்
2022.09.26

For classified advertisements and for replies

received in response to advertisements published under Lake House box numbers

Manager front office
+94 112429341
Hotline 1949

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

பெறுகை அறிவித்தல்

போதனா வைத்தியசாலை – அநுராதபுரம்

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் கீழ்க்காணும் வேலைகளுக்காக பொறியிடப்பட்ட கேள்விகள் 2022.10.06 முதல் 2022.10.26 மு.ப. 10.00 வரை ஏற்கப்படும்.

செயற்றிட்ட இல.	செயற்றிட்டம்	மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் ரூ.	பிணை முறி ரூ.	பொறியியலாளர் மதிப்பீடு (ரூ. மில்.)	CIDA மற்றும் NCPC பதிவு
2021/56	RENOVATION OF WASH ROOMS IN AUDITORIUM AT NTS	2,000.00	27,000.00	2.66	C7 or C8
2021/60	RENOVATION OF WASH ROOMS IN TUTOR QUARTERS 01, 02 & 03	2,000.00	10,000.00	1.03	C8 or C9

01. சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பிணை 2022.10.26 முதல் 2022.12.06 வரை செல்லுபடியாதல் வேண்டும். அவ்வாறே கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்படும் மாதிரிக்கு அமைவாக இருப்பதுடன் அது கட்டாயமாகும்.

02. கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக பணிப்பாளர் போதனா வைத்தியசாலை அநுராதபுரம் இற்கு எழுத்துமூல வேண்டுதலை மேற்கொள்ளல் வேண்டும்.

03. ரூபா 05 மில்லியனுக்கு மேற்பட்ட கேள்விக்காக விலைமனுக்களை சமர்ப்பிக்கும் போது பொது ஒப்பந்த பதிவாளரிடம் பதிவு செய்வதற்கான ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் நிராகரிக்கப்படும்.

04. அரச நிதி சுற்றுநிரூபம் 4/2016(II) இன் 32 இன் பிரகாரம் வட மத்திய மாகாணத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடம் சித்திகரமான கேள்விதாரர்களுக்கு 05% முன்னுரிமை வழங்கப்படும்.

05. கட்டிடங்களை பழுதுபார்ப்பதற்கான மேலதிக விபரங்களை 0252222261-111 தொலைபேசியை அழைத்து பெற்றுக்கொள்ளலாம்.

தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் தலைமையகத்தில் 2022.10.25ம் திகதி பி.ப. 2.00 வரை கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இவ் பெறுகையுடன் சம்பந்தப்பட்ட ஆவணங்களை அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் கட்டணங்கள் இன்றியே பரீட்சித்துப் பார்க்கலாம்.

பெறுகை நிபந்தனைகளுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட கேள்விப் பத்திரங்களை 2022.10.26 மு.ப. 10.00 இற்கு முன்பு கிடைக்குமாறு தலைவர், அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழு, அநுராதபுரம் என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பலாம் அல்லது அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் பெட்டியில் உள்ளிடலாம். கடித உறையின் இடது பக்க மூலையில் கேள்வியின் பெயர் மற்றும் திறக்கப்படும் திகதியை குறிப்பிட்டு சமர்ப்பியுங்கள்.

கேள்விகள் திறத்தல் 2022.10.26 மு.ப. 10.00 இற்கு கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் நடைபெறும். கேள்விதாரர்களுக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு இவ் வேளையில் சமுகமளிக்கலாம்.

இப் பெறுகை பற்றிய அநுராதபுர போதனா வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

தலைவர்,
பிரதேச பெறுகைக் குழு,
போதனா வைத்தியசாலை,
அநுராதபுரம்.

பெயர் மாற்றம்

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தோப்பூர் கிராம உத்தியோகத்தர் பிரிவை வசிப்பிடமாகக் கொண்ட காதிர் நெயினா முகம்மது றிபாஸ் ஆகிய நான் எனது பெயரை காதர் நெயினா முகம்மது றியாஸ் என பெயர் மாற்றம் செய்து கொண்டேன். இனிமேல் சகல தஸ்தாவேஜிகளிலும் ஆவணங்களிலும் இப் பெயரையே குறிப்பிடுவேன் என்பதை ஸ்ரீலங்கா குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகிறேன்.

- காதர் நெயினா முகம்மது றியாஸ்

Marriage Proposals in the Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

அற்றோர்ணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கிம்புலாபிட்டிய, கல்மங்கட, சூரியலோக வீதி, இல. 326/1 என்ற விலாசத்தில் நிரந்தர வதிவிடத்தையும், வர்த்தமானிய, அவுஸ்திரேலியா, விக்டோரியா, ஏசூகா, ஸ்டுவ் கோட், இல: 05ல், வசிக்கும் பல்லே கெதர பிரபாத் மதுசங்க ஐயசேன ஆகிய நான், 79/87 என்ற இருமடிப்புத் தாளில் நாட்குறிப்பு இல. 1050இன் கீழ் 2019.03.25ந் திகதி பதியப்பட்ட பிரசித்த நொத்தாரிசு டி.பி.எஸ்.ஏ. சகுல குணதிலக அவர்கள் மூலம், எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இல. 174 மற்றும் 2019.03.25ந் திகதியிடப்பட்ட அற்றோர்ணித் தத்துவத்தின் மூலம் எனது அற்றோர்ணித் தத்துவக்காரரான கிம்புலாபிட்டிய, கல்மங்கட, சூரியலோக வீதி, இல. 326/1 என்ற விலாசத்தில் வசிக்கும் பல்லே கெதர ஐயசேன என்பவருக்கு அளிக்கப்பட்ட தத்துவம் இன்று முதல் இரத்துச் செய்யப்படுவதோடு, ஸ்ரீ லங்கா ஜனநாயக குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகிறேன்.

பல்லே கெதர பிரபாத் மதுசங்க ஐயசேன

வரையறுக்கப்பட்ட கொலன்னாவை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

அடகு நகைகளின் ஏலவிற்பனை

கொட்டிகாவத்தை	ஒருகொடவத்தை
கொத்தட்டுவ புதிய நகரம்	மீதொட்டமுல்ல
கொட்டுவில	மெ/கொலன்னாவ
ஹிம்புட்டான	கொத்தடுவ
கொலன்னாவை	வெலேவத்தை
முல்லேரியாவ	வெல்லம்பிட்டிய
ரணபிம	மாதின்னாகொட

சேதவத்த

இச்சபைக்கு உரித்தான மேற்படி கிராமிய வங்கிக் கிளைகளில் 2021 மார்ச் 31 வரை அடகு வைத்து 2022 ஒக்டோபர் 21 வரை மீட்டுக்கொள்ளப்படாத தங்க நகைகள், 2022 ஒக்டோபர் 22, 23 ஆகிய இரண்டு தினங்களிலும் மு.ப. 9.00 இற்கு கொலன்னாவ பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பிரதான அலுவலகத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

பதில் பொது முகாமையாளர்,
வ/ப கொலன்னாவ ப.நோ.கூ. சங்கம்
இலக்கம் 224, கொலன்னாவ வீதி,
கொலன்னாவ.

1964ஆம் ஆண்டு 28ம் இல நிலம் கையகப்படுத்துதல் திருத்தச் சட்டத்தால் நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் பிரிவு 7(1) இன் கீழ் அறிவிப்பு

கீழே விபரிக்கப்பட்டுள்ள நிலத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அரசாங்கமானது அந்நிலத்தை கையகப்படுத்திக்கொள்ள உத்தேசித்துள்ளது. மேலதிக விபரங்களுக்கு 12 ஜுலை 2022 திகதியிடப்பட்ட இலங்கை குடியரசு வர்த்தமானி எண் 2288/12 பகுதி 3ஐப் பார்க்கவும்.

அட்டவணை

மாவட்டம்	: குருநாகல்
பிரதேச செயலகப் பிரிவு	: பொல்கஹவெல
ஊர்	: கணேகொட தெற்கு
இடத்தின் பெயர்	: ஸ்டேஷன் வீவ் எஸ்டேட்
காணி இலக்கம்	: வ. 2514
துண்டின் இலக்கம்	: 1, 2, 3
முழுப் பரப்பளவு	: ஹெக்டயார் 0.0062

பிரதேச செயலகம்/ நிலம் கையகப்படுத்தல் அதிகாரி
பிரதேச செயலகப் பிரிவு
பொல்கஹவெல

விலைமனுக் கோரல்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

1	2	3	4	5	6
பிராந்தியம்	கேள்வி இல. பொருட்களது விபரம் - தொகை	விலைமனு கோரல் முடிவுத் திகதி மற்றும் நேரம்	விலைமனு ஆவணம் பெறும் இடமும் தொ.பே. இலக்கமும்	விலைமனு ஆவண விலை (ரூபா)	கேள்வி விபரம் ICB/NCB
பொருட்கள்					
பிராந்தியம்-02 கிழக்கு	**DGM(E)/QPPC/22/094** மாகாண உப களஞ்சியசாலை - அம்பாறையில் வைக்கப்பட்டுள்ள சேவைக்கு உதவாத பொருட்களின் விற்பனை	19-10-2022 ம் திகதி பி.ப. 2.00 மணி	பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030	500.00	NCB
பிராந்தியம்-02 கிழக்கு	**DGM(E)/QPPC/22/095** மாகாண உப களஞ்சியசாலை - மட்டக்களப்பில் வைக்கப்பட்டுள்ள சேவைக்கு உதவாத பொருட்களின் விற்பனை	19-10-2022 ம் திகதி பி.ப. 2.00 மணி	பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030	500.00	NCB
பிராந்தியம்-02 கிழக்கு	**DGM(E)/QPPC/22/096** மாகாண களஞ்சியசாலை - திருகோணமலையில் வைக்கப்பட்டுள்ள சேவைக்கு உதவாத பொருட்களின் விற்பனை	19-10-2022 ம் திகதி பி.ப. 2.00 மணி	பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030	500.00	NCB
பிராந்தியம்-02 கிழக்கு	**DGM(E)/QPPC/22/097** மாகாண உப களஞ்சியசாலை - அம்பாறையில் வைக்கப்பட்டுள்ள நகராத, மெதுவாக நகரும் மற்றும் சேதமடைந்த பங்குகளின் விற்பனை	19-10-2022 ம் திகதி பி.ப. 2.00 மணி	பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030	500.00	NCB
பிராந்தியம்-02 கிழக்கு	**DGM(E)/QPPC/22/098** மாகாண உப களஞ்சியசாலை - மட்டக்களப்பில் வைக்கப்பட்டுள்ள நகராத, மெதுவாக நகரும் மற்றும் சேதமடைந்த பங்குகளின் விற்பனை.	19-10-2022 ம் திகதி பி.ப. 2.00 மணி	பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030	500.00	NCB
பிராந்தியம்-02 கிழக்கு	**DGM(E)/QPPC/22/099** மாகாண களஞ்சியசாலை - திருகோணமலையில் வைக்கப்பட்டுள்ள நகராத, மெதுவாக நகரும் மற்றும் சேதமடைந்த பங்குகளின் விற்பனை	19-10-2022 ம் திகதி பி.ப. 2.00 மணி	பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030	500.00	NCB
பிராந்தியம்-02 கிழக்கு	**DGM(E)/QPPC/22/120** கிழக்கு மாகாணம், இலங்கை மின்சார சபைக்கு 7200 பொதிகள் மின்சாரக் கட்டணப் படிவங்கள் வழங்கல் மற்றும் விநியோகம். (ஒவ்வொரு பக்கெட்டிலும் 1000 படிவங்கள் உள்ளடங்கவேண்டும்)	19-10-2022 ம் திகதி பி.ப. 2.00 மணி	பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030	1,500.00	NCB
சேவைகள்					
பிராந்தியம்-02 கிழக்கு	**DGM(E)/QPPC/22/131** வாடகைக்கு வான் மின் அத்தியட்சகர் -I (விநியோகபராமரிப்புபிரிவு) திருகோணமலை (இரண்டு வருட காலம்)	19-10-2022 ம் திகதி பி.ப. 2.00 மணி	பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030	1,000.00	NCB
பிராந்தியம்-02 கிழக்கு	**DGM(E)/QPPC/22/132** வாடகைக்கு வான் மின் அத்தியட்சகர் -II (விநியோகபராமரிப்புபிரிவு) திருகோணமலை (இரண்டு வருட காலம்)	19-10-2022 ம் திகதி பி.ப. 2.00 மணி	பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030	1,000.00	NCB
பிராந்தியம்-02 கிழக்கு	**DGM(E)/QPPC/22/133** வாடகைக்கு வான் மின் அத்தியட்சகர்(திட்டமிடல்)- பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை (இரண்டு வருட காலம்)	19-10-2022 ம் திகதி பி.ப. 2.00 மணி	பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030	1,000.00	NCB

மேற்குறித்த பொருட்கள் வழங்கப்படல் தொடர்பாக வழங்குதாரர்களிடமிருந்து இலங்கை பிராந்தியம்-02 மின்சார சபை சார்பாக கொள்வனவுக்குழுவின் தலைவர் சர்வதேச/ தேசிய போட்டித்தன்மையுடன் கூடியதான விலைமனுக்களைக் கோருகின்றார். இலங்கை மின்சார சபையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆவணங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும். தேவைக்கேற்ப அவர்கள் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்திற்கேற்ப பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

விலைமனுக்கோரல் முடிவுத்திகதிக்கு இரண்டு தினங்கள் இருக்கும் வரை விலைமனு ஆவணங்கள் விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர்கள் அல்லது அவர்களது முகவர்கள் மூலம் உரித்தான முறையில் இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளருக்கு/ பிரதம பொறியியலாளருக்கு எழுத்துமூலமாக விண்ணப்பித்து 5ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வழங்குவதன் மூலம் கடமை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலாம். பணமாகவோ இலங்கை மின்சார சபை பொது முகாமையாளர் சார்பாக வரையப்பட்ட வங்கி வரைவுப் பத்திரம் ஒன்றின் மூலமாகவோ கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம்.

எழுத்துமூலமான விண்ணப்பமொன்றின் அடிப்படையில் வெளிநாட்டுத் தூதரகங்கள்/வர்த்தக ஆணைக்குழுக்கள் என்பன இலவசமான முறையில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இ.மி. சபையின் உரித்தான பி.பொ.மு/ பிரதம பொறியியலாளர்களது அலுவலகங்களில் வைத்து உத்தேச விலைமனுதாரர்களினாலும் அவர்களது முகவர்களினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரிசீலிக்கப்படலாம்.

4ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் முன்பாக விலைமனுக்கோரல் நேரம் முடிந்தவுடனேயே விலைமனுக்கள் திறக்கப்படும். காலம் பிந்தி வரும் மனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு ஆவணங்கள் விநியோகிப்பவர்களான இ.மி.சபை, பொ.மு/ பிரதம பொறியியலாளர் ஆகியோர்களிடமிருந்து விலைமனுக்கோரல் முடிவுத் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக அனைத்து விளக்கங்களும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்

வளமான வாழ்விற்கு மின்சாரம்

விலைமனு ஆவணத்தின் தகவல் பிரதியானது www.ceb.lk என்ற இ.மி.ச. கூட்டுரு இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.

OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www.observerjobs.lk

சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள்

106

கார்கள்
விற்பனைக்கு

WP CAW-4077 Renault KWID 2016, Car கூடிய விலைக் கேள்விக்கு. வெலிபல் ஃபினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0714542 958. 058840

Repeat Your ad For Better Offers

119

பஸ்கள், லொறிகள்
விற்பனைக்கு

WP NB-0434 Lanka Ashok Leyland Viking Bus 2011, கூடிய விலைக் கேள்விக்கு. வெலிபல் ஃபினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0714542 958. 058838

122

மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்
விற்பனைக்கு

WP AAF-2310 Bajaj 2012, SG QX-2973 Bajaj 2010, SG QM-212 0 Baja j 2007. Threew heel கூடிய விலைக் கேள்விக்கு. வெலிபல் ஃபினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810. 058841

மாத்தறை பிரதேச சபை

2023ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் பதார்த்தங்களை வழங்குவதற்கு மற்றும் சேவைகளை மேற்கெள்வதற்காகப் பதிவு செய்து கொள்ள ஆர்வமுள்ள வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை அடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் 'வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2023' எனக்குறிப்பிட்டு 2022.11.30 அன்று பி.ப. 3.00 இற்கு அல்லது அதற்கு முன்னர், தலைவர், மாத்தறை பிரதேச சபை, கெக்கணதுர, மாத்தறை என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக ஒப்படைக்க முடியும். மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் 041-2222906 அல்லது 041-2229512 ஆகிய தொலைபேசி எண்களின் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

01. வழங்கல்கள்

01. அனைத்து வகையான அலுவலக எழுது கருவிகள்
02. கணனி மற்றும் அவைசார்ந்த துணை உறுப்புக்கள் (கணனி வன்பாகங்கள் மற்றும் மென்பாகங்கள்)
03. நிழற்படப் பிரதியிடல் இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள், நகல் பிரதியிடல் இயந்திரங்கள், டுப்ளோ இயந்திரங்கள் போன்ற அலுவலக அச்சிடல் உபகரணங்கள்.
04. அலுவலக மரத் தளபாடங்கள் மற்றும் இரும்புத் தளபாடங்கள்
05. அலுவலக மின் உபகரணங்கள் மற்றும் வீதி விளக்குகளிற்குத் தேவையான பதார்த்தங்கள்.
06. அனைத்து வகையான அச்சு இயந்திரங்களிற்கான டோனர்கள், கார்ட்ரிஜ், ரிபண்கள்.
07. அனைத்து வகையான கட்டிடப் பொருட்கள்
08. மை வகைகள், அவை சார்ந்த பதார்த்தங்கள் மற்றும் உபகரணங்கள்.
09. வீச்சுக்கத்திகள், முள்ளுகள், மண்வெட்டிகள், கத்திகள் போன்ற வீதிப்பராமரிப்பு உபகரணங்கள்.
10. மழை அங்கிகள், கம்பூட்ஸ், கையுறைகள், ஹெல்மட்டுகள், பிளாஸ்டிக் கண்ணாடிகள் போன்ற வீதி மற்றும் சுகாதார ஊழியர்களிற்குத் தேவையான துணை உறுப்புகள்.
11. சுகாதாரப் பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் சுகாதாரப் பாதுகாப்புப் பதார்த்தங்கள்.
12. நீர்க்குழாய் துணை உறுப்புக்கள்.
13. மோட்டார் வாகனங்களிற்கான உதிரிப்பாகங்கள் (கெப், ட்ரக்டர், கைட்ரக்டர், முச்சக்கரவண்டி, குரூகெப், பெக்கோ வாகனம், டிப்பர்)
14. அனைத்து வகை வாகனங்களிற்குமான டயர், டியூப்
15. செவிப்புல கட்புல பதிவு செய்யும் உபகரணங்கள்.
16. முன்பள்ளி உபகரணங்கள்.
17. விளையாட்டுப் பண்டங்கள்.
18. வளிசீராக்கி இயந்திரங்கள்.
19. விரல் அடையாளப் பதிவு இயந்திரங்கள்.
20. புல் வெட்டும் இயந்திரங்கள்.
21. கண்ணாடிகள் மற்றும் கண்ணாடிப்பண்டங்கள்
22. நூலகப் புத்தகங்கள், சஞ்சிகைகள், செய்தித்தாள்கள்
23. பொலித்தீன் உறைகள் மற்றும் பசளை உறைகள்.
24. சீருடைத்துணி வகைகள்.

02. சேவைகள்

25. அச்சு வேலைகள்.
26. நில அளவையாளர் சேவைகள்.
27. சட்டத்தரணிகளின் சேவைகள்.
28. பயிற்றப்பட்ட மற்றும் பயிற்றப்படாத தொழிலாளர்களின் சேவைகள்.
29. புகைப்படம் பிடித்தல், வீடியோ பதிவு செய்தல் மற்றும் படங்களை சட்டகப்படுத்தல் போன்ற சேவைகள்.
30. கட்டிடங்களைப் புதுப்பித்தல் (தகனச்சாலைகள் உட்பட)
31. மொழிபெயர்ப்புச் சேவைகள்.
32. அனைத்து வாகனங்களையும் சர்விஸ் பண்ணுதல்.
33. வாகனங்கள், இயந்திராதிகளைப் புதுப்பித்தல்.
34. கணனி இயந்திரங்கள், அச்சு இயந்திரங்கள் உட்பட அவைசார்ந்த உபகரணங்களைப் புதுப்பித்தல்.
35. நிழற்படப் பிரதியிடும் இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள், டுப்ளோ இயந்திரங்கள், லேமினேட்டின் இயந்திரங்கள், போன்ற அச்சு இயந்திரங்கள் போன்ற உபகரணங்களைப் புதுப்பித்தல்.
36. வாகனங்களை மற்றும் இயந்திராதிகளை வாடகைக்கு வழங்கல்.
37. வீச்சுக்கத்தி, முள்ளுகள், கத்திகள், மண்வெட்டிகள் போன்ற வீதிப்பராமரிப்புக் கருவிகளைப் புதுப்பித்தல்.
38. டிஜிட்டல் அறிவித்தல் பலகைகள், பெனர்கள், கட்டவுட்டுகள், ஸ்டிக்கர் அச்சுச் சேவைகள்.
39. சீருடைகளைத் தைத்தல்.
40. மரங்களை வெட்டுதல்.

நிபந்தனைகள்

01. விண்ணப்பங்களைக் கோரும் இறுதித் தினத்தின் பின்னர், தினமொன்றில் பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச் சீட்டு அல்லது காசோலை மூலம் மேற்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
02. மேற்படி ஒவ்வொரு வகுதிக்கும் தனித்தனியாக விண்ணப்பித்தல் வேண்டுமென்பதுடன் அதற்காக தனித்தனியாகக் கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும்.
03. பதிவுக்காகச் சமர்ப்பிக்கப்படும் வழங்கல்கள் அல்லது சேவைகளிற்காக விண்ணப்பமொன்றுடன், ரூபா 1000.00ஐ செலுத்த வேண்டுமென்பதுடன் அத்தொகையை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை இவ் அலுவலகத்தில் செலுத்திப் பற்றுச் சீட்டொன்றைப் பெற்றுக்கொள்வதன் மூலம் அல்லது 'செயலாளர், மாத்தறை பிரதேச சபை' என்ற பெயருக்குக் காசோலை ஒன்றை அனுப்புவதன் மூலம் கொடுப்பனவை மேற்கொள்ளலாம். காசுக்கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
04. 2023ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பெற்றுள்ள வழங்குநர்களிடமிருந்து, கேள்விகள் கோரப்படுவதுடன், சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் ஆறு(06) மாத காலத்திற்கு மாற்றமடையாத நிலையான தன்மையில் வைத்திருத்தல் வேண்டும். தேவையெனக் கருதப்படும் சந்தர்ப்பங்களில், பதிவு செய்யப்பெறாத ஏனைய வழங்குநர்களிடமிருந்தும் பண்டங்கள் மற்றும் சேவைகளிற்காக கேள்விகளைக் கோரும் உரிமை பிரதேச சபைக்கு உரித்தாகும்.
05. இதற்காக சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
06. விண்ணப்பங்கள் கோரப்பட்டதும் கேள்விகளைச் சமர்ப்பிக்கத் தவறும் மற்றும் தருவித்தற் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டதும் பண்டங்களை வழங்குவதற்குத்தவறும் வழங்குநர்களினதும், உரிய தராதரத்தின் பிரகாரம் பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்காத வழங்குநர்களினதும் பதிவு இரத்துச்செய்யப்பட்டு பெயர்கள் அபகீர்த்தியானோர் பட்டியல் படுத்தப்படுவர்.

மாத்தறை பிரதேச சபையில் பதிவு செய்து கொள்ளும் வழங்குநர்களிற்கான தகைமைகள்:-

1. கூட்டுத்தாபனமொன்றெனின், அதனை நிரூபிப்பபதற்கான சான்றிதழ்.
2. தனிநபர் வியாபாரமொன்றெனின், பதிவுச் சான்றிதழ்
3. கம்பனியொன்றெனின் கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்யப்பெற்ற சான்றிதழ்
4. இதற்கு முன்னர் அரச நிறுவனங்களிற்கு பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்கி இருப்பின் அதனை என்பிப்பதற்கான ஆவணங்கள் அனுப்பப்படல் வேண்டும்.
5. வாகனங்களைப் புதுப்பித்தல் தொடர்பாக தென் மாகாண மோட்டார் கராஜ் ஒன்றாக இருத்தல் விஷேட தகைமையாகக் கணிக்கப்படும்.
6. பொறுப்புக்கூறும் காலம் ஒன்று இருப்பின், பண்டங்கள் மற்றும் சேவைகளிற்கான பொறுப்புக் கூறும் காலம் குறிப்பிடப்படல் வேண்டும்.
7. ஏனைய விஷேட தகைமைகள் ஏதும் இருப்பின் அவற்றைக் குறிப்பிடவும்.

எச்.கே. விமல் பிரியஜனக
தலைவர்,
மாத்தறை பிரதேச சபை

2022 ஒக்டோபர் 06ஆம் திகதி
மாத்தறை பிரதேச சபை அலுவலகத்தில்

வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்

வாழைச்சேனை மீன்பிடி துறைமுகத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்ட மணல் விற்பனைக்கான மீண்டும் விலைமனுக்கோரல்

CFHC/PD/SAND/HAR/2022/10(I-IX)

Valachchenai - IX-II

வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகத்தில் 2022.10.20 அன்று மணல் அகழ்வு மற்றும் விற்பனைக்கான முத்திரையிடப்பட்ட விலைகள் மாலை 02.00 மணி வரை அழைக்கப்படும். இது தொடர்பான அனைத்து விபரங்களையும் கூட்டுத்தாபனம் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் (www.cfhc.gov.lk) இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்
வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்
எண் 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை
கொழும்பு 15

கேள்விக்கான அழைப்பு

சுகாதார சேவைத் திணைக்களம்

மேல் மாகாணம்

அழுக்குத் துணிகளை சலவை செய்தல் - 2023

மேல் மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்திற்கு சொந்தமான கம்பஹா மாவட்டத்தில் வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய மருத்துவ நிலையங்களுக்கு 2023ஆம் ஆண்டிற்கு அழுக்குத் துணிகளை சலவை செய்தல் பற்றிய அனுபவம் தகைமை கொண்ட ஆர்வமுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர், கம்பஹாவினால் கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

உருப்படி	கேள்வி தொடர் இலக்கம்
அழுக்குத்துணி சலவை செய்தல்	01

01	சேவை எதிர்பார்க்கும் கால எல்லை	2023.01.01 முதல் 2023.12.31 வரை		
02	கேள்வி ஆவணங்களுக்கான கட்டணம்	**வைத்தியசாலையின் பெயர்**	**கேள்விப் பிணை**	**சொத்து சான்றிதழின் பெறுமதி**
		கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலை	100,000.00	500,000.00
		வத்துபிட்டிவல தள வைத்தியசாலை - 1ம் பகுதி	25,000.00	200,000.00
		வத்துபிட்டிவல தள வைத்தியசாலை - 11ம் பகுதி	75,000.00	200,000.00
		மினுவங்கொட தள வைத்தியசாலை	10,000.00	100,000.00
		மீரிகம தள வைத்தியசாலை	50,000.00	100,000.00
		கிரிபத்கொட தள வைத்தியசாலை	5,000.00	100,000.00
		தொம்பே பிரதேச வைத்தியசாலை	5,000.00	100,000.00
		திவுலபிட்டிய பிரதேச வைத்தியசாலை	10,000.00	100,000.00
		ரதாவான பிரதேச வைத்தியசாலை	10,000.00	75,000.00
		ஜா-எல பிரதேச வைத்தியசாலை	5,000.00	75,000.00
		பமுனுகம பிரதேச வைத்தியசாலை	10,000.00	75,000.00
		அகரகம பிரதேச வைத்தியசாலை	5,000.00	75,000.00
		பியகம பிரதேச வைத்தியசாலை	10,000.00	50,000.00
		உடுபில பிரதேச வைத்தியசாலை	5,000.00	50,000.00
		மல்வத்து ஹிரிபிடிய பிரதேச வைத்தியசாலை	5,000.00	50,000.00
03	கேள்வி ஆவணங்கள் விநியோகிக்கும் மற்றும் முடிவுறுத்தும் திகதி மற்றும் நேரம்	2022.10.06 முதல் 2022.10.25 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை		
04	பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி மற்றும் நேரம்	2022.10.26 மு.ப. 10.00 அல்லது அதற்கு முன் ● தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படாது நிராகரிக்கப்படும்.		
05	கேள்விகள் திறக்கப்படும் நேரம்	2022.10.26 மு.ப. 10.00 இற்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் ● கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர்களுக்கு அல்லது அவர்களது எழுத்துமூல அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்		
06	கேள்விப் பிணை	கேள்விப் பிணையொன்றை கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடையும் திகதி முதல் 90 நாட்கள் செல்லுபடியாகுமாறு இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளரின் பெயரில் பெற்றுக்கொண்டு சமர்பித்தல் வேண்டும்.		
07	பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் சமர்ப்பிக்கக் கூடிய முறை	பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் பணிமனை, கச்சேரி கட்டிடத்தொகுதி, கம்பஹா என்ற முகவரிக்கு 2022.10.26 மு.ப. 10.00இற்கு முன்பு பதிவுத் தபாலில் கிடைக்குமாறு அல்லது பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கொண்டுவந்து உள்ளிடுவதன் மூலம் மேற்கொள்ளலாம்		
08	கேள்விகள் உறைகளில் உள்ளிடல் மற்றும் பொறியிடல்	கேள்விப் பத்திரங்களை சரியாகப் பூர்த்தி செய்து மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென குறிப்பிட்டு வேறு வேறாக உறைகளில் இட்டு பொறியிடல் வேண்டும் அத்துடன் சகல உறைகளிலும் இடது பக்க மேல் மூலையில் கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கும் வைத்தியசாலை மற்றும் 'அழுக்குத் துணிகளைக் கழுவுதல்' என்று குறிப்பிடுதல் வேண்டும்.		

- ❖ கேள்விகள் வழங்கும் அல்லது இரத்துச் செய்யும் இறுதித் தீர்மானம் பெறுகைக் குழுவிற்கு உரியது.
- ❖ கேள்விகளுடன் சம்பந்தப்பட்ட மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நேரில் அல்லது இலக்கம் 033-2222874 என்ற தொலைபேசி மூலம் விசாரிக்கலாம்.
- ❖ கேள்விப் பத்திரங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். (2022.10.06 முதல் 2022.10.25 மு.ப. 9.00 முதல் மு.ப. 11.00 வரை)

தலைவர், பெறுகைக் குழு
பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை,
கச்சேரி கட்டிடத் தொகுதி, கம்பஹா.

கேள்விகளிற்கான அழைப்பு

மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்

சமைத்த உணவு வழங்கல்/ அழுக்கடைந்த துணிகளைத் துவைத்தல் – 2023

மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு உரித்தான, கண்டி, மாத்தளை, நுவரெலியா போன்ற மாவட்ட வைத்தியசாலைகளிற்கு 2023ஆம் ஆண்டில் சமைத்த உணவு வழங்கல் மற்றும் அழுக்கடைந்த துணிகளைத் துவைப்பதற்காக தேசிய போட்டி ரீதியிலான முறைமையின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.

02. அனுபவமும் தகைமையும் பெற்றுள்ள அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாத ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் இதற்காக அழைக்கப்படுகின்றனர்.

03. 2023ஆம் ஆண்டில் சமைத்த உணவு வழங்கல் மற்றும் அழுக்கடைந்த துணிகளைத் துவைத்தல்களிற்காக, 2022.10.06 முதல் 2022.10.26 வரை பின்வரும் அட்டவணையின் நிரல் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களில் இதற்கான கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

அட்டவணை

நிரல் 1	நிரல் 02	மேற்கொள்ளப்படும் கருமம்
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை - மாத்தளை தொ.பே.இல: 0662222326	மாத்தளை மாவட்டத்திற்கான வைத்தியசாலை	சமைத்த உணவு/ அழுக்குத் துணிகள்
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை - கண்டி தொ.பே. இல: 081-2232456	கண்டி மாவட்டத்திற்கான வைத்தியசாலை (திகண புனர்வாழ்வு வைத்தியசாலை தவிர்ந்த)	சமைத்த உணவு/ அழுக்குத் துணிகள்
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை - நுவரெலியா தொ.பே. இல: 052-2234482	நுவரெலியா மாவட்டத்திற்கான வைத்தியசாலை	சமைத்த உணவு மாத்திரம்
மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் தொ.பே. இல. 081-2222856	திகன புனர்வாழ்வு வைத்தியசாலை	சமைத்த உணவு/ அழுக்குத் துணிகள்

04. இதற்கான மேலதிக விபரங்களை கண்டி, சங்கராஜ மாவத்தை த.பெ. 163 இலுள்ள மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கணக்காளரிடம் மற்றும் உரித்தான மாவட்ட அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

05. மீளளிக்கப்படாத படிவக் கட்டணமாக சமைத்த உணவுகளிற்காக ரூபா 1500.00 உம் அழுக்குத்துணிகளைத் துவைப்பதற்காக ரூபா 500.00 இற்கான தொகையை உரித்தான பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச் சீட்டை அச் சுகாதார சேவைகள் அலுவலகங்களில் சமர்ப்பித்து மேற்படி, வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை இதற்கான கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

06. கேள்வி ஆவணங்களுடன் வழங்கப்படும் அட்டவணை நிரல் 1 இல் குறிப்பிடப்படும் கேள்விப் பிணைமொன்றைக் காசாகச் செலுத்துதல் வேண்டுமென்பதுடன், அதனை உரித்தான பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக சிறாப்பரிடம் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச் சீட்டின் உறுதிப் படுத்தப்பட்ட பிரதியொன்று கேள்விகளுடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

07. சமைத்த உணவுக்காக கேள்வி ஆவணங்களுடன் வழங்கப்படும் அட்டவணை இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒவ்வொறு கேள்வியுடனும் உரிய பெறுமானத்திற்கான மதிப்பீட்டுச் சான்றிதலொன்று, தாம் வசிக்கும் அதிகாரப் பிரிவின் பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்டு கேள்விகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

08. உரியவாறு பூரணப்படுத்தி முத்திரையிடப்பட்ட கேள்விகள் 2022.10.27 அன்று மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் அட்டவணையின் இல. 01 நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகத்திற்குப் பதிவுத் தபாலில் அல்லது அப்பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிற் சேர்த்தல் முடியும்.

09. கேள்விப்படிவங்கள் உரியவாறு பூரணப்படுத்தப்பட்டு மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி தனித்தனி உறைகளில் சேர்த்து முத்திரையிட்டு மீண்டும் அவ்விரு உறைகளையும் ஒருறையில் சேர்த்து முத்திரையிட்டு அனைத்து உறைகளினதும் இடது பக்க மேல் மூலையில், கேள்விகளைச் சமர்ப்பிக்கும் மாவட்ட வைத்தியசாலை மற்றும் உருப்படி (சமைத்த உணவு/ அழுக்குத் துணி) எனக்குறிப்பிடுதல் வேண்டும்.

10. 2022.10.27 அன்று மு.ப. 10.00 இற்கு கேள்விகள் மூடப்பட்டு உடனடியாக அவை திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

11. தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

12. அனைத்துக் கேள்விகளும் தொழில்நுடட்ப மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுவதுடன், பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக அமையும்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக்குழு,
2022 ஒக்டோபர் 6ம் தகிதி

மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்
இல. 163, சங்கராஜ மாவத்தை
கண்டி.

டி20 உலகக் கிண்ணத்தில் ரஞ்சன் மடுகல்ல, தர்மசேன

அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள டி20 உலகக் கிண்ணப் போட்டிக்கான நடுவர்கள் மற்றும் மத்தியஸ்தர்களின் பெயர்களை சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் வெளியிட்டுள்ளது.

இந்தப் போட்டிகளுக்கான 16 நடுவர்கள் மற்றும் 4 மத்தியஸ்தர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளதோடு அதில் இலங்கையைச் சேர்ந்த நடுவர் குமார் தர்மசேன மற்றும் போட்டி மத்தியஸ்தர் ரஞ்சன் மடுகல்ல இடம்பெற்றுள்ளனர்.

இந்த நடுவர்கள் மற்றும் போட்டி மத்தியஸ்தர்கள் தொடர்பில் கூறும் ஐ.சி.சி, "போட்டித் தொடர் முழுவதும் 16 நடுவர்கள் போட்டிகளில் நடுவர்களாக பணியாற்ற தயாராகி உள்ளதோடு 2021 உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் நடுவராக இருந்த குமார் தர்மசேன, ரிச்சர்ட் கெட்டில்பிரோ மற்றும் மரைஸ் எரஸ்முஸ் ஆகிய நடுவர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளனர்" என தெரிவித்தது.

சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலின் போட்டி மத்தியஸ்தர் சங்கத்தின் தலைவர் ரஞ்சன் மடுகல்ல இம்முறை போட்டியில் மத்தியஸ்தராக செயற்படவிருப்பதோடு அவர் தவிர ஏனைய மத்தியஸ்தர்களாக அன்ட்ரூ பைக்ரொப்ட், கிறிஸ்டோபர் பிரோட் மற்றும் டேவிட் பூன் செயற்படவுள்ளனர்.

டி20 உலகக் கிண்ணத்தின் ஆரம்பப் போட்டி வரும் ஒக்டோபர் 16 ஆம் திகதி நடைபெறவுள்ளதோடு அந்தப் போட்டியின் நடுவர்களாக ஜோல் வில்சன் மற்றும் ரொட்னி டக்கர் செயற்படவுள்ளனர். அந்த போட்டியின் தொலைக்காட்சி நடுவராக போல் ரைபல் செயற்படவுள்ளார்.

"இந்த நடுவர்கள் ஆரம்பச் சுற்று மற்றும் சுப்பர் 12 சுற்று போட்டிகளுக்காக பெயரிடப்பட்டிருப்பதோடு அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகளுக்கான நடுவர்கள் போட்டியின் இடையே பெயரிடப்படவுள்ளனர்" என்று ஐ.சி.சி வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

மகளிர் டி20 உலகக் கிண்ணம்; போட்டி அட்டவணை வெளியீடு

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள மகளிர் டி20 உலகக் கிண்ணத்திற்கான போட்டி அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

மொத்தம் 10 அணிகள் பங்கெடுக்கும் இந்த மகளிர் டி20 உலகக் கிண்ணத் தொடர் தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ளது. இந்த தொடருக்கு 8 அணிகள் நேரடித் தகுதி பெற்ற நிலையில், பங்களாதேஷ் மற்றும் அயர்லாந்து ஆகிய நாடுகள் தகுதிகாண் போட்டிகள் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தத் தொடரின் முதல் போட்டி 2023ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி இலங்கை மற்றும் தென்னாபிரிக்க மகளிர் அணிகள் இடையில் நடைபெறுகிறது.

அதேநேரம் இந்த தொடரில் பங்கெடுக்கும் அணிகள் இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு மோதல்கள் நடைபெறவுள்ளதோடு குழு 1இல் இலங்கை, பங்களாதேஷ், நியூசிலாந்து, தென்னாபிரிக்கா மற்றும் ஐந்து தடவை உலகக் கிண்ணம் வென்ற தொடரின் நடப்புச் சம்பியனான அவுஸ்திரேலியா இடம்பெற்றுள்ளன.

அதேவேளை குழு 2இல் அயர்லாந்து, இந்தியா, பாகிஸ்தான், மேற்கிந்திய தீவுகள் மற்றும் இங்கிலாந்து அணிகள் இடம்பெற்றுள்ளன.

உலகக் கிண்ணத் தொடரின் குழு நிலைப் போட்டிகள் 2023ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதோடு, குழுநிலைப் போட்டிகளில் ஒவ்வொரு குழுவிலும் புள்ளிகள் அடிப்படையில் முதல் இரண்டு இடங்களைப் பெற்ற அணிகள் தொடரின் அரையிறுதிப் போட்டிகளுக்கும், இறுதிப் போட்டியிலும் ஆடும் சந்தர்ப்பத்தினை பெறவுள்ளன. தொடரின் இறுதிப் போட்டி 2023ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதம் 26ஆம் திகதி நடைபெறவுள்ளது.

சாய்ந்தமருது வைத்தியசாலை அணியினருக்கு இலகு வெற்றி

மாளிகைக்காடு குறூப் நிருபர்

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை அணிக்கும் கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி பழைய மாணவர் அணியான ஸஹ்ரியன்ஸ் 90 அணிக்குமிடையிலான சிநேக பூர்வ கிரிக்கெட் போட்டியில் சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை அணி 9 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

10 ஓவர் மட்டுப்படுத்தப்பட்ட இந்தப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை (02) சாய்ந்தமருது பொலிபோரியன் மைதானத்தில் இடம்பெற்றது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஸஹ்ரியன்ஸ் 90 அணி 10 ஓவர் நிறைவில் 8 விக்கெட் இழப்பிற்கு 48 ஓட்டங்களை பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை அணி 4.2 ஓவரில் 1 விக்கெட் இழப்புக்கு 52 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது.

விநாயகபுரம் மின்னொளி விளையாட்டு கழகத்தின் 44ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்திய இரவு நேர கிரிக்கெட் தொடரில் சம்பியனான பி.பி.பி விளையாட்டுக் கழகத்தை படத்தில் காணலாம். (படம்: அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

கால்பந்து நடுவர்களுக்கு புத்தளத்தில் செயலமர்வு

புத்தளம் தினகரன் நிருபர்

புத்தளம் நகரபிதாவும், புத்தளம் கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவருமான எம்.எஸ்.எம். ரபீக்கின் ஏற்பாட்டில் புதிய கால்பந்தாட்ட நடுவர்களை உருவாக்குவதற்கான ஆரம்ப செயலமர்வு நகரபிதாவின் தலைமையில் கடந்த திங்கட்கிழமை (03) புத்தளம் மாவட்ட விளையாட்டரங்கில் நடைபெற்றது.

சம்மேளனத்தின் செயலாளர் கலாநிதி எஸ்.ஆர்.எம். ஆசாத் செயலமர்வின் நோக்கம் பற்றிய தெளிவுகளை பயிலுநர்களுக்கு வழங்கினார். இந்தச் செயலமர்வில் தூரப்பிரதேசங்களிலிருந்தும் சிலர் வருகை தந்திருந்தனர்.

கால்பந்தாட்ட சம்மேளனத்தின் பொருளாளரும், சர்வதேச கால்பந்தாட்ட நடுவரும், நகர சபையின் சிரேஷ்ட உத்தியோகத்தருமான எம்.எஸ். ஜிப்ரி இதற்கான பாட வகுப்புக்களை வழிநடாத்துகிறார்.

கால்பந்து நிர்வாகத்தின் குழப்பத்தால்

இளையோர் ஆசிய கிண்ண கால்பந்து போட்டி வாய்ப்பை இழந்தது இலங்கை

இலங்கை கால்பந்து நிர்வாகத்தில் ஏற்பட்டிருக்கும் குழப்பத்திற்கு மத்தியில் இம்முறை உஸ்பெகிஸ்தானில் நடைபெறவுள்ள 17 வயதுக்கு உட்பட்ட ஆசிய போட்டிகளில் இலங்கை கால்பந்து அணி பங்கேற்கும் வாய்ப்பு நழுவிப் போயுள்ளது.

இந்த போட்டிக்காக 23 வீரர்கள் மற்றும் 5 அதிகாரிகள் பங்கேற்கவிருந்ததோடு, அதற்கான கடவுச்சீட்டு வாங்கப்படாததன் காரணமாக இந்தப் பயணம் ரத்தாகியுள்ளது.

இளம் வீரர்களுக்கான இந்த சிறந்த வாய்ப்பு இழக்கப்பட்டதை அடுத்து போட்டியில் பங்கேற்காததன் காரணமாக 70 இலட்சம் ரூபா அபராதத்தை இலங்கை செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

2023 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள 17 வயதுக்கு உட்பட்ட ஆசியக் கிண்ணத் தொடருக்கான தகுதிகாண் போட்டிகளே உஸ்பெகிஸ்தானில் நடைபெறுகிறது. இதில் ஜே குழுவில் இடம்பெறும் இலங்கை இளையோர்கள் நேற்று புதன்கிழமை தென் கொரியாவை எதிர்கொள்ளவிருந்ததோடு தொடர்ந்து உஸ்பெகிஸ்தான் மற்றும் புரூனாய் அணிகளுக்கு இடையிலான போட்டிகள் முறையே நாளை (07) மற்றும் வரும் ஒக்டோபர் 09ஆம் திகதிகளில் நடைபெறவிருந்தது.

இந்தப் போட்டிகளில் பங்கேற்பதற்காக கடந்த திங்கட்கிழமை (03) இலங்கை இளையோர் குழாம் உஸ்பெகிஸ்தானை நோக்கி பயணிக்கவிருந்தது.

இதேவேளை இலங்கை கால்பந்து சம்மேளத்தின் தேர்தலை நடத்த முடியுமான வகையில் தற்போது வெளியிப்பட்டிருக்கும் வர்த்தமானி அறிவித்தலில் திருத்தம் மேற்கொள்வதற்கு விளையாட்டு அமைச்சு கடந்த செவ்வாய்க்கிழமை (04) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன் ஒப்புதல் வழங்கியுள்ளது.

அது அந்த சம்மேளனத்தின் பதவிக் காலத்தை நீடிப்பதற்கான முடிவை ரத்துச் செய்து விளையாட்டு அமைச்சு வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலை செயலிழக்கச் செய்யுமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன் அந்த சம்மேளனத்தின் தலைவர் மற்றும் செயலாளர் தாக்கல் செய்த ரீட் மனு விசாரணைக்கு கொண்டு வரப்பட்டபோதே விளையாட்டு அமைச்சு இந்த ஒப்புதலை வழங்கியுள்ளது.

இந்த மனு மீதான விசாரணையை மீண்டும் வரும் ஒக்டோபர் 11ஆம் திகதி எடுத்துக்கொள்ள உத்தரவிட்ட உச்ச நீதிமன்றம் அன்றைய தினத்திலேயே இந்த செயற்பாட்டின் முன்னேற்றத்தை அறிவிக்கும்படி இரு தரப்புக்கும் உத்தரவிட்டது.

தென்னாபிரிக்கா ஆறுதல் வெற்றி

ரில்லி ரொசோவின் அபார சதத்துடன் இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது மற்றும் கடைசி டி20 போட்டியில் தென்னாபிரிக்க அணி ஆறுதல் வெற்றியை பதிவு செய்தது.

ஏற்கனவே முதல் இரண்டு போட்டிகளிலும் வென்று இந்தியா தொடரை கைப்பற்றிய நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற 3ஆவது டி20இல் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட தென்னாபிரிக்க அணிக்கு ரொசோவ் 48 பந்துகளில் ஆட்டமிழக்காது 100 ஓட்டங்களை பெற்றார். அவர் குவன்டம் டி கொக்குடன் (68) இணைந்து இரண்டாவது விக்கெட்டுக்கு 90 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டார். இதன்மூலம் தென்னாபிரிக்க அணி 20 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட்டுகளை இழந்து 227 ஓட்டங்களை குவித்தது.

இது அவருக்கு முதல் சர்வதேச டி20 சதம் ஆகும். மொத்தம் அவர் 8 சிக்ஸர்கள் மற்றும் 7 பவுண்டரிகளை விரட்டினார். டி20 கிரிக்கெட்டில் சதம் விளாசிய 5ஆவது தென்னாபிரிக்க வீரர் என்ற சாதனையை ரோஸோவ் படைத்தார்.

டி கொக் 68 ஓட்டங்கள் விளாசியதன் மூலம், இந்திய அணிக்கு எதிராக அதிக அரைசதங்கள் (4) அடித்த வீரர்களின் பட்டியலில் இணைந்தார். அதேபோன்று 2000 ஓட்டங்கள் மைல்கல்லை கடந்த 2ஆவது தென்னாபிரிக்க வீரர் என்ற சாதனையையும் அவர் படைத்தார். தொடர்ந்து பதிலெடுத்தாட வந்த இந்திய அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்த நிலையில் 18.3 ஓவர்களில் 178 ஓட்டங்களுக்கு சுருண்டது.

பூம்ராவுக்கு பதில் ஷமிக்கு வாய்ப்பு

டி20 உலகக் கிண்ணத்தில் உபாதை காரணமாக விலகிய இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜெஸ்பிரிட் பூம்ராவின் இடத்திற்கான தேர்வில் மொஹமட் ஷமி முன்னணியில் இருப்பதாக அணியின் பயிற்சியாளர் ராகுல் டிராவிட் மற்றும் அணித் தலைவர் ரொஹித் ஷர்மா சூசகமாக கூறியுள்ளனர்.

ஷமி கடைசியாக ஐக்கிய அரபு இராச்சியத்தில் கடந்த ஆண்டு நடந்த டி20 உலகக் கிண்ணப் போட்டியிலேயே டி20 சர்வதேச போட்டியில் ஆடினார். அவுஸ்திரேலியாவுக்கு எதிராக அண்மையில் நடந்த டி20 போட்டியில் அவர் அணியில் இடம்பெற்ற போதும் கொரோனாத் தொற்று காரணமாக விளையாட முடியாமல் போனது. தற்போது அவர் பங்களூருவில் உடற்தகுதி பயிற்சியில் ஈடுபட்டுள்ளார்.

டி20 உலகக் கிண்ணத்திற்கான இந்திய அணியின் மேலதிக வீரர்களில் ஷமியுடன் தீபக் சஹர் வேகப்பந்து வீச்சாளர்களாக உள்ளனர். எனினும் விரும்பினால் இந்த இருவருக்கும் அப்பாலும் வீரர் ஒருவரை தேர்வு செய்ய வாய்ப்பு இருப்பதாக தேர்வுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

"மொஹமட் ஷமி தொடர்பான மருத்துவ அறிக்கை எங்களுக்கு கிடைத்தவுடன் தான் பூம்ராவுக்கு பதில் அவர் அணியில் சேர்க்கப்படுவாரா என்பது குறித்து முடிவெடுக்கப்படும். பூம்ராவுக்கு பதில் யார் என்பது குறித்து முடிவெடுக்க ஒக்டோபர் 15ஆம் திகதி வரை காலம் உள்ளது. நாங்கள் எதிர்பார்ப்பதெல்லாம் மாற்று வீரராக வருபவர் நன்றாக பந்து வீச வேண்டும்" என்று ராகுல் டிராவிட் குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஒக்டோபர் மாதம் 6ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.